# பெண்கள் விளையாடினால் என்ன ஆகும்?

டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா
M.A., D.P.E., M.P.Ed., Ph.D.



ராஜ்மோகன் பதிப்பகம்
சென்னை - 600 017

# பெண்கள் விளையாடினால் என்ன ஆகும்?

மூன்று முறை தேசிய விருது பெற்ற நூலாசிரியர்

**டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா**

M.A., M.P.Ed., Ph.D., D.Litt. D.Ed., FUWAI,

வெள்ளிவிழா ஆண்டு 1970-95

ராஜ்மோகன் பதிப்பகம்

8, போலீஸ் குவாட்டர்ஸ் ரோடு,
தி. நகர், சென்னை-600 017.

முதற்பதிப்பு : 1988
இரண்டாம்பதிப்பு : 1996

விலை ரூபாய் 12-00

கிரேஸ் பிரிண்டர்ஸ்
சென்னை-17.

# முன்னுரை

**பெண்கள் விளையாடினால் என்ன ஆகும்?**

இந்தத் தலைப்பை நான் தேர்ந்தெடுத்ததன் காரணம்... இப்படிப்பட்ட கேள்வியைத் தான், மனித இனம் பல நூறு ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது என்பதால் தான். இதற்கான பதிலை ஒருவரிடம் கூறினால் மட்டும் போதுமா? இதனை ஒரு வரியிலேயே கூறிவிட முடியுமா? அதற்காகத்தான், ஒரு புதிய நூலையே உருவாக்கிவிட வேண்டுமென்ற வேட்கையில் எழுதத் தொடங்கினேன்.

பெண்களின் உடல் அமைப்பு மென்மையானதுதான். ஆனால், அதற்குள்ளே அடங்கிக் கிடக்கும் ஆற்றல் அளவிடற்கரியது. ஆண்களை விட சற்றும் அதிகமானது.

எந்த தட்பவெப்ப நிலையிலும், எந்த விதமான வாழ்க்கைச் சிக்கல் மிகுந்த சூழ்நிலையிலும், அசாதாரண பலத்தோடு அனுசரித்துப் போகின்ற ஆற்றல். பெண்களுக்கு கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறது.

மண்ணுலகின் வாழ்க்கை முறைகளில் தான் போட்டியா என்றால், விண்ணுலகப் பயணத்திற்குக் கூட வீராவேசமாக வந்து பெண்கள் நிற்கின்றார்கள்.

இப்படி ஒரு ஏற்றமிகு நிலைமை எப்படி ஏற்படுகிறது?

இந்த ஏற்றமிகு பண்புகளைத் தான் இந்த நூலில் எடுத்துக்காட்ட முயற்சித்திருக்கிறேன்.

சமுதாயத்தின் ஒரு பாதி பெண்கள் என்கிறோம். மனித இனத்தின் மணி மகுடம் என்கிறோம். ஆனால், அவர்கள் விளையாட்டில் மட்டும் ஏன் பங்கு பெறக் கூடாது என்று தடுக்கிறோம்? தடைபோடுகிறோம்? புரியாத பலர், புரிந்ததைப் போலப் பேசுகிற போதுதான், குழப்பங்களே கொப்புளித்துக் கொண்டு வருகின்றன. குழப்பவாதிகள் எல்லோரும் சுயநலவாதிகள் தானே! அந்த அக்ரமக்காரர்களின் அடாவடித்தனத்திற்கு ஆட்பட்ட காலமே, பெண்கள் விளையாட்டுக்களில் பங்கு பெற முடியாத காலமாகப் போய் விட்டிருந்தது.

இன்று காலம் மாறிவிட்டது.

உலக சாதனைகளைத் திருத்தி எழுதவும், மாற்றி அமைக்கவும் கூடிய வல்லமை மிக்கவர்களாக வீராங்கனைகள் விளங்குகின்றார்கள்.

விளையாட்டில் ஈடுபடும் பெண்களுக்கு எதுவும் ஆகி விடுவதில்லையே? ஏன்? எப்படி? எதனால்?

இத்தகைய கேள்விகளுக்குரிய பதிலாகத் தான் இந்தப் புத்தகம் எழுதப் பெற்றிருக்கிறது.

உங்கள் வேகத்தைத் தடை செய்ய நானும் விரும்பவில்லை.

சக்தியுள்ள சமுதாயத்தைப் படைக்க சக்தியுள்ள தாய்மார்களே தேவை. அந்த இலட்சியத்தின் வெளிப்பாடுதான் இந்த நூல்.

பெண்கள் உடற்பயிற்சியிலும், விளையாட்டுக்களிலும் அதிகமாக ஈடுபட வேண்டும் என்ற என் ஆர்வத்தின் முனைப்பு தான் இப்பணியில் என்னை முழுமூச்சாக ஈடுபடச் செய்தது.

இதனை அழகுற அச்சிட்டுத் தந்த கிரேஸ் பிரிண்டர்சுக்கும், ஆக்க உதவிகளைச் செய்து முடித்த R. ஆதாம் சாக்ரட்டீசுக்கும் என் அன்பு கலந்த நன்றி.

எனது விளையாட்டுத் துறை இலக்கிய நூல்களை வாங்கி ஆதரிக்கும் அன்பர்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கங்கள்.

ஞானமலர் இல்லம்
சென்னை - 17.

அன்பன்
எஸ். நவராஜ் செல்லையா.

குறிப்பு :

பெண்களால் வளர்ந்த விளையாட்டுக்களே அதிகம். பெண்கள் ஈடுபடாத விளையாட்டுக்களே இல்லை என்னும் காலம் இது. பெண்கள் வளர்த்த விளையாட்டுக்களில் சீட்டாட்டமும் ஒன்றாகும்.

அந்தப் பெருமைக்குரிய விளையாட்டின் வரலாற்றை இந்த நூலின் இறுதியில் ஒரு பகுதியாகத் தருவதில் மகிழ்ச்சியடைகிறேன். நீங்களும் மகிழ்ச்சி அடைவதற்காக.

# ஆசிரியரின் பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| விளையாட்டுத்துறையில் ஆங்கிலம் தமிழ் அகராதி | 15 | 00 |
| விளையாட்டுக்களின் கதைகள் | 15 | 00 |
| (மத்திய அரசு பரிசு பெற்ற நூல) | | |
| விளையாட்டுக்களின் வழி முறைகளும் வரலாறும் | 11 | 00 |
| (மத்திய அரசு பரிசு பெற்ற நூல்) | | |
| ஒலிம்பிக் பந்தயத்தின் கதை | 5 | 00 |
| (மத்திய அரசு பரிசு பெற்ற நூல்) | | |
| கிரிக்கெட் ஆட்டத்தின் கதை | 4 | 50 |
| விளையாட்டுகளுக்கு பெயர் வந்தது எப்படி ? | 3 | 25 |
| விளையாட்டு உலகில் வீரக் கதைகள் | 3 | 00 |
| வழிகாட்டும் விளையாட்டு வீரர்கள் | 3 | 25 |
| கேரம் விளையாடுவது எப்படி ? | 6 | 00 |
| சதுரங்கம் விளையாடுவது எப்படி ? | 4 | 00 |
| கால்பந்தாட்டம் | 4 | 00 |
| கைப்பந்தாட்டம் | 4 | 00 |
| கூடைப்பந்தாட்டம் | 4 | 00 |
| வளைகோல் பந்தாட்டம் | 4 | 00 |
| கிரிக்கெட் ஆட்டத்தில் கேள்வி பதில் | 4 | 00 |
| பூப்பந்தாட்டம் | 5 | 00 |
| மென்பந்தாட்டம் | 6 | 00 |
| வளையப்பந்தாட்டம் | 2 | 50 |
| விளையாட்டுக்களின் விதிகள் | 14 | 00 |
| நீங்களும் ஒலிம்பிக் வீரராகலாம் | 6 | 00 |
| ஒரு நூறு சிறு விளையாட்டுக்கள் | 9 | 00 |
| கூடி விளையாடும் குழு விளையாட்டுக்கள் | 6 | 50 |
| பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் | 3 | 50 |
| விளையாட்டு விருந்து | 5 | 00 |
| விளையாட்டு விழா நடத்துவது எப்படி ? | 5 | 00 |
| விளையாட்டு அமுதம் | 3 | 50 |
| விளையாட்டு உலகம் | 3 | 50 |
| விளையாட்டுச் சிந்தனைகள் | 3 | 00 |
| விளையாட்டுக்களில் வினாடி வினா விடை | 3 | 50 |

| | | |
|---|---|---|
| விளையாட்டுத் துறையில் சொல்லும் பொருளும் | 4 | 50 |
| விளையாட்டு உலகில் சுவையான சம்பவங்கள் | 5 | 00 |
| வாழ்க்கைப் பந்தயம் | 6 | 00 |
| பாதுகாப்புக் கல்வி | 2 | 50 |
| சிந்தனைச் சுற்றுலா | 4 | 50 |
| தெரிந்தால் சமயத்தில் உதவும் | 5 | 00 |
| விளையாட்டு ஆத்திசூடி | 5 | 50 |
| விளையாட்டுக்களில் விநோதங்கள் | 6 | 00 |
| இந்தியாவில் ஆசிய விளையாட்டுக்கள் | 6 | 50 |
| நீங்களும் மகிழ்ச்சியாக வாழலாம் | 5 | 50 |
| நீங்களும் நோயில்லாமல் வாழலாம் | 5 | 00 |
| அனுபவக் களஞ்சியம் | 7 | 00 |
| 1984ல் ஒலிம்பிக் பந்தயங்கள் | 8 | 25 |
| விளையாட்டுத் துறையில் கலைச்சொல் அகராதி | 10 | 00 |
| உபயோகமுள்ள உடல்நலக் குறிப்புகள் | 7 | 00 |
| Quotations on sports and Games | 7 | 00 |
| General Knowledge in Sports and Games | 4 | 25 |
| How to Break Ties in Sports and Games | 3 | 00 |
| பயன் தரும் யோகாசனப் பயிற்சிகள் | 8 | 00 |
| இந்திய நாட்டுத் தேகப் பயிற்சிகள் | 6 | 00 |
| நீங்களும் உடலழகு பெறலாம் | 5 | 00 |
| நீங்களும் உயரமாக வளரலாம் | 4 | 50 |
| பெண்களும் பேரழகு பெறலாம் | 4 | 00 |
| உடலழகுப் பயிற்சி முறைகள் | 3 | 25 |
| தொந்தியைக் குறைக்க சுலபமான வழிகள் | 5 | 00 |
| நல்ல கதைகள் பாகம் I | 3 | 00 |
| நல்ல கதைகள் பாகம் II | 1 | 50 |
| நல்ல கதைகள் பாகம் III | 1 | 50 |
| கடவுள் கை விடமாட்டார் | 2 | 00 |
| பண்புதரும் அன்புக் கதைகள் | 3 | 00 |
| நல்ல நல்ல கதைப் பாடல்கள் | 3 | 00 |
| நல்ல பாடல்கள் | 1 | 75 |
| செங்கரும்பு | 2 | 00 |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | சந்தேகமும் சந்தோஷமும் | 9 |
| 2. | பெண்களின் போராட்டம் | 12 |
| 3. | எங்கெல்லாம் விளையாட்டோ அங்கெல்லாம்! | 20 |
| 4. | ஆண் பெண் உடல் அமைப்பு | 26 |
| 5. | பெண்களும் விளையாட்டும் | 31 |
| 6. | ஒலிம்பிக் போட்டிகளில் பெண்கள் | 44 |
| 7. | ஓட்டியும் எட்டியும் | 51 |
| 8. | பெண்களும் மாரதான் ஓட்டமும் | 58 |
| 9. | ஆண்கள் பின்வாங்கும் சாதனைகள் | 66 |
| 10. | அந்த நாள் முதல்....! | 72 |
| 11. | என்ன ஆகும்? | 79 |
| 12. | நன்மை என்பதே உண்மை | 84 |
| 13. | பெண்கள் ஆண்களை விட அதிகநாள் வாழ்வது ஏன்? | 92 |
| | சீட்டாட்டத்தின் கதை | 95 to 146 |

# 1. சந்தேகமும் சந்தோஷமும்!

பெண்கள் விளையாடினால் என்ன ஆகும்?

"பிரளயமே வந்து விடும்.

பெண்மையே போய் விடும்!

மென்மை மாறி அழிந்துவிடும்!

ஆண்மை தலைதூக்கிக் கொள்ளும்!

தசைகள் முறுக்கேறித் தடித்தனம் வந்துவிடும்.

நாலுபேர் பார்த்து நகைக்கின்ற வகையில் அவமானம் நேரிடும்! ஆண்களுக்கு எப்பொழுதும் சரிநிகர் சமானமாகி விடுவார்கள்.

வீட்டிலே வேலை செய்தால் போதாதா? வெளியிலும் வந்து விளையாட்டு என்ன வேண்டிக் கிடக்கிறது?

வர வர இந்தப் பெண்களின் போக்கு புரியாத புதிராகவும் இருக்கிறது. எதிரிகளாக வந்து எல்லாத்

துறையிலும் போட்டியிட்டு இழிவு படுத்துவதே தொழிலாகப் போய் விடுகிறது.''

இந்தத் தலைப்பைக் கேட்டவுடனேயே மேற் கண்டவாறு முணுமுணுப்பவர்களே அதிகம். இந்த 'அதிகப்' பட்டியலில் ஆண்கள் மட்டும்தான் இருப்பார்களா என்றால்...பெண்களும் நிறைய பேர் கள் இருக்கிறார்கள்.

பெண்கள் விளையாட்டுக்கு ஆதரவு என்பதை விட எதிர்ப்புகளே அதிகம். இது இன்று நேற் றல்ல...ஆண்டாண்டு காலமாகவே தொடங்கி தொடர்ந்து வருகின்றது.

ஆதிகால வரலாற்றில் தாய்க்குலமே தலைமை தாங்கி வேட்டைக்குச் செல்ல முன் சென்று, ஆண் களை வழி நடத்தி வந்ததாக குறிப்பிடப்பட்டிருக் கிறது. ஆனால், அடுத்தடுத்து வந்த வரலாற்றுக் குறிப்புக்கள், ஆண்களுக்கு அடங்கிப் போகின்ற, அடங்கி வாழ்கின்ற அளவில் ஒடுங்கிப் போன தையே சுட்டிக் காட்டிச் செல்கின்றன.


வீட்டுக்குள்ளே வாழ்கின்ற வாழ்க்கையை, ஒரு வட்டத்திற்குள்ளே சுற்றி வருகின்ற வாழ்க்கையை ஒரு ரங்கராட்டினமாக சுற்றி வருகின்ற வாழ்க்கையை எல்லா நாடுகளிலும் வாழ்கின்ற பெண் மணிகள் ஏற்றுக் கொண்டார்கள்.

பொதுவாக விளையாட்டுக்கள் என்றால் அவை ஆண்களுக்குத் தான் உரியது. பெண்கள்

ஏதோ ஒரு சில விளையாட்டை அவர்களுக் குள்ளேயே ஆடினால் போதுமானது என்ற அளவிலே உலகெங்கும் ஒரே மாதிரியான தன்மை யிலே கருத்துக்கள் வலம் வந்து கொண்டிருந்தன.

வீட்டிற்குள்ளே விரும்பினால் விளையாடலாம். வெளியில் வந்து விளையாடக் கூடாது. என்று சமுதாய அடிப்படை மரபு விதிகள், பெண்களை சுற்றிச் சூழ்ந்து முற்றுகையிட்டுக் கொண்டன.

ஆமாம். சந்தேகம் சூழ்ந்து கொண்டது. சந்தோஷம் தாழ்ந்து நின்றது.



# 2. பெண்களின் போராட்டம்

உலகம் புகழும் பழம்பெரு கிரேக்க நாட்டின் ஒலிம்பிக் விளையாட்டுக்களில், கிரேக்க நாட்டு ஆண்கள் மட்டுமே பங்கு பெறலாம் என்ற ஒரு முக்கியமான விதி இருந்தது. அதைவிட கொடுமை யான விதி ஒன்று. பெண்கள் பந்தயங்களில் கலந்து கொள்ளக் கூடாது என்றிருந்தால் மட்டும் பரவா யில்லை. ஆனால், பந்தயங்களை பார்க்கவே கூடாது. மீறி பார்ப்பவர்கள், பார்க்க முயல்பவர்கள் மரண தண்டனைக்குள்ளாவார்கள்.

பந்தயங்ளை பார்த்துவிட்டுப் பரிதாபமாக மலை உச்சியிலே இருந்து தூக்கியெறியப்பட்டு உயிர் நீத்தத் தியாகப் பெண்மணிகளும் இருக்கத் தான் இருந்தனர்.

1982ம் ஆண்டு காலத்தில், 'பெண்கள் வெளியேவந்து விளையாடக்கூடாது.அவர்கள் ஆடு வதை ஆண்களோ பார்க்கக்கூடாது. அவர்களைக் படம் எடுக்க புகைப்படக்காரர்கள்கூட போக கூடாது' என்ற கொடுமையான-கடுமையானசட்டம்

பாகிஸ்தானில் பிறக்கப்பட்டிருந்ததை நீங்களெல்லாம் அறிவீர்கள்.

ஆனால், கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே, கிரேக்க நாட்டு ஒலிம்பிக் பந்தயங்களைப் பார்ப்பதற்காக ஒரு பெண்மணி' பந்தய அரங்கிற்குள் சென்று விட்டாள். ஆண்வேடத்திலே தலைப்பாகை அணிந்து சென்று ஆனந்தமாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த பெண்மணி. தன்னை மறந்து சந்தோஷக் கூச்சலிட்டுத் துள்ளினாள். விளைவு—தலைப்பாகை கீழே விழுந்து விட்டது.

முடிவு: பெண் ஒருத்தி பந்தயம் பார்க்க வந்து விட்டாள் என்ற சேதி எல்லோரிடையிலும் பரவ, ஆட்ட அதிகாரிகள் ஓடிவந்து அவளைக் கைது செய்ய, கைதியானாள். குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டாள். குற்றம் சாட்டப்பட்டாள், பிறகென்ன? மரண தண்டனைதான். ஆனால் அவள் என்ன சொன்னாள்? எவ்வாறு தப்பித்துக் கொண்டாள்? பெண்களுக்கு சுதந்திரம் எப்படி வந்தது?

ஆண்களே நிறைந்திருக்கும் அரங்கிற்குள் நிர்வாணமாகப் பங்கு பெறும் இளைஞர்களுக்கிடையே, பார்வையாளராக ஒரு பெண் வந்து விட்டாள் என்றால் பொறுப்பார்களா?

விளையாட்டுத் திடலை மறைத்திருக்கும் மறைப்பினை விலக்கி மறைந்திருந்து பார்ப்பது,

மரத்தின் மீது ஏறி அமர்ந்து திருட்டுத் தனமாக பந்தயங்களைப் பெண்கள் பார்ப்பது மரண தண்டனைக்குரிய குற்றம் என்பது நாட்டின் சட்டம். அப்படி இருக்கும்பொழுது எப்படி விடுவார்கள் அந்த மங்கையை?

குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டாள். கொடுமையான தண்டனையை எதிர்பார்த்துக் காத்திருப்பவள் தன்னைப்பற்றிய விளக்கத்தைக்கூற அனுமதிக்குமாறு வேண்டிக் கொண்டாள்.

"எனது மகன் **பெசிடோரியஸ்** என்பவன் இன்று இங்கு மல்யுத்தப் போட்டியில் கலந்து கொண்டான். அவனது தந்தை தான் அவனுக்குப் பயிற்சியளித்து வந்தார். இடையிலே அவர் அகால மரணமடைந்து விட்டதால், நான் தான் பயிற்சியைத் தொடர்ந்து என் மகனுக்கு அளித்து வந்தேன்.

போட்டியின்போது என்மகன் எப்படி சண்டை செய்கிறான் என்று பார்க்க எனக்கு ஆர்வம் இருக்காதா? என் உயிரே போனாலும் பரவாயில்லை. வெற்றி பெறப் போராடும் என் மகனை இந்தக் களத்திலே பார்க்க வேண்டும் என்ற வேகத்தினால் இந்த நாட்டுச் சட்டத்தையும் மறந்து விட்டேன். தாய் தன் மகனைப் பார்க்க வந்தது தவறு என்றால், உங்கள் மரண தண்டனை தான் அதற்கு உகந்த பரிகாரம் என்றால், நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்."

ஒலிம்பிக்போட்டிகள் என்பது மத சம்பந்தமான நிகழ்ச்சிகள் என்றாலும், அந்த புனிதமான நிகழ்ச்சி களில் பெண்கள் பார்க்கவோ அல்லது கலந்து கொள்ளவோ தவிர்க்கப்பட்டிருந்தனர். அது அந்த நாட்டுச் சட்டம்.

**பெரினிஸ்** என்ற அந்தத் தாயின் வாக்கு மூலத் தைக்கேட்ட அதிகாரிகள் அனைவரும், இந்த நாட்டுப் பெண்களுக்கும் இப்படி ஓர் ஏக்கம் இருக் கிறதா, ஊக்கம் இருக்கிறதா என்று எண்ணத் தலைப்பட்டனர். முடிவு—பெரினிஸ் விடுதலை யடைந்தாள். பிரபலமான பந்தயங்களில் இருந்த கடுமையான சட்டம் கொஞ்சம் பின்வாங்கிக் கொண்டது. ஆமாம்! பெண்கள் பந்தயங்கள் பார்க்க அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சிதான் பெண்கள் பந்தயங்களைப் பார்க்கவும். பிற்காலத்தில் பெருவாரியாகப் பங்கு பெறவும் கூடிய வாய்ப்பினை வழங்கிய ஒப்பற்ற முன்னோடி வரலாறு ஆகும்

ஆனால், ஆண்கள் பந்தயங்களைப் பார்க்கத் தான் அவர்கள் தடுக்கப்பட்டிருந்தார்களே தவிர, பெண்களே விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறவும் பயன் கொள்ளவும் கூடிய வாய்ப்புகளை யும் வசதிகளையும் அப்பொழுதே அவர்கள் பெற் றிருந்தார்கள்.

தடுக்கப்பட்ட தாய்க்குலம் தங்களுக்குள்ளே நடத்திக் கொண்ட போட்டிகள், நான்கு ஆண்டு

களுக்கு ஒரு முறை நடைபெற்றன. ஆண்களுக்கான போட்டிகள் நடைபெறுகின்ற காலத்தில் இல்லாமல், தனியாக நடத்தப்பட்ட அந்தப் போட்டிகளுக்கு **ஹீரா** என்பது பெயராகும். அந்தப் போட்டிகளைப் பார்க்க ஆண்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தன. இந்தப் போட்டிகளை ஆரம்பித்து வைத்தவள் என்ற பெருமைக்கு உரியவள். ஹிப்போடோமியா எனும் இளவரசியாகும்

அவள் தன் திருமணம் பிலாப்ஸ் என்ற இளைஞனுடன் நடந்த நிகழ்ச்சியை விமரிசையாகக் கொண்டாடவும் நினைவுபடுத்தி மகிழ்வதற்காகவும், இந்தப் பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைத்தாள் என்று வரலாறு கூறுகிறது.

இந்தப் பெரினிஸ் நடத்திய புரட்சிநிகழ்ச்சிக்குப் பிறகு, எப்பொழுது பெண்களை போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதித்தார்கள் என்பதற்குரிய வரலாற்றுக் குறிப்புகள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை.

ஆனால் 128வது ஒலிம்பிக் பந்தயங்களின் போது ***பெலிச்சி*** என்ற வீரமங்கை, தேர் ஓட்டும் பந்தயத்தில் கலந்து கொண்டு வெற்றி பெற்றாள் என்ற குறிப்பு மட்டும் நமக்குக் கிடைக்கிறது. ஆகவே பெண்கள் போராடித் தங்கள் உரிமையைப் பெற்று நிலை நிறுத்திக் கொண்டார்கள் என்ற நினைவுடன் நாம் மேலே தொடர்வோம்.

கிரேக்க நாடு ரோம் நாட்டுக்கு அடிமையானவுடன், கீர்த்திமிக்கப் பந்தயங்கள் மதிப்பிழக்கத் தொடங்கின. பந்தயங்களின்போது கிரேக்கருக்கும் ரோமானியர்களுக்கும் இடையே நடைபெற்ற குழப்பங்கள், கொடுமைகள் அனைத்தையும் கண்ட அப்பொழுது ஆண்ட ரோம் சக்கரவர்த்தி முதலாம் **தியோடசிஸ்,** ஒலிம்பிக் பந்தயங்களே இனி நடக்க கூடாது என்று ஆணைபிறப்பித்து தடை செய்து விட்டான். கி. பி. 394ல் தான் இந்த தடை பிறந்தது.

292 முறை நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயங்கள் உருத் தெரியாமல் ஒழிக்கப்பட்ட பிறகு, விளையாட்டுப் பந்தயங்கள் பற்றிய குறிப்புக்கள், அவ்வளவு சிறப்பாக எழுதப்படவில்லை. அங்கும் இங்கும் ஒன்று இரண்டு என்ற அளவிலே உலக நாடுகளில் தென்பட்டும் விளையாட்டுக்கள் திறமில்லாமல் நடைபெற்றும் வந்தன.

ஆனால், பெண்களும் விளையாட்டுக்கு சளைத்தவர்கள் அல்லர் என்கிற ரீதியிலே அவ்வப் போது வீரப் பெண்மணிகள் பலர் முன் வந்து, தங்கள் திறமையை வெளிப்படுத்தியது மட்டுமின்றி, பிற்காலத்தில் பெண்கள் விளையாட்டுக்களில் ஆர்வமுடன் பங்கு பெறுவதற்கான ஆயத்தப் பணிகளை மிகவும் அருமையாகச் செய்து தந்திருக்கின்றார்கள்.

கி. பி. 16ம் நூற்றாண்டில், ஸ்காட்லாந்து நாட்டின் ராணியாக விளங்கிய **மேரி** என்பவள், கோல்ப் ஆட்டத்தில் மிகவும் ஆர்வத்துடன் பங்கு பெற்று, அந்த ஆட்டம் வளர்ச்சி பெற அநேக உதவிகளைச் செய்திருக்கிறாள்.


கி. பி. 1558 முதல் 1603 வரை ஆண்ட **ராணி எலிசபத்** சீட்டாட்டத்தில் சிறந்த ராணியாகவே விளங்கினாள். அத்துடன் வேட்டையாடுவதிலும், நாய்ப் பந்தயங்களை நடத்துவதிலும் அதிக ஈடுபாடு காட்டி, அத்தகைய விளையாட்டுக்களை வளர்த்தாள்.

கி. பி. 1702 முதல் 1714 வரை இங்கிலாந்து ராணியாக விளங்கிய **ஆன்** என்பவள். குதிரைப் பந்தய விளையாட்டை வளர்ப்பதில் பெரும்பங்கு வகித்தாள். அதற்கான விதிமுறைகளை வகுத்ததுடன், சீரும் சிறப்புமாக நடத்த தன் அரசாங்க அதிகாரம் முழுவதையும் அளித்து வளர்த்து, பெருமை பெற்றாள்.

ஆன் அரசிக்குப் பிறகு, பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதில் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. பெண்கள் விளையாட்டுப் பந்தயங்களில் கலந்து கொள்ளக் கூடாது என்ற கொள்கையும், பெண்மைக்கும் தசை வளர்ச்சிக்கும் ஒத்துவராது என்று குழப்பக்கருத்தும் இங்கிலாந்தில் மட்டுமின்றி, அநேகப் புரட்சிகளுக்கு முன்னோடி

யாக விளங்கிய அமெரிக்காவிலும் கொடி கட்டிப் பறந்தன.

இந்தக் குழப்பக் கொள்கையும் விதண்டா வாதக் கருத்தும் வெங் கொடுமைப் புயலாக வீசியதன் காரணமாக, பெண்கள் விளையாட முன் வரத் தயங்கினர். ஆனால் ஒரு சில புத்திசாலிப் பெண்மணிகள். தாங்கள் விளையாட்டுக்களில் கலந்து கொள்ள புது வழிகளையும் கண்டறிந்து பங்கு கொண்டனர். முன்னுக்கு வரமுடியும். என்று போராட்டமே நடத்தினர். எப்படி?



# 3. எங்கெல்லாம் விளையாட்டோ அங்கெல்லாம்!

விளையாடுகின்ற திடல் பக்கமே பெண்கள் வரக் கூடாது, என்பதில் கூட கண்ணும் கருத்துமாக இருந்து காவல் காத்துக் கிடந்த ஆண்கள் பலர் உண்டு. ஆனால் 1909ம் ஆண்டில், அமெரிக்க நாட்டில் ஆச்சரியமான ஒரு நிகழ்ச்சி நடந்தது.

25 வயது நிறைந்த எழில் நங்கை ஒருத்தி, ஆண்கள் அணிந்து கொள்ளும் குதிரைப் பந்தாட்ட போட்டிக்கான உடைகளை அதாவது முழுக்கால் சட்டை, ஜெர்சியை அணிந்துகொண்டு வந்து ஆடத்தயாராக இருந்த ஆண்களிடையே சென்று, தானும் ஆடுவதற்கு ஒரு வாய்ப்புத் தருமாறு கேட்டாள்.

'தமாஷ்' என்று நகைத்தனர் பலர். வாயடைத்துப்போய் நின்றனர் சிலர். பெண் ஒருத்திக்கு இத்தனைத் துணிவா? ஆண்களுக்கு சமமாகக்

குதிரை ஏறி பந்தாட வருகிறேன் என்கிறாளே! என்ன ஆணவம் என்று எரிச்சலுடன் பார்த்தனர்.

பர்லிங்காம் கன்ரி கிளப் என்ற விளையாட்டு மைதானத்தில் இடம் கேட்டு ஏளனத்துக்கு ஆளான அந்த நங்கை, அதற்காகக் கவலைப்படவில்லை. பின் வாங்கிப் போய் விடவும் இல்லை.

எங்கெங்கே விளையாட்டுப் போட்டிகள் நடந்தாலும், அங்கே போவாள். ஆண்கள் விளையாட்டுக்காக அணிகின்ற ஆடைகளுடன் தான். முடியாது, இங்கிருந்து போ என்ற பதில்கள் தான் பெற்றாளே தவிர, வரவேற்பு ஒரு சிறிதும் பெற்றாளில்லை. ஆண்கள் மேல் அவளுக்கு வெறுப்புதான் ஏற்பட்டது. பிறகு?

அதிவேகமாக ஆண்கள் ஓட்டும் வாகனங்களை ஓட்ட ஆரம்பித்தாள். அதிலே ஆண்களையும் மிஞ்சுகின்ற அளவுக்கு வேகமாக வாகனங்களை ஓட்டினாள். புதிய சாதனைகளைப் படைத்தாள். ஆண்கள் எதிர்த்து ஓட்டிப் போட்டிக்கு வர வெட்கப்படும் வண்ணம் அவள் வேக மங்கையாக விளங்கினாள். அவளுக்குக் கிடைத்த பெயர் வேகப் பேய் என்பதாகும்.

வாகனங்களில் மட்டும் அல்ல. வேகமாக ஓட்டும் மோட்டார் படகுப் போட்டியிலும் முன்னணியில் நின்றாள். கோல்ப் ஆட்டத்தில் கலந்து கொண்டாள். ஆண்களைத் தோற்கடித்

தாள். எந்த ஆட்டத்திலும் பயிற்சி இல்லாத அந்த மங்கைக்கு ஒரு இயற்கையான ஆற்றல் இருந்தது.

ஆண்கள் ஆடுகின்ற ஒரு ஆட்டத்தை ஓரிரு நாள் பார்த்தால் போதும். சிறிது பயிற்சி. பிறகு... அவர்களுக்கு இணையாக ஆடிக் காட்டுவாள். 50 வயது ஆனபிறகு கூட Squash என்ற ஆட்டத்தில் வெற்றி வீராங்கனையாகத் திகழ்ந்தாள். 55 வயதில் கூட ஆற்றல் குறையாத மங்கையாக வாழ்ந்த அவளது பெயர் Miss Sears ஆகும்.

அவளுக்குப் பிறகு எலியனோரா சியர்ஸ் என்ற பெண்மணி டென்னிஸ் உலகத்தையே ஆட்டி வைத்தாள்.

இதற்கும் மேலாக ஆஸ்திரேலியப் பெண் ஒருத்தி. எப்பொழுதும் நோய்க்கு ஆளாகி நொந்து கிடந்த அந்தப் பெண்ணை நீச்சல் கற்றுக் கொள்ள அறிவுரை தந்தார்களாம், அவளும் நீச்சலில் முழு மூச்சாகப் பயிற்சி செய்யத் தொடங்கினாள். விளைவு! நோஞ்சானாகக் கிடந்த அவளது தேகம் நேர்த்தி பெறத் தொடங்கியது. அங்கங்கள் அழகு மையங்களாகின. சிறந்த பேரழகியாகவும் மாறி விட்டாள். அத்துடன் நீச்சல் கலையிலும் வீராங் கனையாகத் திகழ்ந்தாள்.

போட்டிருக்கின்ற உடை, நீச்சலுக்கு இடைஞ்ச லாக இருக்கிறது என்று, ஆடைகளைக் களைந்து விட்டு, இன்று இருக்கின்ற நீச்சல் உடைபோல

அன்றே அணிந்து கொண்டு நீந்த ஆரம்பித்தாள். ஊராரின் ஏச்சுப் பேச்சுக்கள் அவளை நிறுத்த முடியவில்லை. அன்று அவள் ஏற்படுத்திய புரட்சி கரமான நீச்சல் உடைதான். இன்றும் கொடி கட்டிப் பறக்கிறது. கவர்ச்சியை அந்த நாளிலே காட்டிப் போன பெண்ணின் பெயர் **ஆனட் கெல்லர்மேன்.**

இப்படியாக ஆங்காங்கே ஒரு சில பெண் வீராங்கனைகள் உணர்ச்சி பூர்வமாக வெளி வந்து பெண்கள் விளையாட்டுக்கு எழுச்சி தந்தாலும், அதனால் எந்த விதமான பயனும் உண்டாகாமல் போனது ஆச்சரியமான சேதி தான்.

1896ம் ஆண்டு புதிய ஒலிம்பிக் பந்தயம் பிறந்தது கிரேக்க நாட்டில் ஏதென்ஸ் நகரில். முதல் பந்தயம் தொடங்கியது. ஆனால் அதில் பெண் களுக்கான போட்டிகள் எதுவும் சேர்க்கப்பட வில்லை. பார்வையாளராகத் தான் பெண்கள் அனுமதிக்கப்பட்டார்களே தவிர, பங்கு பெறும் வாய்ப்பினைப் பெறவில்லை.

1896, 1900, 1904, 1908 ஆகிய நான்கு ஒலிம்பிக் பந்தயங்கள் நடந்து முடிந்த பிறகு, பெண் களுக்கு வாய்ப்புத் தர வேண்டும் என்ற கோரிக் கைகள் பல பக்கங்களிலும் இருந்து பாய்ந்து வந்த பிறகு, ஏற்றுக் கொள்ளப் பட்டன். ஆனாலும், எதிர்பார்த்த அளவுக்கு அது இல்லாமல் போனது விந்தை தான்.

1912ம் ஆண்டு, ஸ்டாக்ஹோம் என்ற இடத்தில் நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயத்தில், நீச்சல் போட்டியில் மட்டும் கலந்து கொள்ள பெண்கள் அனுமதிக்கப்பட்டனர். அதில் ஆஸ்திரேலிய வீராங்கனை செல்வி ஃபேனி டூரக் என்பவர் ஆண்களே வியந்து பாராட்டும் வண்ணம் நீந்தி, தங்கப் பதக்கம் பெற்று, வரலாற்றில் இடம் பிடித்துக் கொண்டாள்.

ஒலிம்பிக் பந்தயங்களில் பெண்கள் இடம் தேடிக் கொண்டார்களே தவிர, அது வளரவும் இல்லை. மிகுதி பெறவும் இல்லை. அவர்கள் 1928ம் ஆண்டு வரை காத்துக் கிடக்க நேரிட்டது. போராட வேண்டியிருந்தது. ஆமாம்!

1928ம் ஆண்டுதான் 5 போட்டிகளில் கலந்து கொள்ள வாய்ப்பினைப் பெற்றார்கள். இப்படியாக படிப்படியாக பெண்கள் விளையாட்டுக்களில் பங்கு பெற்றார்கள். பெருமை பெற்றார்கள். ஆனால் இன்றைய நிலைமை என்ன?

இன்று பெண்கள் பங்கு கொள்ளாத விளையாட்டுக்களே இல்லை எனலாம். கடினமான கால் பந்தாட்டத்திலிருந்து நாள் முழுதும் ஆடுகின்ற கிரிக்கெட் வரை, குத்துச் சண்டை முதல் மலையேறும் போட்டி வரை, பெண்கள் இல்லாத இடமே இல்லை என்றே கூறலாம். பெண்கள் பங்கு பெறாத விளையாட்டுகளுக்குப் பெருமையே

இல்லை என்று பொது மக்களும், பார்வையாளர்களும் பேசிக் கொள்கின்ற அளவுக்கு பெண்கள் விளையாட்டுக்களில் பங்கு கொண்டு வெற்றி பெறுகின்றனர்.

ஆனால், பெண்கள் ஏன் விளையாடக்கூடாது என்ற கேள்வி எழுகிறது? ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள அடிப்படை வித்தியாசம் தான் அதற்குக் காரணமா? அங்க அமைப்புக்களின் விசேஷமா? சமுதாயக் கட்டுப்பாட்டின் வெளிப்பாடா? பிறகு அது என்னவாக இருக்கும்?

ஆண்களைப்போல் பெண்கள் உடல்நிலை அமைப்பு இல்லை என்றால், அவை எப்படி இருக்கும்? இந்தக் கருத்தினை காண்போம்.



# 4. ஆண் பெண் உடல் அமைப்பு

பெண்கள் விளையாடுவது பெருந் தவறு என்று குற்றம் சாட்டுபவர்கள் கூறும் காரணங்களில் முதலாவதாக வருவது அவர்களின் உடல் அமைப்பு தான்.

பெண்களின் உடல் அமைப்பு மென்மை யானது, மிகவும் தன்மையானது, விளையாட்டுக் கள் கோருகின்ற வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாதது என்றெல்லாம் சுட்டிக் காட்டுவார்கள். அதனால், நாம் முதலில் பெண்கள் உடலமைப்பு, ஆண்கள் உடலமைப்பு எப்படி அமைந்துள்ளன என்று புரிந்து கொண்டால், அவர்கள் விடுக்கும் வினாக்களுக்கு விடையளிப்பது விவேகமாகவும் எளிதாகவும் ஆகிவிடும்.

## அமைப்பு

ஆண் பெண் இருவருக்கும் உடலமைப்பு பொதுவாக ஒரே மாதிரி தான் அமைந்துள்ளது. ஆனால் அவயங்களில் ஒரு சில வேறுபாடு.

ஆண் பெண்பால் (Sex) வேறுபாடு என்பது உண்டு. அதாவது ஆண்களுக்கு 15 குரோமோசோம் என்றும், பெண்களுக்கு 20 குரோமோசோம் என்றும் கூறுவார்கள்.

ஆண்களுக்கு உள்ளே உள்ள ஹார்மோன் ஒன்று. அதன் பெயர் **டெஸ்டோஸ்டெரோன்** (Iestosterone) என்பது, அதற்குரிய ஆற்றலால்தான், ஆண்களுக்குரிய பெருத்த எலும்பு வளர்ச்சியும் திரண்ட தசையமைப்பும் ஏற்படுகிறது. அதாவது வலிய எலும்புகள் வலிமை மிகுந்த தசைத்திறன்கள் மற்றும் ஆண்மை குணாதிசயங்கள் அனைத்தும் ஏற்படுகின்றன.

பெண்கள், உடலில் சுரக்கும் ஹார்மோன் ஒன்று, அதன் பெயர் **ஒஸ்ட்ரோஜஸ்** (Oestroges) என்பது. பெண்மைக்குரிய அத்தனை குணங்களை வளர்ப்பதுடன், வழவழப்பான தேகம்-கொழுப்புச் சக்தி—குறைந்த அளவு சதைப்பகுதி—மென்மையான எலும்புகள்- சிறிய ஆனால் அதற்கேற்ற வலிமையும் சக்தியும் உண்டய உடல் என்பதாக பெண் உடல் அமைகிறது.

சிறுவர் சிறுமியர்க்கு ஏறத்தாழ 10 வயதாகும் வரை மேற்கூறிய இரண்டு ஹார்மோன்களும் நன்கு வளர்ந்து செயல்படாமல் இருப்பதால்தான், பத்து வயது வரை உள்ள சிறார்கள் சேர்ந்து, ஒரே வேகம் வலிமை இவற்றுடன் செயல்படுவதையும், விளை

யாடுவதையும் நாம் காண்கிறோம். ஹார்மோன்கள் வளர்ச்சியடைகிறபொழுதுதான் ஆண் பெண் வித்தியாசமே பெரிதுபடத் தொடங்குகிறது.

பெண்களின் தேக வளர்ச்சி 10 - 12 வயதில் தொடங்கி 16ம் வயதில் தேர்ச்சி பெற்றுக் கொள் கிறது.

ஆண்களின் தேக வளர்ச்சியோ 12 - 14 வயதில் தொடங்கி 20ம் வயதில் எழுச்சி பெற்றுக் கொள்கிறது.

**எலும்பும் அமைப்பும்**

ஆண்களுக்குரிய எலும்பின் அமைப்பானது நீண்டும், திரண்ட தன்மை உடையதாகவும், வலிய தாகவும் அமைந்திருக்கிறது.

பெண்களுக்குரிய எலும்பானது, குட்டையாக வும், அதிகத் திரட்சி இல்லாத மென்மையுடைய தாகவும் உள்ளது.

ஆண்களின் தோள் பட்டை எலும்பின் விரி வான அமைப்பு போல பெண்களுக்கு இல்லை.

பெண்களின் இடுப்புக்குக் கீழே அமைந்தபகுதி (Pelvis) சற்று அகலமாகவும் விரிந்துள்ளது போல, ஆண்களுக்கு இல்லை.

பெண்களின் தொடைப்பகுதி எலும்பு பெல்விஸ் என்ற பகுதியுடன் இணைந்திருப்பதே ஒரு மாதிரித் தன்மையில் இருப்பதால் தான் அவர்கள் இயக்கமே சற்று நளினத் தன்மையுடன் அமைந்திருக்கிறது.

சமநிலை தரும் புவிஈர்ப்புத்தானம் (Centre of Gravity) ஆண்களைவிட பெண்களுக்கு சற்றுத் தாழ்வாகவேஅமைந்திருப்பதும் ஒரு பலவீனமாகும்.

ஆண்களின் கைகள் (முன் கை மற்றும் புஜங்கள்) நீண்டும் வலிமையுடையதாக இருக்கின்றன. முத்தலைத் தசைப் பகுதி உண்டு. பெண்களுக்கு இருதலைத் தசையுடன் குட்டையாகவும் மென்மையாகவும் உள்ளன. அதனால்தான் மூங்கிலைப் போல கைகள் என்று பெண்களை வருணிக்கின்றர்கள்.

வலிமை அதிகம் இல்லாத முழங்கால்மூட்டு, பெண்களுக்கு உண்டு.

அதிக உயரம். அதிக எடை கொண்டவர்களாக ஆண்கள் இருக்கிறார்கள்.

பெண்களுக்குரிய உடல் அமைப்பானது அடிக்கடி விளையாட்டுக்களில் விபத்துக்கள் ஏற்படும் வண்ணம் அமைந்திருக்கின்றன என்றும் ஒரு சிலர் கூறுகின்றார்கள். அதாவது அவர்களின் ஓடும் வேகத்தைத் தாங்க, உடல் எடையைத் தாங்க

மென்மையான பாதங்களால் முடியாது. தசைகளின் தசைநார்கள் தாங்காது என்பார்கள்.

ஆண்களை விட பெண்களுக்கு வெப்பமும் வியர்வையும் 2 டிகிரியிலிருந்து 3 டிகிரி வரை உடனே உயர்ந்துவிடும். என்பதையும் ஆராய்ச்சி மூலம் கண்டறிந்திருக்கின்றார்கள்.

ஆகவே, பெண்களை விட ஆண்களின் அமைப்பு இயற்கையாவே பெரிய அமைப்பு தான்.

பெண்மையும் மென்மையும் நிறைந்த பெண்களின் சுவாச அமைப்பு மற்றும் மனோநிலை போன்ற வேறுபாடுகளை காண்போம்.



# 5. பெண்களும் விளையாட்டும்

ஓட்டமும் தாண்டலும், எறிதலும் போன்ற செயல்கள் எல்லாம் ஆண் பெண் இருவருக்கும் பொதுவான செயல்கள் தான். அதிலும் இவை இயற்கையான இயக்கங்கள் தாம். ஆனால், இந்த இயக்கங்களின் மிகுதியாய் மேன்மையாய் விளங்கும் திறமைகள் தாம் ஓட்டப்போட்டி, தாண்டும் போட்டி, எறியும் போட்டி என்பனவாகும்.

இந்த வகையான போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது, பெண்கள் உடலின் உறுப்புக்கள் எவ்விதம் ஏற்கின்றன, எப்படி செயல் படுகின்றன என்பதை நாம் அறிந்து கொள்வது பெண்கள் விளையாடினால் என்ன ஆகும் என்ற வினாவுக்கு நாம் சிறிதேனும் விடையரிய உதவி செய்வதாக அமையும்.

### ஓட்டமும் பெண்களும்

சிறுமிகளாக இருக்கும் பொழுது ஓடுவதற்கும், பூப்படைந்தபின் பெண்களாக ஓடுவதற்கும் வித்தி

யாசம் இருக்கத் தான் இருக்கின்றன. அதாவது சிறிது சிரமப்பட்டுத்தான் ஓட வேண்டியிருக்கிறது இடுப்பெலும்பு பகுதியுடன், தொடை எலும்பானது இணைகிற விதமானது ஒரு விதமான கோண அமைப்பில் பொருந்தியிருப்பதானது, ஓட்டத்திற்கு ஏதுவில்லாத தன்மையாக இருக்கிறது. இந்த அமைப்பானது, பெண்கள் ஓடுகிற நேரத்தில், உட்புறமாக தொடை எலும்புப் பொருந்தியிருப்பதன் காரணமாக குதிகாலை வெளிப்புறமாகக் கொண்டு வருவது போன்ற அமைப்புடன் தான் ஓடவேண்டியிருக்கிறது. ஓடுகிற நேரத்திலும், முழங்கால்களை வேண்டிய அளவுக்கு உயர்ந்த இயலாமையும் ஏற்படுகிறது. தொடை எலும்பும் இடுப்பெலும்பின் பகுதியில் இணைந்திருக்கும் தன்மையானது தொடைஎலும்பு உட்புறமாகவே சுழல்வது போல இருப்பதானது, பெண்களின் ஓட்டத்திற்கு சாதகமில்லாத சூழ்நிலையை உண்டாக்குகிறது என்று வல்லுநர்கள் விளக்கியிருக்கிறார்கள்.

## தாண்டலும் பெண்களும்

ஆண்களின் உடல் அமைப்பானது புவியீர்ப்புத் தானம் சரியாக விழுகின்ற தன்மையில் அமைந்திருக்கிறது. பெண்களின் உடலானது சற்றுக் குறைந்த புவியீர்ப்புத்தானம் கொண்டதாக விளங்குகிறது. அதாவது 1%—2% என்பதாக. அதனால் நிலையான தன்மையுடன் (STABLE) பலவீனம் உள்ளதாகவும் விளங்குகிறது. அத்துடன் கைகளும்

கால்களும் நீண்டதாக அமையாமல் சற்று குட்டை யானதாகவே இருக்கின்றன. அதனால், தாண்டுவது என்பது பெண்களுக்குச் சாதகமானதாக அமையாது என்று கூறுகின்றார்கள்.

பெண்கள் தாண்டிக் குதிப்பதும் அறிவுடைமை யாகாது என்பார்கள். பெண்கள் தாண்டிக் குதிக்கும் பொழுது உடலின் உட்புற மென்மையான பகுதிகள் சீர்கெட்டுப் போகின்றன, பழுதுபட்டுப் போகின்றன. அத்துடன், குதித்து மணலில் நிற்கிறபொழுது. உடலின், எடையையும் ஓடிவரும் வேகத்தையும் தாங்க இயலாமல் இடுப்பெலும்பு பகுதிகள் இன்னல் பட்டுப் போகின்றன என்கிற பழமைக்கருத்துக்களும் பயப்படுத்துகின்றன.

என்றாலும், தாண்டுவது இடுப்பெலும்பு பலம டைய உதவுகின்றன. அத்துடன் தசைகளுக்கும் நரம்புகளுக்கும் தேவையான சக்தியையும் அளிக் கின்றன என்றும் இந்நாள் வல்லுநர்கள் கருத்துக் களைத் தெரிவிக்கின்றார்கள்.

அதனால் தான், பெண்கள் போட்டியிட உயரத்தாண்டும் போட்டியும் நீளத் தாண்டும் போட்டியும் என்று அனுமதித்திருக்கின்றார்கள். மும்முறைத் தாண்டும் போட்டியானது தரையிலே இரண்டு முறை தாவிட வேண்டும் என்பதால் தான் தவிர்த்திருக்கின்றார்கள். கோலூன்றிக் தாண்டும் போட்டியும் பெண்களுக்கு இல்லை.

காரணம் கைகள் வலிமை அதிகம் இல்லாதவை என்பதால்.

### எறிவது எப்படி?

பெண்களுக்கு பரந்த தோள் அமைப்பு இல்லை. குறுகிய தோள்கள், நீளமற்ற கரங்கள், அகன்ற இடுப்பெலும்புப் பகுதி இருப்பது எறிவதற்கு உதவுவதாகாது.

இடுப்பைச் சுற்றியுள்ள அதிகமான கொழுப்புப் பகுதியானது கைகள் முழு பலத்துடன் இயங்குவதைக் தடுக்கின்ற தன்மையில் இருக்கிறது. முழங்கை மூட்டும் அவ்வளவு சக்திவாய்ந்ததல்ல. முன்புறக் கைகளின் மூட்டமைப்பும் வெளிப்புறம் பார்ப்பது போல அமைந்திருப்பதால், எறியும் முயற்சிக்கு ஏற்றதாகவும் இல்லை. பெண்களின் உடல் அமைப்பும் எறியும் போட்டிகளுக்கு இணக்கமாக இல்லை என்கிறார்கள் வல்லுநர்கள்.

இதுவரை உடலமைப்பின் தன்மைகளைக் கண்டறிந்தோம்.

### இதயமும் நாடித்துடிப்பும்

பெண்களுக்கு இதயத்தின் அளவு ஆண்களின் இதயத்தை விட சிறியது தான். ஆனால் நாடித் துடிப்பு வேகமாகவும், அதிகமாகவும் உடையதாக விளங்குகிறது. பெண்கள் பயிற்சி செய்யும் பொழுது,

நாடித்துடிப்பு துரிதமடைந்து விரைவு பெற்றுக் கொள்கிறது. ஆனால் இயல்பான நிலைக்கு வர அதிக நேரம் எடுத்துக் கொள்கிறது. அதாவது ஆண்களின் நாடித்துடிப்பு விரைவில் சமநிலையை அடைவது போல பெண்களுக்கு அடைவதில்லை.

நல்ல பயிற்சி செய்கின்ற பெண்ணின் நாடித் துடிப்பானது ஒரு சாதாரண மனிதனின் நாடித் துடிப்பை விட 1 நிமிடத்திற்கு 10 துடிப்பு மெது வாகத் தான் உள்ளது. பெண்கள் பயிற்சி செய்யும் போது உட்கொள்ளுகிற பிராணவாயுவின் அளவு ஆண்கள் உட்கொள்கிற அளவுக்கும் மிகவும் குறை வாகவே உள்ளது. அத்துடன், இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களின் எண்ணிக்கையும் ஆண்களின் சிவப்பு அணுக்களின் எண்ணிக்கையைவிட குறை வாகவே உள்ளது. அத்துடன் ஹீமோகுளோபின் அளவும் பெண்களுக்குக் குறைவுதான்.

**சுவாசம்**

சுவாசக் குழாய் அமைப்பும் ஆண்களின் அளவைவிட சற்று சிறிய அளவில் தான் அமைந் திருக்கிறது. உடல் அமைப்பும் சிறியதாக இருப் பதால், உட்சுவாசமும் வெளிவிடும் தன்மையும் இயற்கையாகவே குறைந்த அளவே உள்ளது. ஆதலால் பெண்கள் உட்கொள்ளும் உயிர்க் காற்றின் அளவும் அதிகமாக இல்லை. ஆண்கள் உட்கொள்ளும் உயிர்க்காற்றின் அளவு 35%

என்றால் பெண்களின் உட்கொள்ளும் ஆற்றல் 25% அளவு தான் இருக்கிறது. காரணம் என்ன வென்றால், உயிர்க்காற்றை உள்ளே உறிஞ்சி இழுக்கும் ஆற்றல் பெற்ற சிவப்பு அணுக்களின் எண்ணிக்கையும், ஹீமோகுளோபின் அளவும் எண்ணிக்கையில் குறைவாக இருப்பதுதான். அது போலவே, கொழுப்புச்சத்து அதிகமாக உள்ள பெண் உட்சுவாசத்தை அதிகம் பெறுவது கொஞ்சம் கஷ்டம் தானே!

ஆண்களின் சுவாச ஆற்றல் அளவை விட, பெண்களின் சுவாசம் அதாவது உயிர்க் காற்றை உள்ளிழுக்கும் ஆற்றல் குறைவாகவே இருக்கிறது என்று வல்லுநர்கள் கூறுகின்றார்கள். உடலில் உள்ள செல்கள், திசுக்கள் இவற்றின் 'உயிர் சிதை வளர்ச்சி' (Metabolic factor) என்பது, ஆண்களை விட பெண்களுக்குக் குறைவாகவே உள்ளது. அதாவது ஆண்களுக்கு 10 சதவீதம் என்றால் பெண்களுக்கு 6 சதவீதம் என்பதாக அமைந் திருக்கிறது. ஆகவே, விளையாட்டுக்குத் தேவை யான அதிக பிராணவாயுவை பெண்களால் பெற முடிவதில்லை என்றும் கூறுகின்றார்கள்.

**தசையும் வலிமையும்**

உடல் வலிமைக்கு எலும்பின் திண்மை தேவை என்றால், அதற்கேற்றாற் போல தசைகளின் வண்மையும் நிறைய வேண்டும். தசைத்திரட்சியும்,

எலும்பின் வலுவூறிய வளர்ச்சியும் திறம் நிறைந்த செயலுக்குத் தூண்டுகோலாக அமைவனவாகும். இங்கே, தசை என்பதற்கும் சதை என்பதற்கும் அடிப்படையில் நிறைய வித்தியாசம் உள்ளதால், இந்த நேரத்தில் இங்கே இதை விளக்கமாக எழுதுவது பொருத்தமாக இருக்கும் என்பதால் எழுதுகிறோம்.

உடலானது செல்களால் (cell) ஆக்கப் பட்டிருக்கிறது. செல்கள் கூட்டம்தான் திசுக்கள் (Tissues) ஆகின்றன. திசுக்கள் கூட்டம் தான் தசைகள் ஆகின்றன. இதில் ஒரு செல் என்பது நீராலும் காற்றாலும் ஆன ஒன்றாகும். 90 சத விகிதம் தண்ணீர் நிறைந்திருந்து மீதி காற்றால் ஆனது செல். இந்த விகிதத்தில் செல்கள் திசுக்கள் இருந்தால் அது இறுகிய, சக்தியுள்ள அமைப்பாக மாறும். அப்படி இருப்பதற்குப் பெயர் **தசை** ஆகும். இறுகிய தன்மையில்லாமல் 'கொழ கொழ' என்று இருக்கும் இந்தப் பகுதிக்கு **சதை** என்று பெயர்.

உடற்பயிற்சி செய்பவர்களுக்கு உடலில் இருப்பது தசை. உடலை இயக்காமல் உண்டு கொழுத்து வாழ்பவர்களுக்கு உள்ளதோ சதை. இதனால்தான் குண்டாக இருக்கும் ஒருவரை பார்த்து, 'இதோ சதைக் குன்று போகிறது' என்று பரிகாசிக்கின்றார்கள்.

ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந் தாலும் சரி, தசைத்திரட்சி உள்ளவர்களே பார்க்க

அழகாக இருக்கின்றார்கள். அவர்கள் நிற்கும் போதும், நடக்கும் போதும்,ஏதாவது ஒரு செயல்கள் செய்யும் போதும் இயல்பாக எழிலாகத்தோற்றமளிக்கின்றார்கள்! சதைக் குன்றாக இருப்பவர்கள் நடை உடை பாவனை எல்லாமே கேலிக்குரியதுதான்.

பெண்களின் தசைப்பகுதி — ஆண்களின் தசைகள் போல் அவ்வளவு வலிமையும் ஆற்றலும் உடையவை அல்ல. அதாவது ஆண்களுக்குரிய வலிமையில் பெண்களுக்கு உள்ள தசை வலிமை 65 சதவீதம் முதல் 75 சதவீதம் தான் அமைந்திருக்கிறது.

மொத்தத் தசை வலிமையில் ஆண்களுக்கு 43 சதவிகிதம் ஆற்றல் கிடைக்கிறது என்றால், பெண்களுக்கு 36 சதவிகிதம்தான் கிடைக்கிறது.

கைகளில் உள்ள தசைகளிலிருந்து பெண்கள் பெறும் வலிமையின் சதவிகிதம் 65% என்கிறார்கள். ஆண்கள் தங்கள் கால்களின் தசைகளில் பெறுகின்ற சக்தியை விட பெண்கள் தங்கள் கால்களின் தசைகளில் 85% அளவுதான் பெற முடிகிறது என்றும் கணக்கிட்டிருக்கின்றார்கள். அதனால்தான் பெண்களுக்கு விளையாட்டுகளில் அதிகமான ஆற்றலை வெளிப்படுத்த இயலவில்லை என்ற பேச்சு எல்லா தரத்தினரிடையேயும் எழுந்திருக்கிறது.

**பெண்களும் கொழுப்பும்**

பெண்கள் உடலில் உள்ள மினு மினுப்புக்கும் கவர்ச்சிக்கும் அவர்களின் உடலில் இயற்கையாகவே இருக்கும் கொழுப்புச் சத்தும் ஒரு காரணம் என்பார்கள் ஏனெனில், ஆண்களைவிட பெண்களுக்கு 10%கொழுப்புத் திசுக்கள் அதிகம் உள்ளது என்கிறார்கள்.

இந்தக் கொழுப்புச் சக்தி Fat)யானது, உடலின் பல்வேறு பகுதிகளில் படிப்படியாக, இறுக்கமாக, மடிப்பு மடிப்பாகப் படிந்து பரவியுள்ளது. அது உடலின் மென்மையைக் காப்பாற்றவும், மினு மினுப்பை ஊட்டவும் கூடிய தனித்தன்மை கொண்டதாகவும் இருக்கிறது. இதனால் என்ன பயன் என்றால், பெண்களால் அதிகமான வெப்பத்தையும், அதிகமான குளிரையும் தாங்கிக் கொள்ளவும் சமாளித்து செயலாற்றவும் கூடிய வல்லமை கிடைக்கிறது.

வான வெளியில் முதன் முதலாக மனிதரை அனுப்பிச் சோதனை நிகழ்த்த முற்பட்டபோது, ஒரு பெண்மணியைத் தான் அனுப்பினார்கள். என்பதை நாம் இங்கே பெருமையாகக்கூட நினைவு கூறலாம்.

ஆனால், இந்த கொழுப்புத் திசுக்களால் என்ன குறை வருகிறது என்றால், சுவாசித்து அதிகமாக மூச்சுக் காற்றை உள்ளிழுத்து உயிர்ச் சிதை வளர்ச்

சிக்குரிய ஆற்றல் பெறும் திறமையை அதிகரித்துக் கொள்ள இயலாமல் செய்துவிடுவதுதான். இதனால் தான் பெண்கள் விளையாட்டில் அதிகமான சாதனைகளை செய்ய முடிவதில்லை என்றும் ஒரு காரணமாக இக் கருத்தினைக் கூறுகின்றார்கள்.

**கற்றவர்களும் கூறுகின்றார்கள்!**

பெண்களுக்கு விளையாட்டு எதற்கு? அவர்கள் ஏன் பங்கு பெற வேண்டும்? விளையாட வேண்டும் போட்டியிட வேண்டும் என்று யாராவது ரோட்டில் போகிற ஒரு மனிதன் கேட்டால் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் கற்றுத் தேர்ந்த உலகம் சுற்றி உன்னத அனுபவங்களைப் பெற்று ஒழிந்து போய் கிடந்த பழைய ஒலிம்பிக் பந்தயங்களைப் புதுப்பித்து புதிய ஒலிம்பிக் பந்தயத்தின் தந்தை என்று புகழப்பட்ட **பியரி கூபர்ட்டின்** என்பவரும் கூறுகின்றார் என்றால் அது எப்படி? ஆச்சரியமாக இல்லையா?

1896ம் ஆண்டு கிரேக்க நாட்டில், ஏதென்ஸ் நகரத்தில் புதிய ஒலிம்பிக் பந்தயம் ஆரம்பிக்கப் பட்ட பொழுது, அதனை மும்முரமாக இருந்து நடத்தியகூபர்ட்டின் கூறினார்." பெண்கள் வந்து பந்தயங்களைப் பார்க்கலாம். ஆனால் போட்டியிட அனுமதிக்கப்பட மாட்டார்கள்' ஏனென்றால் ஒலிம்பிக் பந்தயங்கள் பெண்கள் பங்கு கொள்ளும் பந்தயமாக உருவாக்கப்படவில்லை."

1896ம் ஆண்டும் அப்படித்தான் கூபர்ட்டின் கூறினார். 1912லும் அந்தக் கருத்தையே அவர் வலியுறுத்திக் கூறினார்." "ஒலிம்பிக் பந்தயங்கள் ஆண்களுக்காக மட்டுமே இருக்க வேண்டும். அவர்கள் பங்கு பெறுவதற்காகவே காப்பாற்றப்பட வேண்டும்" என்றார். 19 ஆண்டுகள் கழித்தும் கூட; பல ஒலிம்பிக் பந்தயங்கள் நடந்து முடிந்த பிறகும் கூட, அதாவது 1931ம் ஆண்டில் அவர் இப்படிக் கூறினார்.

"ஆண்கள் பங்கு பெறுகிற எந்தப் போட்டி யானாலும் சரி, பெண்கள் அதில் பங்கு பெறுவதைத் தடை செய்துவிட வேண்டும்." அதுபோல் தான் ஒலிம்பிக் பந்தயங்களிலும் அவர்கள் பங்கு பெறக் கூடாது. ஒலிம்பிக் பந்தயங்களில் பெண்களின் கடமைகள், வெற்றி பெற்ற (ஆண்களுக்கு) வீரர் களுக்கு கிரீடம் அணிவிக்கும் (பரிசு தரும்) வகையில் தான் இருக்க வேண்டும்.

கூபர்ட்டின் கருத்து எத்தகைய பழமையில் ஊறியிருந்தது என்பதற்கு மேலே காணும் வரிகளே சான்று. இது இவரது ஆணித் தரமான நம்பிக்கை என்றால் அவர் அந்த காலத்திய மக்களின் பிரதி நிதியாக விளையாட்டுக் குழுவின் தலைவராக இருந்தல்லவா பேசியிருக்கின்றார்.

மீண்டும் நாம் பழைய நிகழ்ச்சிகளை கொஞ்சம் திரும்பிப் பார்ப்போம். 1896ல் புதிய ஒலிம்பிக்

பந்தயங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது பெண்களுக்கு வாய்ப்பே கொடுக்கவில்லை. பழைய ஒலிம்பிக் பந்தயங்களில், பெண்கள் பார்வையாளர்களாகக் கூட அனுமதிக்கப்படவில்லை, மீறி, மறைந்திருந்து பார்த்தவர்கள் மரண தண்டனைக்குள்ளானார்கள்.

ஆனால், புதிய ஒலிம்பிக் பந்தயங்களில் கலந்து கொள்ள பெண்களுக்கு அனுமதியும் வாய்ப்பும் கிடைக்கவில்லையென்றாலும், பார்வையாளர்களாக வர, யாரும் தடைவிதிக்கவில்லை. தண்டனை அளிக்கவில்லை. பெண்கள் போட்டிகளில் கலந்து கொள்ளக் கூடாது என்று பார்த்துக் கொள்வதிலே, போட்டி அமைப்பாளர்கள் எல்லோருமே கண்ணுங் கருத்துமாக, மிகவும் எச்சரிக்கை நிறைந்த கவனத்துடன் இருந்தார்கள்.

1896, 1900 ஆகிய இரண்டு ஆண்டுகளில், இரண்டு முறை ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெற்றன. பெண்கள் போட்டிகளில் கலந்து கொள்ளுகிற வாய்ப்பே இல்லை, என்றாலும் இது பற்றிய பிரச்சினை நீறுபூத்த நெருப்பாக பெண்கள் நெஞ்சங்களிலே கனிந்து கொண்டே இருந்தது.

1904ம் ஆண்டு செயின்ட் லூயிஸ் நகரில் மூன்றாவது ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெற்ற போது விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு போட்டியிடுகின்ற முதல் வாய்ப்பினைப் பெண்கள் பெற்றார்கள்.

1908ம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயங்களில் டென்னிஸ் ஆட்டப் போட்டியையும் சேர்த்தார்கள். பெண்கள் வில் வித்தை, டென்னிஸ் என்ற இரு போட்டிகளில் மட்டுமே போட்டியிட அனுமதி பெற்றார்.

1912ம் ஆண்டு மூன்றாவது நிகழ்ச்சி அவர்களுக்கு இணைக்கப்பட்டது. ஆமாம், நீச்சல் போட்டியும் நடைபெற்றது.

1928ம் ஆண்டுதான் பெண்களுக்கு 'ஓடுகளப் போட்டி நிகழ்ச்சிகள்' அறிமுகப்படுத்தப்பட்டன. ஆம்ஸ்டர்டாம் நகரில் நடைபெற்ற இந்த ஒலிம்பிக் போட்டியில், பெண்களுக்கிடையே கடும் போட்டிகள் ஏற்பட்டன. இந்தப் போட்டிகளில் 800 மீட்டர் ஓட்டப் போட்டி நடைபெற்ற போது, கண்டு மகிழ்ந்த பொது மக்களைத் தவிர, நடத்திக் கண்காணித்த அதிகாரிகளிடையே ஒரு விதமான எண்ணம் ஏற்பட்டது! பெண்களுக்கு இப்படிப் பட்டப் போட்டிகள். தேவைதானா? அந்த நிகழ்ச்சி என்ன? ஏன் நடந்தது என்பதை இனி காண்போம்.

# 6. ஒலிம்பிக் போட்டிகளில் பெண்கள்

1928ம் ஆண்டில் ஆம்ஸ்டர்டாம் நகரில் ஒலிம்பிக் பந்தயங்கள் நடந்தபோது, பெண்களுக் கான ஓட்டப் போட்டிகளில் 5 நிகழ்ச்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவைகள் 100 மீட்டர் ஓட்டம், 800 மீட்டர் ஓட்டம், 4 X 100 மீட்டர் தொடரோட்டம், உயரத்தாண்டல், மற்றும் தட்டெறிதல் முதலியன. உலகெங்கிலும் இருந்து 121 வீராங்கனைகள் வந்து இப்போட்டிகளில் கலந்து கொண்டு போட்டியிட்டனர்.

இவற்றில் ஒன்றான 800 மீட்டர் ஓட்டப் போட்டி நடக்கும் பொழுதுதான், பெண்களுக்கு எதிராகப்பேசும் ஆண்களுக்கு உற்சாகம் ஊட்டுவது போன்ற நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. 15 பெண்கள் ஓட்டப் போட்டியின் தொடக்கத்தில் இருந்து ஓடத் தொடங்கினர். ஆனால் 800 மீட்டர் தூரத்தை ஓடி முடித்த பெண்களோ 7 பேர்கள் தான். எட்டுப் பெண்கள், தூரத்தை எட்டிப் பிடிக் காமலே இடையிலே நின்று விட்டனர். வந்து

முடித்த ஏழு பெண்களும், தட்டுத்தடுமாறி, திக்கித் திணறி, மூச்சுத் திணறி வந்து நின்றனர்.

இப்படி ஒரு போட்டி அவசியம்தானா? பெண்களால் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள கூடாது. இப்படிப்பட்ட நிகழ்ச்சியே இனிமேல் வேண்டாம் என்று வாதம் புரிகின்ற அளவுக்கு ளாய்ப் பேச்சுத் தொடர்ந்தது. அவர்கள் அனைவருக்கும் சரியான முறையில் பயிற்சி கொடுக்கப்படவில்லை, என்பதை யாரும் அறிய வில்லை. இந்த வாய்ப்பைப்பயன்படுத்தி, இரண்டு நாடுகளில் இருந்த பத்திரிகைகள், பெண்கள் ஒலிம்பிக் பந்தயங்களில் பங்கு பெறுவதைத் தடை செய்திட வேண்டும் என்றும் தலையங்கங்கள் எழுதித் தீர்த்தன. என்றாலும், அவர்களின் அந்தரங்க ஆசைகள் நிறைவேற்றப்படவில்லை. மாறாக, பெண்களுக்கானப் போட்டியிடும் வாய்ப்புகள் மேலும் அதிகமாகவே ஏற்படும் சூழ்நிலை உண்டாயிற்று.

1932ம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்ஸ் எனும் நகரில் ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெற்ற போது. மேலும் 4 போட்டி நிகழ்ச்சிகள் பெண்கள் போட்டிகளில் சேர்க்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். வரவேற்கத் தகுந்த வரலாற்றுக் குறிப்பாகும்.

வேலெறிதல், 80 மீட்டர் தடை தாண்டி ஓட்டம், நீளத் தாண்டல் மற்றும் 400 மீட்டர்

ஓட்டப் பந்தயமாகும். இதில் சுவையான சேதி ஒன்று உண்டென்றால், பெண்களுக்காக நடந்த 8 போட்டி நிகழ்ச்சிகளில் 5 போட்டிகளில் ஒரு அமெரிக்கப் பெண் வெற்றி பெற்று சிறந்த வீராங்கனை என்ற புகழடைந்தாள். அவளது பெயர் **பேபி டி டிரிக்ஸ்.**

1936ம் ஆண்டு பெர்லின் எனும் நகரத்தில் ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெற்றன. இப் போட்டி களில் ஸ்டெல்லா வெல்ஷ், ஸ்டெல்லா ஸ்டீபன் என்னும் இரண்டு வீராங்கனைகள், தங்கள் திறமையை வெளிப்படுத்தியது மட்டுமன்றி, பெண் கள் விளையாட்டுப் போட்டிகளுக்கு உரியவர்கள் தான், அவர்களால் எதுவும் முடியும் என்பதை நிரூபித்துக் காட்டினர்.

அவர்களையும் மிஞ்சி நின்றாள் ஓர் ஆரணங்கு, இரண்டு குழந்தைகளுக்கு தாயான அவள், 1948ம் ஆண்டு லண்டனில் நடந்த ஒலிம்பிக் பந்தயங் களில் கலந்து கொள்ள வந்தாள். 4 தங்கப்பதக் கங்களை வென்று வாகை சூடினாள். அதாவது 1936ம் ஆண்டு, நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயத்தில் 4 தங்கப்பதக்கங்களை வென்ற உலக மகாவீரன் ***ஜெசி ஓவன்ஸ்*** என்ற வீரனுக்கு இணையாக, இந்தத் தாய் வீராங்கனையும் வென்று தங்கப்பதக்கம் பெற்றாள். 'டச்சு நாட்டின் பறக்கும் தாய்' என்ற பட்டப் பெயரையும் பெற்றாள். அவள் நாடு திரும்பியபோது, ஹாலந்து நாட்டு ராணியே ரயில்

நிலையம் வந்து சாரட்டுத் தடபுடலுடன் எதிர் நின்று வரவேற்றுக் கௌரவம் அளித்தாள். அப்படிப்பட்டப் பெருமைக்கு ஆளான அந்த வீராங்கனை திருமதி ஃபேனி பிளாங்கர்ஸ் கோயலி என்பவள். இந்த நிகழ்ச்சியானது பெண்களின் விளையாட்டுத் துறையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது.

பெண்கள் தாயாகி விட்டாலும் கூட அவர்களது திறமையும் வலிமையும் பறிபோய்விடவில்லை. பாழாகிப்போவதில்லை, என்பது நிரூபணமாகிவிட்டதால், பெண்கள் பேரளவில் ஆர்வமுடன் பங்கு பெறும் வாய்ப்பு உலகெங்கும் ஏற்பட்டது.

அத்தகைய எழுச்சி இந்தியாவிலும் ஏற்பட்டது என்றால் ஆச்சரியமாக இல்லையா? வெட்கத்திற்கும், நாணத்திற்கும், குடும்பப் பாங்கிற்கும், சமுதாயக் கட்டுப்பாட்டுக்கும் இலக்காகி, அடக்க முற்று கிடக்கும் இந்தியப் பெண்மணிகளில் இருவர், இந்திய நாட்டின் சார்பாக ஒலிம்பிக் பந்தயங்களில் கலந்து கொண்டனர். வெற்றி பெற்றார்களா என்பது வேறு விஷயம். ஆனால் போட்டியிட்டனர் என்பதே பெருமைக்குரிய விஷயம் தானே!

மேரி டி சூசா, என். கோஷ் என்னும் இரு பெண்மணிகளும் 100 மீட்டர் ஓட்டத்திலும், 80 மீட்டர் தடைதாண்டி ஓடும் ஓட்டத்திலும் பங்கு பெற்று, இந்தியப் பெண்மணிகளின் தைரியத்தையும் திறமையையும் பாரெங்கும் பறை சாற்றினர்.

1956ம் ஆண்டு மெல்போர்ன் நகரில் ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெற்றன. போட்டிகளில் பங்கு பெறுகிறவர்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. இந்திய நாட்டிலிருந்து செல்வி. மேரி லீலா ராவ் என்னும் வீராங்கனை, 80 மீட்டர் தடை தாண்டி ஓடும் போட்டியில் பங்கு பெற்று, இந்தியப் பெண்களின் கௌரவத்தைக் காத்தாள்.

1960ம் ஆண்டு, ரோம் நகரில் ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெற்றபோது வில்மாருடாலப் என்ற வீராங்கனையின் வெற்றி, உலகெங்கும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது. அமெரிக்க நாட்டில், ஒரு ஏழை நீக்ரோ, பெற்றோர்களின் 17வது குழந்தையாகப் பிறந்த அந்தப் பெண், 11 வயது வரையிலும் இளம்பிள்ளை வாதத்தால் நடக்க முடியாது கிடந்து, பிறகு பயிற்சிகள் செய்து, உடற் குறையை வென்று, உலகம் போற்றும் ஓட்ட வீராங்கனையாக வெளி வந்தாள். மூன்று தங்கப்பதக்கங்களை வென்றாள். ஒலிம்பிக் பந்தயங்களின் மூடிசூடா ராணி என்னும் மாபெரும் புகழினையும் பெற்றாள்.

இந்த வெற்றி நிகழ்ச்சியானது, "விளையாட்டுப் போட்டிகள் பெண்களின் பெண்மையை அழிக்காது, பெண் மென்மையைப் போக்காது; விளையாட்டுப் போட்டிகள் வளமார்ந்த பெண்களைத்தான் உருவாக்கும்." என்ற உண்மையை உலகுக்கு உணர்த்தியது. இந்த உண்மை வெளிப்

பாடு, பெண்களின் விளையாட்டுக்களில் வியக்கத்தகு மாற்றங்களை உண்டு பண்ணின.

1968ம் ஆண்டு மெக்சிகோ நகரில் போட்டிகள் நடைபெற்ற போது செக்கோசுலோவோகியா நாட்டைச் சேர்ந்த வீரர் **காசியாவஸ்கா** என்னும் சீருடற் பயிற்சிகளில் சிறந்த வீராங்கனையாக (ஜிம்னாஸ்டிக்ஸ்) 7 தங்கப் பதக்கங்களை வென்றாள்.

1972ம் ஆண்டு மியூனிக்கில் நடந்த போட்டிகளில், ரினேட் ஸ்டெக்ஸ் எனும் கிழக்கு ஜெர்மனி நாட்டினள், ஓட்டப் போட்டிகளில் இரண்டு தங்கப் பதக்கங்கள் வென்று விழிப்புணர்ச்சியை ஊட்டினாள்.

1976ம் ஆண்டு மான்ட்ரியல் எனும் இடத்தில் நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயங்களில், 14 வயதே நிரம்பிய ருமேனிய நாட்டுச் சிறுமி 5 பதக்கங்களை வென்றாள். நீச்சல் போட்டிகளில் 4 தங்கப்பதக்கங்களை வென்றாள் கிழக்கு ஜெர்மனியைச் சேர்ந்த கொர்னீலியா எட்னர் என்பவள்.

பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டார்கள். வெற்றி பெற்றார்கள் என்றால், அது மிகவும் சாதாரணமான செய்தியாகும். அவர்கள் நிகழ்த்திய சாதனைகள் எல்லாம், ஆண்

களின் சாதனைகளை முறியடித்துவிடுமோ என்று ஆணினத்தை அச்சப்படுத்துகின்ற அளவுக்கு வேக மாகவந்து கொண்டிருக்கிறது.

ஆண்கள் பெண்கள் படைத்த உலக சாதனை களின் பட்டியலைப் பார்க்கும் பொழுது இந்த உண்மை புலப்படும்.



# 7. எட்டியும் ஒட்டியும்

ஒலிம்பிக் போட்டிப் பந்தயங்களில் பெண்கள் பங்கு பெறலாம் என்ற உரிமை கிடைத்தவுடன், வாங்கிக் கொண்டு தூங்கிப் போய் விடவில்லை பெண்ணினம். வானளாவப் பறக்க ஆரம்பித்து விட்டார்கள். வேகம் பேச்சில் மட்டுமில்லை. செயலிலும் தான்.

பெண்களால் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியாது. அவர்கள் உடலமைப்பின்படி, கலந்து கொள்ளவும் கூடாது என்று திட்டமிட்டுத் தடுத்தவர்கள் திடுக்கிட்டுப்பின் வாங்கும் வண்ணம் பெண்கள் பந்தய நிகழ்ச்சிகளில் போட்டியிட்டனர்.

1891ம் ஆண்டு கூடைப்பந்தாட்டம் என்ற ஆட்டத்தைக் கண்டுபிடித்தார் டாக்டர் ஜேம்ஸ் நெய்ஸ்மித் என்ற அமெரிக்கர். ஆண்கள் கூட்டம் அந்த ஆட்டத்துடன் ஐக்கியமானது போல,

ஆனந்த வெறியில் ஆடித் திளைத்தது. இதனைக் கண்ட பெண்களுக்குப் பொறுக்கவில்லை. நாங்களும் இந்தக் கூடைப் பந்தாட்டத்தை ஆடுவோம் என்று போட்டி போட்டுக் கொண்டு ஆட முயன்றனர்.

ஆனல், கூடைப்பந்தாட்ட வேகமும். ஆடும் முறைகளும் பெண்களுக்கு ஒத்துவரவில்லை. 'எங்களால் இந்த ஆட்டத்தை மகிழ்ச்சியுடன் ஆடமுடியவில்லை. ஆட்ட விதிகளும் மிகக் கடுமையானதாக இருக்கின்றன. ஆதலால், ஆட்டத்தின் கடுமைகளைக் களைந்தெறிந்துவிட்டு, மென்மைபடுத்தித் தாருங்கள்' என்று முறையிட்டுக் கொண்டதன் பேரில், ஒரு புதிய பந்தாட்டம் தோன்றியது. அதற்குப் பெயர் வலைப்பந்தாட்டம். (Net Ball).

மெதுவாக இதமாக, பதமாகப் பெண்கள் ஆட வேண்டும் என்ற இலட்சியத்துடன் தொடங்கப் பட்ட வலைப்பந்தாட்டம் இன்று பெண்களால் கைவிடப்பட்டது. நாங்களும் ஆண்களுக்கு இணையாக கூடைப்பந்தாட்டம் ஆடுவோம். அந்த வேகத்திற்கும் விதி கடுமைகளுக்கும் எங்களாலும் ஈடு கொடுக்க முடியும் என்று சூளுரைத்தல்லவா ஆடுகின்றனர்.

ஆரணங்குகள் அழகுப் பெண்மணிகள் என்று வருணிக்கப்பட்ட பெண்ணினம், இன்று பங்கு பெறாத விளையாட்டுக்களே இல்லை.

கால பந்தாட்டம் ஆடுகின்றனர். கோல் ஏந்திக் கொண்டு ஹாக்கி ஆடுகின்றனர். நாள் முழுதும் நின்று விளையாடும் கிரிக்கெட் ஆடுகின்றனர். குத்துச்சண்டை போடுகின்றனர். மல்யுத்தம் புரிகின்றனர். குதிரை ஏறி சாகசம் செய்கின்றனர். குலைநடுங்க வைக்கும் சாகசச் செயல்களிலும் கலந்து கொள்கின்றனர். அவர்கள் எதை விட்டார்கள்? ஒன்றுமில்லை என்ற பதில்தான் நமக்குக் கிடைக்கிறது.

ஒலிம்பிக் பந்தயங்களில் மிகப் பின் தங்கித் தானே பெண்கள் கலந்து கொண்டார்கள். ஆனால் 1980ம் ஆண்டு மாஸ்கோவில் நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயங்களில் 21 முக்கிய விளையாட்டுக்கள் உள்ள 12 முக்கியப் போட்டிகளில் பங்கு பெற்றனர். அதாவது 49 போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு போட்டியிட்டனர்.

அவர்கள் பெண்களுக்கான போட்டிகளில் மட்டும் கலந்து கொண்டார்கள் என்றால் பெருமையில்லை என்று எண்ணினார்களோ என்னவோ, ஆண்கள் போட்டியிலும் கலந்து கொண்டனர். குதிரையேற்றப் போட்டிகள், (பிஸ்டல்) கைத் துப்பாக்கிச் சுடுதல், மற்றும் நீண்ட குழல் துப்பாக்கிச் சுடுதல் இவற்றிலும் போட்டியிட்டு ஆணுக்குப் பெண் சளைத்தவள் அல்லல் என்பதை நிரூபித்துக் காட்டி விட்டனர்.

பெண்கள் ஆண்கள் போட்டியிடும் எண்ணிக்கையை மட்டும்தான் எட்டிப் பிடித்து விட்டார்களா என்றால், அது மட்டுமல்ல. அநேகப் போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள். அது மட்டுமல்ல. வலிமையுள்ள ஆண்கள் சாதிக்கின்ற விளையாட்டு சாதனைகளையும் எட்டிப் பிடிக்கவும் ஒட்டி நிற்கவும் கூடிய நிலைமைக்கு அல்லவா உயர்ந்து விட்டிருக்கின்றார்கள்.

ஆமாம். ஒரு சில போட்டி நிகழ்ச்சிகளையும். அவற்றில் ஆண்களின் உலக சாதனைகளையும். பெண்கள் புரிந்த உலக சாதனைகளையும், கீழே கொடுத்திருக்கிறோம். இதன்மூலம் ஒரு கருத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியும். உலக அரங்கிலே ஒருநாள் ஆண்களின் சாதனையை பெண்கள் சாதனை மிஞ்சினாலும் மிஞ்சக்கூடும் என்பதுதான். ஆண்கள் அஞ்சும் காலம் வரத்தான் போகிறது.

| போட்டி நிகழ்ச்சி | ஆண்களின் உலக சாதனை | பெண்களின் உலக சாதனை | ஆண் பெண் சாதனை சதவீதம் |
|---|---|---|---|
| 1. 100 மீ. ஓட்டம் | 9.95 வினாடிகள் | 10.88 வினாடிகள் | 91.4 |
| 2. 200 மீ. ஓ. | 19.72 ,, | 21.71 வி. | 90.9 |
| 3. 400 மீ. ஓ. | 43.86 ,, | 48.60 வி. | 90.3 |
| 4. 800 மீ. ஓ | 1 நி. 42.4 வி. | 1 நி. 53.4வி. | 90.2 |
| 5. 1500 மீ. ஓ. | 3 நி. 31.4 வி. | 3 நி. 52.5 வி. | 90.9 |
| 6. 4×100 மீ. தொ. | 38.03 வி. | 41 நி. 60 வி. | 91.7 |
| 7. 4×400 மீ. தொ. | 2 நி. 56.1வி. | 3 நி. 19.2 வி. | 88.4 |
| 8. உயரத்தாண்டல் | 236 செ. மீ. | 201 செ. மீ. | 85 |
| 9. நீளத்தாண்டல் | 890 செ. மீ. | 709 செ. மீ. | 79.7 |

மேலே காணும் வெற்றிச் சாதனைகளின் பட்டியலைப் பாருங்கள். ஆண்களின் சாதனைகளை விட பெண்களின் சாதனைகள் அதிக தூரமோ அதிக நேரமோ இல்லை. எட்டியும் ஒட்டியும் தான் இருக்கின்றார்கள்.

சாதனைகளைப் பார்க்கும் பொழுது, ஆண்களின் சாதனை உயர்ந்த அளவில் இருக்கலாம். ஆனால் இன்னும் குறுகிய காலத்தில், இப்பொழுது இருக்கும் சாதனை இடைவெளி இன்னும் குறையும். ஏனெனில் பெண்களின் சாதனைகளின் வேகம் என்றும் குறையவில்லை. நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டேதான் வருகிறது. அதாவது பலவீனப் பட்ட இனம் என்று வருணிக்கப்படும் பெண்ணினம் தான், வலிமையான இனம் என்று புகழ்படும் ஆண் இனத்தின் சாதனைகளை மிஞ்சும் வகையில் அடிக்கடி மாற்றி எழுத வைக்கிறது. உலக சாதனைகளின் உச்ச வரம்பும் உயர்ந்து கொண்டே போகிறது.

உதாரணத்திற்கு சில கருத்துக்களை இங்கே காண்போம்.

1928ம் ஆண்டு 100 மீட்டர் ஓட்டத்தில் இருந்த ஆண்களின் சாதனையைவிட இன்றைய சாதனை 0.7 வினாடிகள்தான் குறைந்திருக்கின்றன. ஆனால் பெண்களின் ஓட்டச் சாதனை 1 நிமிடம் 2 வினாடிகள் குறைந்திருக்கின்றன. பெண்ணிகளின் வேகம் பெரிதுதான்.

800 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் ஆண்கள் குறைத்திருக்கும் சாதனை அளவு 8.3 வினாடிகள் என்றால், பெண்கள் வேகமாக ஓடிக் குறைத்திருக் கும் சாதனை அளவு 23.3 வினாடிகள்.

சாதனை படைப்பதில், பெண்கள் சாதனைகள் படைத்து வருகின்றார்கள் என்பதையே சரித்திரம் சுட்டிக் காட்டுகின்றது.

இதைவிட அற்புதம். நீச்சல் பே ட்டியில் நிகழ்ந் திருப்பதையும் நாம் காணலாம். பெண்கள் 1912ம் ஆண்டுதான் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண் டார்கள் என்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். இங்கே பாருங்கள். 1912ம் ஆண்டிலிருந்து 100 மீட்டர் ஃபிரீஸ்டைல் போட்டியில் ஆண்கள் குறைத்த சாதனை நிகழ்த்திய நேரம் 12.41 வினாடிகள். ஆனால் பெண்கள் குறைத்த நேரமோ 25.01 வினாடிகள்.

இவையெல்லாம் பெண்களின் பலத்தைக் காட்டுகின்றன என்றே கூறலாம். ஆனால் மார தான் ஓட்டம் என்று ஒன்று உண்டல்லவா! அதில் புகுந்து பெண்கள் உண்டாக்கும் பரபரப்பை இனி காண்போம்.

# 8. பெண்களும் மாரதான் ஓட்டமும்

மாரதான் ஓட்டம் என்றால், 26 மைல் 385 கெஜ தூரம் ஒருவர் ஓடியாக வேண்டும். அதை தற்போதைய அளவில் சொன்னால் 42 கிலோ மீட்டர் 195 மீட்டர்கள் ஆகும்.

இவ்வளவு நீண்ட தூரத்தைப் பெண்களால் ஓட முடியுமா? ஓடினால் பெண்கள் உடல் என்னாகும்? வாடி வதங்கியல்லவா போகும்? மென்மை மிகுந்த உடல் வேரறுந்த கொடியாக அல்லவா வீணாகிப் போகும் என்றெல்லாம் விளங்காமற் பேசியவர்கள் எல்லாம், வியந்து போகின்ற அளவுக்கு மாரதான் ஓட்டத்தைப் பெண்கள் ஆக்ரமித்துக் கொண்டு விட்டார்கள்.

ஆண்களால் மட்டுமே ஓடமுடியும் இந்தத் தூரத்தை என்று எண்ணித்தான் 1896ம் ஆண்டு கிரேக்க நாட்டில் ஏதென்ஸ் நகரில் நடந்த புதிய ஒலிம்பிக் பந்தயத்தில் முதன் முறையாகச் சேர்த்தனர். அப்பொழுது **ஸ்பிரிடன் லூயிஸ்** என்னும்

கிரேக்க வீரன் ஓடி முடித்த நேரம் 2 மணி 58 நிமிடம் 50 வினாடிகள் ஆகும்.

ஆனால் நார்வே நாட்டைச்சேர்ந்த ஒருநங்கை, பெயர் **கிரேட்டா வெய்ன்ஸ்**, அவள் இந்த மாரதான் ஓட்டத்தை ஓடி முடித்த நேரம் 2 மணி 25 நிமிடம் 41 வினாடிகள்.

அதாவது லூயிஸ் ஓடிய நேரத்தை விட 33 நிமிடம் முன்னதாக ஓடி முடித்து புதிய சாதனை நிகழ்த்தியிருக்கிறாள் இந்தப் பெண். அவள் வெற்றி பெற்று உலகில் புகழ் அடைந்தாளே தவிர, வேறு எதுவும் அவளுக்கு நேர்ந்துவிடவில்லை. விபத்து நிகழவில்லை. மேனியும் நிலை குலைந்து போக வில்லை.

இந்த மாரதான் ஓட்டம் 1896ல் ஆரம்பிக்கப் பட்ட பொழுதே ஏன் பெண்களும் இதை ஓடக் கூடாது என்று முயன்ற பெண்கள் பலர். அவர் களிலே முக்கியமாகக் குறிப்பிடப்படுபவள் கிரேக்க நாட்டினள். பெயர் ***ஸ்டேமாசியா பாட்ரிசி*** என்ப தாகும்.

முதல் ஒலிம்பிக் பந்தயங்கள் நடந்து முடிந்த பல நாட்கள் கழித்து, இந்த ஓட்ட முயற்சியை மேற்கொண்டாள். அப்பொழுது அந்த வீராங்கனை வெற்றிகரமாக தூரத்தை ஓடி முடித்து உண்டாக்கிய சாதனை நேரம் 5 மணி 30 நிமிடம் ஆகும்.

1896ல் பெண்கள் ஓடிய மாரதான் ஓட்டத்தின் சாதனை நேரம் 5 மணியில் இருந்தது. இப்பொழுது 2 மணியாக இறங்கி வந்திருக்கிறது. ஆமாம் ஆண்கள் ஓடும் நேரத்திற்கும் பெண்கள் ஓடும் நேரத்திற்கும் இடையிலே 30 நிமிடங்கள்தான் வித்தியாசம் இருக்கிறது.

இன்னும் நாளாக நாளாகக் குறைந்து கொண்டேவரும் என்று விளையாட்டு வல்லுநர்களும் விஞ்ஞான பூர்வமாக ஆராய்ச்சி செய்கின்ற நிபுணர்களும் கணித்துக் கூறுகின்றார்கள்.

எண்பத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்பே பெண்கள் மாரதான் ஓட்டத்தை ஓடிப் பார்த்து விட்டார்கள் என்றாலும், ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு முன்னர்தான், பெண்கள் மாரதான் பற்றி பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன.

ஆரம்ப நாட்களில், இப்போட்டியில் கலந்து கொண்ட அநேக வீராங்கனைகள், ஓடும் மொத்த தூரத்தை முடிக்க இயலாமல் விலகிக் கொண்டனர். முயற்சித்தவர் பலர். முடித்தவர் சிலர். ஆரம்பத்தில் 5 மணி நேரத்திற்கு மேல் ஓடி முடிப்பதற்காக எடுத்துக் கொண்டநேரம், ஏழு ஆண்டு காலத்திற்கு அப்படியேதான் தொடர்ந்து வந்தது.

கடந்த எட்டு ஆண்டுகளாகத்தான், 3 மணி நேரத்திற்குள்ளாக ஓடிமுடிக்கும் வல்லமையை வீராங்கனைகள் பெற்று வந்திருக்கின்றனர்.

உலக அளவில் ஓடுகளப் போட்டிக்கழகம் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கழகம் அறிவித்திருக்கும் கணக்குப்படி, ஆயிரத்திற்கு மேற்பட்ட மாரதான் ஓட்ட வீராங்கனைகள் போட்டிகளில் பங்கு பெற்றிருக்கின்றனர். இதுவரை, உலக அளவில் 100 மாரதான் ஓட்டப் போட்டிகள் நடைபெற்றிருக்கின்றன.

வீராங்கனைகள் எண்ணிக்கையில் அதிகமானது போலவே, வெற்றிச்சாதனையிலும் உயர்ந்தே இருக்கின்றனர். இதனை பெண்கள் ஏற்படுத்தியிருக்கும் மாபெரும் புரட்சி என்றே புகழ்ந்து கூறலாம்.

நாம் வாழுகின்ற இருபதாம் நூற்றாண்டுக் காலத்தை அணுவை ஆட்படுத்தி அனுபவிக்கும் காலம் என்று சிலர் கூறுவார்கள். இதனை மின்சார யுகம் என்றும் மிகைப்படுத்தி பேசுவார்கள். ஆனால், நாம் இதனை பெண்களின் நூற்றாண்டு என்று கூட பெருமை பொங்கக் கூறலாம். காரணம் என்னவென்றால், இந்தக் காலம் ஏந்திழைகளின் ஏற்ற மிகுகாலம் என்பதால்தான்.

சமுதாயத்தில் சரிபாதி அங்கமாக விளங்கும் பெண்ணினம், பலவீனப்பட்ட இனம் என்ற பாசாங்கு மொழியெலாம் பஞ்சாகப் பறந்து போய் விட்டது. பலம் நிறைந்த பெண்ணினம், சதாயத்தில் இன்று சரி நிகர் சமானம் என்ற இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டது.

கலையுலகத்தில் அவர்கள் கைபடாத இடம் இல்லை. அரசியலில் அவர்கள் வசிக்காத அங்கம் இல்லை. இலக்கியத்தில் அவர்கள் எழுச்சி எப்பொழுதும் இருந்து கொண்டே வருகிறது. அறிவியல் உலகிலோ அவர்கள் அற்புத ஜீவிதங்களாய் அதிரச காவியங்களாய் திகழ்ந்து கொண்டு தான் வருகின்றார்கள். நுண்ணணுக்களைக் கையாளும் இயல்களில் கூட அவர்கள் ஆண்களையும் மிஞ்சி விட்டிருக்கின்றார்கள்.

ஆனால், அவர்கள் உடல் வலிமையைக் காட்டி உச்சத் திறமையை வெளிப்படுத்தும் விளையாட்டுக்களிலும், ஆணுக்கு நிகர் பெண்கள் என்ற வாசகத்தைப் பேசியும் செயலில் காட்டியும் வருகின்றார்கள். அவர்கள் கலந்து கொள்ளாத விளையாட்டுக்களே இல்லை என்னும் அளவில், பெண்கள் விளையாட்டு உலகனை முற்றுகையிட்டு வளைத்துப் பிடித்துக் கொண்டு விட்டார்கள்.

எடை தூக்குவதில் மட்டுமே, அல்லது வலிமையும் பலமும் நிறைந்த போட்டிகளில் மட்டுமே ஆண்களுடன் பெண்கள் போட முடியவில்லை. ஆனால், விளையாட்டுப் போட்டிகளில் மற்றும் **நெஞ்சுரம்** (Stamina) அதிகம் தேவைப்படுகின்ற போட்டிகளில் பெண்கள் மிகவும் திறமையுடனே ஈடுபட்டு வெற்றி பெற முடியும் என்று ஆராய்ச்சி வல்லுநர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள்.

"நெடுந்தூரம் ஓடுகின்ற போட்டிகளில், ஆண்கள் உடலில் ஏற்படுகின்ற மாறுதல்களைப் போலவே பெண்களுக்கும்ஏற்படுகின்றன. ஆனால், அந்தத் தேவையான நெஞ்சுரமும், உள்ளாற்றல் போன்றவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் பெண்கள் உடலமைப்பு இருக்கிறது. தேவையான என்சைம் மற்றும் லியுகோ சைட்ஸ் போன்ற நுண்ணணுக்களை பெண்கள் உடலில் உள்ள இரத்தம் அதிகப்படுத்தி, நிலைமையை சமாளிக்கும் ஆற்றலை அளித்துவிடுகிறது" என்று கிழக்கு ஜெர்மனியைச் சேர்ந்த விளையாட்டு நிபுணர்கள் கூறுகின்றனர்.

உடல் அமைப்பில், வடிவத்தில் ஆண்களை விட பெண்கள் சற்றுக் குறைந்தவர் போலத் தோன்றினாலும், மனோதத்துவப்படி அவர்கள் அந்தக் குறையை ஈடுகட்டிச் சமாளித்துக் கொள்கின்றனர். விளையாட்டு வீரர்களைவிட, விளையாட்டு வீராங்கனைகளுக்குத் தொடர்ந்து இடைவிடாது செயலாற்றும் திறன் அதிகமாக இருக்கிறது. அந்தத் திறமையும், அவர்கள் உண்மையாகவே உள்ளத்தில் கொண்டிருக்கும் இலட்சியப் பிடிப்பும், அதற்காக அவர்கள் பொறுமையாக உழைத்து வரும் உழைப்பும், அவர்களை மேன்மையானவர்களாக ஆக்கிவிடுகின்றன என்றும் வல்லுநர்கள் கூறுகின்றார்கள்.

இந்த அடிப்படை ஆராய்ச்சி உண்மையை அறிந்து கொண்டவர்களுக்குப் பெண்களின்

இன்றைய நிலை பெரிய வாய்ப்பினை அளித்து விடாது. ஆமாம்! பெண்கள் ஆண்கள் ஆடக்கூடிய அத்தனைவிளையாட்டுக்களையும் முற்றுகையிட்டுப் பிடித்துக் கொண்டதுபோல, ஆக்ரமித்துக் கொண்டு விட்டனர். இன்று அவர்கள் ஆடாத ஆட்டமில்லை, வரவழைக்காத கூட்டமில்லை என்றே தைரியமாகக் குறிப்பிட்டு விடலாம்.

மலையேறுதல், துடுப்புப் படகில் ஏறிக் கொண்டு கடல் பயணமாக உலகம் சுற்றுதல், பாராசூட்டிலிருந்து குதித்தல், துப்பாக்கிச் சுடுதல், குதிரையேற்றப் போட்டிகள், மற்றும் விசை மோட்டார் ஓட்டுதல், ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடத்தல், போன்றவற்றில் பங்குபெற்று சாதனை புரிந்து வருகின்றனர்.

ஒரு சில உலக சாதனைப் புரிந்த பெண் மணிகளையும், அவர்கள் பங்கு கொண்ட நிகழ்ச்சிகளையும் பாருங்கள். நிலைமைகள் புரியும்.

ஜப்பானிய வீராங்கனையான **யூங்கோ டேபல்** எவரெஸ்டு சிகரத்தில் ஏறி சாதனை புரிந்தாள். நார்வே நாட்டின் **அனிடா** ஓல்டு ஸ்பிரிங்போர்டில் துள்ளி 98 மீட்டர் தூரம் தாண்டிக்குதித்து சாதனை செய்தாள். ஒரு மணிக்கு 934-936 கிலோ மீட்டர் வேகத்தில் ராக்கெட் வேகக்காரை ஓட்டியஅமெரிக்க வீராங்கனையான **கிட்டி ஓ நெயில்** என்பவள் புதிய சாதனை புரிந்தாள், 19 வயதினளான ***சிந்தியா***

**நிக்கோலஸ்** எனும் கனடா நாட்டுப் பெண், ஆங்கிலக் கால்வாயை இரண்டு முறை 19 மணி 5 நிமிடங்களில் நீந்திக் காட்டினாள்.

வானத்திலே மணிக்கு 2600 கிலோ மீட்டர் விமானத்தில் பறந்து உலக சாதனை செய்தாள். **ஸ்வெட்லானா சாவிஸ்கயா** எனும் ரஷ்ய மங்கை.

கடுமையான விளையாட்டாகக் கருதப்படுவது பனியில் ஆடும் ஹாக்கி என்பதாகும். அது பயங்கரமான ஆட்டமாகும் அதனை ஆடுபவர்கள் மேனி முழுவதும் பாதுகாப்பாக மெத்தைகளைக் கட்டி ஆடவேண்டும். அத்துடன் வலிமை நிறைய வேண்டும். அந்த ஆட்டத்தையும், இப்பொழுது பெண்கள் ஆட ஆரம்பித்து விட்டார்கள்.

பெண்களுக்கு விளையாட்டுக்களில் உள்ள ஆர்வத்தைக் கண்ணுற்ற ஒலிம்பிக் பந்தயக் கழகத்தின் நிர்வாகிகள், வரப்போகும் 1984ம் ஆண்டு லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் நடக்க இருக்கும் போட்டிகளில், இன்னும் அதிகமான நிகழ்ச்சிகளை சேர்க்க வேண்டும் என்று முடிவெடுத்திருக்கின்றனர்.

அதாவது 16 விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்குள்ளாகவே போட்டிகள் நடைபெறும். அத்துடன், துப்பாக்கிச் சுடுதல், குதிரையேற்றப் போட்டிகள், விண்ட் சர்பிங் என்னும் மூன்று விளையாட்டுக்களிலும் ஆண்களுடன் இணைந்து போட்டி போடலாம் என்பதே! அத்துடன், சைக்கிள் ஓட்டப் போட்டிகளும் உண்டு.

# 9. ஆண்கள் பின்வாங்கும் சாதனைகள்

பெண்களுக்கு என்த் தனியே 16 போட்டிகள் ஒலிம்பிக் பந்தயங்களில் இணைக்கப்பட்டிருக் கின்றன என்றாலும், ஆண்கள் போட்டியிடும் துப்பாக்கிச் சுடுதல் போன்ற மூன்று போட்டிகளில் சேர்ந்து கொண்டு போட்டியிடலாம் என்றும் ஒரு முறையும் உருவாக்கப்பட்டிருக்கிறது என்றால், பெண்களின் முன்னேற்றத்தில எத்தகைய புரட்சி ஏற்பட்டிருக்கிறது. பார்த்தீர்களா?

மென்மையானவர்கள் மங்கையர்கள், பலவீன மான பிரிவினராவார்கள் பெண்கள் என்னும் கொள்கை,பழைய பஞ்சாங்கமாக, வறட்டு வேதாந்த மாக அல்லவா மாறிப் போய் விட்டது.

மலர் போன்ற மென்மையானவர்கள் என்பதை விட, முரட்டுத்தனமான மென்மையும், விடாப்பிடி பிடியுடன் விளங்கும் வன்மையும் உடையவர்கள்

பெண்கள் என்று பெரிது படுத்திப் பேசும் அளவுக்கு அவர்களது ஆற்றல் பெருகிக்கொண்டே போகிறது

ஆண்களுக்குப் பெண்கள் இளைத்தவர்கள் அல்லர் என்று வழக்காடிக் கொண்டிருந்த பெண்ணினத்தின் பிரதிநிதிகள் சிலர், ஆண்களை விடவும் வலிமை மிக்கவர்கள் பெண்கள் என்று சரித்திரம் படைக்கின்ற சாதனைகளைப் புரிந்திருக்கின்றனர்.

ராணி மங்கம்மாள், ஜான்சிராணிலட்சுமி பாய் போன்ற வீராங்கனைகளைப்பற்றி அறிந்தது போலவே, மேலை நாட்டுப் பெண்கள் ஆண்களுடன் போட்டியிட்டு, ஆரவாரமான வெற்றிகளைப் பெற்று ஆனந்த நர்த்தனம் புரிந்திருக்கின்றார்கள். இதோ சில உதாரணங்கள்.

ஜெர்மன் நாட்டிலே பெரிய கதைநாயகியாகப் புகழ் பெற்றிருப்பவள் **புருன்கில்டா** என்பவள். இவள் ஆண்களுடன் போட்டியிட்டு, அவர்களைத் தோற்கடித்தவள். என்னென்ன போட்டிகள் என்றால், வேலெறிதல், உயரத் தாண்டும் போட்டி போன்றவற்றில் எத்தனை சாமர்த்தியம்!

செக்கோசுலோவோகியா நாட்டு மன்னன் நான்காம் சார்லஸ் என்பவரின் மனைவி, ராணி **அல்ஸ்பேட்டா.** மகத்தான சாதனை புரிந்த வீரப் பெண்ணாகத் திகழ்ந்திருக்கிறாள். அதாவது தங்கச் சரிகைகள் மின்னும் ஆடைகள் அணிந்த

சந்தன மேனியிலே, கனமான போருடைகளை அணிந்து கொண்டு, அந்த நாட்டுப் பெரும் வீரர் களுடன் போரிட்டு, பெரும் வெற்றி பெற்றதை உலகமே வியந்து போற்றிய வீர நிகழ்ச்சிகளாகும்.

சர்க்கஸ் நிகழ்ச்சிகள் என்றாலே. வந்திருக்கும் பார்வையாளர்கள் வாய்பிளந்தவாறு பார்த்துக் கொண்டிருக்கும் சாகச நிகழ்ச்சிகள் பல இருக்கும் என்பது நாம் அறிந்தது தானே. அதில், அழகழ கான பெண்கள் ஆடுவதும், ஓடுவதும், தாண்டு வதும், கயிற்றில் நடப்பதும், கம்பு பிடித்துத் தாவுவதும் காணக் கண் கொள்ளாக் காட்சிகள் தான்.

ஆண்கள் தாம் பெரிய எடைகளைத் தூக்கிக் காட்டி, பார்வையாளர்களின் கைதட்டல்களைப் பெறுவார்கள். மேரி லூர்ட்ஸ், கரோலின் பாமனே, பெல்லா ஜினா என்பவர்கள் சகோதரிகள். அவர்கள் மூவரும் ஆண்களுக்கு இணையாக எடைதூக்கிக் காட்டி 18ம் நூற்றாண்டில் பெரிய சாதனையையே புரிந்திருக்கின்றார்கள்.

ஆண்கள் செய்வதற்கு மேலே என்னாலும் செய்ய முடியும் என்று மார்தட்டி பேர் தட்டிக் கொண்டு போன பெண்ணொருத்தி, பிரேக் நாட்டில் 1895ம் ஆண்டு ஒரு சாதனை புரிந்தாள். அவள் ஒரு குதிரை லாடத்தைக் கொண்டுவரச் செய்து, கையினாலே அதனை வளைத்துக் காண்

பித்தாள். அவள் பெயர் செல்வி எலிசபெத் அவளது எடை எவ்வளவு தெரியுமா? 121.3 கிலோ ஆகும்.

இதோ ஒரு கலிகால பீமி (பீமனுக்குப் பெண் பால்) ஒரு அமெரிக்க வீராங்கனை பெயர் **ஜோசபின் பிளட்** அவள் ஒரு அகன்ற பலகையை தலைக்கு மேலே பிடித்துக் கொண்டாள். அந்தப் பலகை மேலே 23 ஆண்கள் ஏறிக் கொண்டார்கள். அவர் களைத் தாங்கியவாறு தூக்கிப் பிடித்துக் கொண் டிருந்தாள் அந்தத் துடியிடையாள். அந்த 23 ஆண்களின் எடை எவ்வளவு தெரியுமா? 1616 கிலோ ஆகும். அவளுக்கு **'டைமண்ட்பெல்ட்'** விருதளித்து அந்த அரசாங்கம் கவுரவித்திருக்கிறது. எவ்வளவு பெரிய சாதனை இது? எத்தனை ஆண் களால் இது முடியும்?

இதோ இன்னொரு பலசாலியான பெண் 90 கிலோ உள்ள தனது கணவனை ஒருபக்கம் இடுப்பிலே தூக்கி வைத்துக் கொண்டு, தனது எதிரே உள்ள பல இரும்புக் குண்டுகளை ஒரு குண்டால் அடித்து விளையாடி, அத்தனை பேரை யும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினாள். அது மட்டுமல்ல. 131 கிலோ எடையைத் தூக்கி, ஓர் உலக சாதனை யையே ஏற்படுத்தியிருக்கிறாள். ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த சிறந்த விளையாட்டு வீரர் பிலிப் புரும்பாச் என்பவரின் மகள்தான். இந்த வீராங்கனை பெயர் கட்டி புரும்பாச்.

இதைவிட வியப்பு தரும் இன்னொரு சான்று எடை தூக்கும் சக்தி ஆண்களுக்குத்தான் என்பதை பொய்யாக்கி, உலக சாதனைகளைக் குறிக்கும் புத்தகமான கின்னஸ் புத்தகத்தில் ஒரு சாதனை வெளிவந்திருக்கிறது. பாரிஸ் நகரத்திலே 1956ம் ஆண்டு அக்டோபர் மாதம் நான்காம் தேதி ஏற்படுத்தப்பட்ட உலகசாதனை இது. பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஜேன்வெஸ்லி என்பவள் 178 கிலோ எடையைத் தூக்கியிருக்கிறாள்.

எடை தூக்குவதையே தொழிலாகக் கொண்டிருக்கும் எத்தனை ஆண்களால் இந்த எடையைத் தூக்க முடியும்? பெண்ணொருத்தித் தூக்கியிருக்கிறாளே!

எடைத் தூக்கும் போட்டி மட்டுமா? மல்யுத்தம், குத்துச் சண்டை போன்ற போட்டிகளில் எல்லாம் பெண்கள் தலையிட்டுக் கொண்டு, ஆலவட்டம் போட்டு வருகின்றார்கள். வெளிநாடுகளில் பெண்கள் குத்துச் சண்டைப் போட்டி போடுகின்றார்கள் என்றால், அங்கே டிக்கெட்டுகள் எல்லாமே விற்றுப் போகின்றன. காணக் கண்கொள்ளாக் காட்சிகளாக அல்லவா திகழ்கின்றன!

பிரான்சு நாட்டில் ஒரு காட்சியைக் கண்டதாக கிரில் பிரிவாலோவ் என்பவர் எழுதுகிறார் இப்படி. டீ.வியில் அந்தக் காட்சியை அவர் காண்கிறார். இரண்டு பெண்கள் குத்துச் சண்டை போடுகிறார்

கள். வலிமையுள்ள ஜிப்சி ஹோல்டன் என்பவள், சற்று ஆற்றல் குறைந்த டேனி ரூலஸ் என்பவளை முகத்திலும், உதட்டிலும் கண்களிலும் மாறி மாறிக் குத்தி, அதாவது இரத்தம் வரும் வரை குத்திக் கொணடிருக்கிறாள்

அந்தக் கோரக் காட்சியை குளோசப்பில் காட்டு கிறார் டீவி காமராமேன். அந்த காட்சியை மக்கள் கண்டு மகிழ்கின்றார்கள் இப்படி ஒரு போட்டி.

அழகு உருவங்களாக மேடைகளில் அலங்காரம் செய்து அன்ன நடை நடந்து அனைவரையும் மகிழ் வித்த பெண்கள் தாம் இன்று ஆண்கள் கலந்து கொண்டு போட்டியிடும் அத்தனை நிகழ்ச்சி களிலும் விடாப்பிடியாக நுழைந்து கொண்டு விளையாடிக் காட்டுகிறார்கள். வேடிக்கை ஊட்டு கிறார்கள். வியப்பில் ஆழ்த்துகிறார்கள். வெற்றியும் விளைவிக்கின்றார்கள்.

அப்படியென்றால் பெண்கள் அத்தனை விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கு பெற்றால், அவர்களுக்கு ஒன்றும் ஆகாதா? ஏதாவது நடந்து விடாதா? என்று கேட்பவர்கள் இன்னும் இருக் கின்றார்கள். ஏதாவது நடக்குமா அல்லது நடக்காதா?

# 10. அந்த நாள் முதல்

உலகில் நடைபெறுகின்ற விளையாட்டுக்கள் அத்தனையிலும் போட்டியிடுவதற்குப் பெண்கள் முயன்று விட்டனர் என்றால் அது பொய்யாகி விடும் முனைந்து விட்டனர், இரண்டறக் கலந்து விட்டனர் என்பதே பொருத்தமானதாகும்.

விளையாட்டுக்களிலே முரட்டுத்தனமானது, மூர்க்கத்தனமானது, காட்டுமிராண்டித்தனமானது என்று பலராலும் பலப்பட பேசப்படுகின்ற எடைத் தூக்கல், குத்துச் சண்டை போடுதல், மல்யுத்தம் புரிதல் என்னும் மூன்றையும் குறிப்பிடுவார்கள். அவைகளுக்குள்ளும் ஆரணங்குகள் கலந்து கொண்டு, ஆயிரக் கணக்கான பார்வையாளர் களிடையே ஆர்ப்பாட்டமான போட்டிகளைப் போட்டு, ஆணினத்தையே அயரடித்துக் கொண் டிருக்கின்றனர்!

ஐயோ! இதென்ன விபரீதம்? வேண்டாத அகோரம்! கலைப்பண்புள்ள மனித இனத்தில் காணக் கூடாத அலங்கோலம் என்று ஒப்பாரி வைப்

பவர்கள் ஒரு புறம். ஆணினத்திற்கு ஓர் அங்குலம் கூட பெண்ணினம் தாழ்ந்ததில்லை என்று நிரூபிக்கும் நிலைமைகள் தான் இவைகள் என்று புதுமைக் கோலம் போட்டுப் பேசுவோர் மறுபுறம்.

ஆனால் ஒன்றை மட்டும் ஒத்துக் கொள்ள அனைவரும் தயாராக இருக்கின்றனர். மேலே கூறப்பட்டுள்ள மூன்று விளையாட்டுக்களாவது, மென்மையான பெண்கள் கலந்து கொள்ளாத, ஆண்களுக்காக உள்ளவை என்பதாக இருந்து விட்டுப் போகட்டும் என்பது தான் அவர்கள் கோரிக்கை!

விளையாட்டுக்களிலே ராணி என்று போற்றிப் புகழப்படுகின்ற தனித்திறன் போட்டி நிகழ்ச்சி களான ஓடுகளப் போட்டிகள் அனைத்திலும் பெண் கள் போட்டியிடுகின்றனர். அவர்கள் உடல் வாகிற்கு ஒத்து வராது என்று மூன்று நிகழ்ச்சிகளை மட்டும் விலக்கி வைத்திருக்கின்றனர். ஒன்று சங்கிலிக் குண்டு வீசி எறிதல் (Hammer Throw) இரண்டு கோல் ஊன்றித் தாண்டுதல் (Polevault) மூன்றாவது முப்முறைத் தாண்டல் (Hop step and Jump) என்பனவாகும்.

சங்கிலியில் கோர்த்த இரும்புக் குண்டினை இடுப்பை வளைத்து, சுழற்றுவதற்கு வலிமை மிகு இடுப்புத் தேவையென்பதால், பெண்கள் உடல்

அமைப்பு அதற்கேற்றாற் போல இல்லை என்பதும், நீண்ட கழியினைத் தூக்கிக்கொண்டு ஓடி வந்து, தோள்களின் வலிமையால் கோலை ஊன்றி அந்தரத்தில் நின்று தாவிக் குதிப்பதானது தோள்களுக்கு ஊறு விளைவிக்கும் என்பதால், தோள்களைப் பாதிக்கக்கூடாது என்பதாலும்; மூன்று முறை தாண்டித் தாண்டிக் குதித்துத்தாவும் முறையாக மும்முறைத் தாண்டும் நிகழ்ச்சி அமைந்துள்ளதால், அப்படிக் குதிப்பது இடுப்பெலும்புகளைத் தாக்கும், விபத்தினை உண்டாக்கும் என்ற உடலமைப்பு கருதியே தவிர்க்கப்பட்டிருக்கின்றன என்பார்கள் உடற் கூறு வல்லுநர்கள்.

மென்மையான, கவர்ச்சியான முகத்திலே குத்திக் கொண்டு, இரத்தம் வழிய நிற்பதும், அன்பே வெளிப்படும் அழகு சாதனங்கள் ஆங்கார சொரூபங்களாக, அக்கினிப் பிழம்புகளாக விளங்கிக் கிடப்பதும், நினைப்பதற்கே சங்கடமாகத் தெரிகின்றதே! மெருகேறிய மெல்லிய உடல்களை கட்டிப் பிடித்து, பிடி போட்டு, மடக்கி, கசங்கிக் காட்சி தரும் மல்யுத்தங்கள் மங்கைகளுக்கு வேண்டாத ஒன்றுதான்.

ஒலிம்பிக் பந்தயங்களிலே முடி சூடாத மன்னனாகவும், உலக அரங்கிலே ஒப்பற்ற ஓட்டப்பந்தய வீரனாகவும் திகழ்ந்த அமெரிக்க வீரன் **ஜெசி ஓவன்ஸ்** ஒரு முறை இந்தியாவுக்கு விஜயம் செய்த போது, எதிராஜ் மகளிர் கல்லூரியில் ஒரு பாராட்டு

விழாவில் கலந்து கொண்ட நிகழ்ச்சி பற்றி ஒரு நண்பர் என்னிடம் கூறினார். விழாவில் கலந்து கொண்டு பேசிய வீரனிடம் கேட்கப்பட்ட கேள்வி பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளலாமா என்று.

பெண்கள் விளையாட்டுக்களில் கலந்து கொள்வது பற்றி எனக்கு மாறுபட்டக் கருத்து எதுவும் இல்லை. விளையாட்டு என்பது மன மகிழ்ச்சிக்காகவும், உடல் வளர்ச்சிக்காகவும் உண்டானது தான். ஆனால், போட்டிகள் என்று வரும் பொழுது, மனமகிழ்ச்சி மாறுபட்டுப் போகிறது அதன் தொடர்பாக, ஆக்ரோஷமான உணர்வு களையும் அதிகப்படியான பயிற்சி முறைகளையும் பெண்கள் உண்டாக்கிக் கொள்ள வேண்டியிருக் கிறது. அந்த முறையானது பெண்களின் அழகை யும், மென்மையையும், நளினத்தையும் மாற்றக் கூடிய அளவுக்கு வன்மை மிக்கதாகப் போய் விடு கிறது. இந்தியப் பெண்கள் எழிலுக்கும், மென்மைக் கும் நளினமான தோற்றத்திற்கும் பேர் போனவர் கள். அப்படியே அவர்கள் இருக்கட்டுமே! எங்கள் நாட்டுப் பெண்களைப் பற்றித் தான் உங்களுக்குத் தெரியுமே என்று நகைச்சுவையுடன் கூறி பதிலளித் ததாக என் நண்பர் கூறிய கருத்தினை இங்கு எழுதுவதற்குக் காரணம், பெண்கள் போட்டிக் காகத் தங்களை ஆயத்தம் செய்வது பொருந்தாத வேலையென்று உலக மகா வீரர்கள் கூறி வரும் கருத்தை வலியுறுத்துவதற்காகவே.

மாறுபட்டக் கருத்து ஒன்று எழும்போது தான், அதைச் செய்தே தீர வேண்டும் என்று வேகமும் வெறியும் உண்டாகும். அது இயற்கை தான். அந்த இயற்கை தான், அந்த இயற்கையான போக்கிற்கு எழிலார்ந்த மங்கையர் கூட்டமும் விதி விலக்கல்லவே!

ஆதி வரலாற்றினைப் படிக்கும் பொழுது ஒரு கருத்தைப் பார்க்கலாம் ஆதாம் ஏவாள் கதை தான் அது. தின்னக் கூடாது என்று ஒரு கனியை ஒதுக்கி வைத்தபோது, தின்ன வேண்டும் என்று ஏவாள் ஆசைப்பட்டு அக் கனியை உண்டதாகவும், அதனால் ஏற்பட்ட பலன் மிகப் பெரியது என்றும் நாம் அறிவோம்.

வேண்டாம் என்பதை விரும்புவதும், அதற்காக எத்தனைத் துயரங்கள் வந்தால் எதிர் கொள்வதும், ஏற்று நலிவதும். எதிர்நீச்சல் போட்டுப் போராடு வதும் மனித இயல்பு தான். சமுதாயத்தில் சரிபாதி அங்கமாகத் திகழும் பெண்கள், விளையாட்டுத் துறையிலும் இந்த உணர்வுடனேதான் செயல்படு கின்றார்கள்.

பழங்கால கிரேக்க வரலாற்றைப் படிக்கும் பொழுது ஆண்கள் கலந்து கொள்கின்ற விளையாட்டுப் பந்தயங்களைப் பெண்கள் பார்க்கக் கூடாது என்றும், மீறி பார்க்க வந்தால், மரணதண்டனை என்றும் கடுமையான சட்டம் இயற்றிக் கண்

கொத்திப் பாம்பாகக் காவல் காத்தாலும், அதையும் மீறி அரங்கத்திற்குள் நுழைந்து, அனைவரையும் உலுக்கிய பெண் பற்றியும் நாம் ஏற்கெனவே அறிந் திருக்கிறோம்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆண் களுக்கு இடையே பந்தயங்கள் என்றால், நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை பெண்களுக்கு இடையே யும் தனியாகப் போட்டிகள் நடந்தனவே!

ஆண்கள் ஜீயஸ் என்ற தெய்வத்தின் முன்னே பந்தயங்களை நடத்தினார்கள் என்றால், பெண் களும் ஹீரா என்னும் பெண் தெய்வத்தின் முன்னே நடத்தி வந்தார்களே!

ஆண்கள் பிறந்த மேனியுடன் பந்தயங்களில் ஓடினார்கள் என்றால், பெண்களும் அதற்குப் போட்டியாக, இடுப்பில் கட்டிய அரைப் பாவாடை யுடன், இடுப்பிற்கு மேலே அரை நிர்வாண மேனி யுடன், அவிழ்ந்த தலையுடன் ஓடி மகிழ்ந்ததாக வரலாறுகள் கூறுகின்றனவே!

அந்தக் காலம் தொடங்கி இந்த நாள் வரை, பெண்கள் தனித்தன்மை மிக்கவர்கள் என்று மட்டும் பெயர் பெறுவதில் பிரியமுள்ளவர்களாக விளங் காமல்; ஆண்களுக்கு இணையாக ஆற்றல் மிகு காரியங்களில் ஈடுபடுவதிலும் ஆர்வமும் அக்கறை நிறைந்தவர்களாகவும் விளங்கிவந்திருக்கின்றார்கள்.

பேரரசர்களுக்கு இணையாக ஆட்சி செய்திருக்கின்றார்கள் பெரும் தந்திரமும் வல்லமையும், உடைய மதியூகிகளாகப் பணிபுரிந்திருக்கின்றார்கள் போர்க்களங்களில் புகுந்து வீரர்களை வெட்டி வீழ்த்தியிருக்கின்றார்கள். எல்லா நிலையிலும் எல்லா கலையிலும் பெண்கள் ஆண்களுக்கு சரி நிகர் சமானமாகவே விளங்கி வந்திருக்கின்றார்கள். அதனால் அவர்களுக்கு என்ன ஆகிவிட்டது?



# 11. என்ன ஆகும்?

பெண்கள் விளையாடினால் என்ன ஆகும் என்ற கேள்வி இன்று நேற்று எழுந்ததல்ல. மனித சமுதாயம் விளையாட்டுக்களில் மனம் விரும்பி ஈடுபட்ட தினத்திலிருந்தே தொடங்கி விட்டது.

மக்களினத்தின் சரிபாதி மங்கையினம் அல்லவா! அதனால் ஆதிகாலந்தொட்டே இந்த அரியபிரச்சினை ஆரம்பமாகி விட்டது.

பெண்களை வீட்டோடு வைத்துப் பூட்டிக் காத்த நாடுகள் இருந்தன. பெண்கள் முகத்தை வெளியே காட்டவே கூடாது என்று திரையிட்டுப் போர்த்திய நாடுகளும் இருந்தன. வெளியே உலவினாலும், விளையாட்டுக்கள் பக்கம் வரக் கூடாது என்று விரட்டிய நாடுகளும் இருந்தன.

என்றாலும், பெண்கள் இல்லாமல் விளை யாட்டுக்கள் இல்லை என்றுதான் வரலாறுகள் சுட்டிக் காட்டுகின்றன.

இன்று உலகமெங்கும் புகழ்பெற்ற ஆட்டமாக விளங்குவது டென்னிஸ் ஆட்டம். இந்த ஆட்டத்

தில் உலகப் புகழ் பெற்ற சிறந்த வீரர்கள் நிறைந்த இடமாகத் திகழ்வது அமெரிக்க நாடுதான். இந்த டென்னிஸ் ஆட்டம், அமெரிக்காவில் காலூன்றக் காரணமாக இருந்தவள் செல்வி மேரி அவுட்டர் பிரிட்ஜ் என்பவள். (இந்த வரலாற்றை அறிய விரும்பும் வாசகர்கள், விளையாட்டுக்களில் விநோதங்கள் என்ற எனது புத்தகத்தில், 55வது பக்கக் கட்டுரையைப் படிக்கவும்.)

அவுட்டர் பிரிட்ஜ் பட்ட அவதிக்குப் பரிசு, இன்று அகில உலகத்தில் அமெரிக்கா தலை சிறந்த நாடாகத் திகழ்கிறது.

கூடைப் பந்தாட்டம் என்ற ஆட்டத்தை டாக்டர் ஜேம்ஸ் நெய்சுமித் என்ற அமெரிக்கர் கண்டுபிடித்த உடனே, பெண்களுக்கும் இது போல ஓர் ஆட்டம் வேண்டும் என்று அமெரிக்கப் பெண்மணிகள் போராடினார்கள். கூடைப் பந்தாட்டம் எங்களால் ஆட முடியாது என்று, வலைப் பந்தாட்டம் (Net Ball) என்று ஓர் ஆட்டத்தைக் கண்டு பிடித்தவளும் ஒரு பெண்தான்.

பெண்கள் பந்தாட்டங்களில் சிறப்பான இடம் பெறவேண்டும் என்று விரும்பினால், அதற்காக உதவும் ஆயத்த ஆட்டம் எறி பந்தாட்டம் (Throw Ball) தான். அந்த ஆட்டத்தைக் கண்டு பிடித்து உருவாக்கியவர் திருமதி பக் என்பவர்தான்.

ஆகவே, ஓர் ஆணின் வெற்றியின் பின்னே ஒரு பெண்ணின் தியாகம் மறைந்து கிடக்கிறது என்பார்களே, அதைப் போல, ஒவ்வொரு விளையாட்டின் வளர்ச்சியின் பின்னாலே, பெண்களின் தியாகமும் பெரும் உழைப்பும் நிறைந்து அதே நேரத்தில் மறைந்து கிடக்கிறது.

பெண்கள் விளையாட்டுக்களில் பேருணர்வோடுதான் பங்கு பெற்று வருகிறார்கள் என்பதை வரலாற்று நிகழ்ச்சிகள் மிக அருமையாக நிரூபித்துக் காட்டி வருகின்றன. ஒரு ஐம்பது ஆண்டு புள்ளி விவரக் கணக்கைப் பாருங்கள்.

1934ம் ஆண்டு 100மீட்டர் ஓட்டத்தில் பெண்கள் ஓடிய சாதனை நேரம் 11.7 நொடிகள். ஆண் ஓடியநேரம் 10.3 நொடிகள். அதாவது 13.6 சதவிகிதம் ஆண்கள் விரைவாக ஓடியிருக்கிறார்கள்.

அதே தூரத்தை 1954ல் ஓடிய ஆண்கள் பெண்கள் நேரத்தைக் கணக்கிட்ட போது, அதிக வித்தியாசமாக இருந்த சதவிகிதம் 11.4 ஆக குறைந்தது.

1974ல் இந்த சதவிகிதம் 9.1 ஆகக் குறைந்து போனது. இப்பொழுது இன்னும் குறுகிக் கொண்டே வந்து ஆண்கள் வேகத் தோடு பெண்கள் வேகமும் இணையானதுதான் என்பதை நிரூபிக்கும் விதத்தில் முன்னேறிக் கொண்டே போகிறது

ஆண்கள் பெண்கள் சாதனைகளை நாம் ஆராயும்பொழுது ஆண்களின் சாதனை வேகத்தைவிட, பெண்களின் சாதனை வேகம் அசுரத்தனமாக இருக்கிறது என்பதையே அறிய முடிகிறது.

பல போட்டி நிகழ்ச்சிகளில் கடந்த முப்பது ஆண்டுகால சாதனைகள், பெண்கள் விளை யாட்டுப் போட்டிகளில் வேகமான முன்னேற்றத் தைப் பெற்றிருக்கின்றார்கள். அத்துடன் நில்லாமல், ஆண்களின் சாதனைகளையும் மிஞ்சியும் இருக் கின்றார்கள்.

நீண்ட தூர ஓட்டம், நீச்சல் போட்டிகள், மலையேற்றம், குதிரையேற்றம், படகோட்டும் போட்டிகள், மோட்டார் படகு ஓட்டும் போட்டிகள், பாராசூட்டுடன் வானத்திலிருந்து குதித்தல், மோட்டார் கார் ஓட்டுதல், இந்தப் போட்டிகளில் எலலாம், பெண்கள் ஆண்களை மிஞ்சும் வீராங் கனைகளாகவே விளங்குகின்றனர்.


இந்த இணையற்ற சாதனைகளின் அடிப் படைத் தன்மையை ஆராய்ச்சி செய்த வல்லுநர்கள் ஒரு கருத்தை உன்னிப்பாக விளக்கிக் காட்டு கின்றார்கள்.

அதாவது, பெண்களின் உடல் அமைப்போ, அல்லது மருத்துவ முறைக் குறிப்போ எதுவும் பெண்களை விளையாட்டுக்களிலிருந்து வேறு

படுத்திவிட முடியாது. இதனால் பெண்களின் உடலமைப்பு எந்த விதத்திலும் பாதிக்கப்படு வதில்லை.

சிறப்பாக விளையாட்டுப் பயிற்சிகளைப் பெறும் பெண்களின் உடல் உறுப்புக்கள் இன்னும் சிறப் பாகவே செயல்படுகின்றன. ஆண்களின் உடல மைப்பானது பயிற்சியால் பக்குவமும் பதமும் பெறுவது போலவே பெண்களின் உடலும் பரிபூரணத்துவம் பெறுகின்றது.

அதுபோலவே, பிராணவாயுவை உட்கொள்ளு கின்ற அளவும் சரிசமமாகவே இருக்கிறது. இன்னும் பல உள்ளன.



# 12. நன்மை என்பதே உண்மை

ஆண்களும் பெண்களும் தோற்றத்தில் வித்தியாசமாக இருக்கின்றார்கள். எடையிலும் உடல் அமைப்பிலும் சற்று மாற்றமாக விளங்குகின்றார்கள். என்றாலும், ஆண்பெண் திறமையில் அனைவரும் ஒன்றாகவே உலா வருகின்றார்கள்.

பெண்கள் உடலில் உள்ள கொழுப்புச்சத்து குறைக்கப்பட்டால், அதாவது குறைத்து விட்டால், ஆண் பெண் திறமையில் உள்ள இடைவெளி மறைந்தே விடும் என்றே ஆராய்ச்சி வல்லுநர்கள் அழுத்தந்திருத்தமாகக் கூறுகின்றார்கள்.

இதற்காக ஓர் உதாரணத்தைக் காட்டுவார்கள் வல்லுநர்கள் பெண்கள் நிகழ்த்துகின்ற உலக சாதனை எல்லா ஓட்டப் பந்தயங்களிலும் வெகு வேகமாக இருக்கின்றன. அடிக்கடி மாற்றி எழுதப் படும் பெண்களின் சாதனைப் பட்டியல், முன்பு ஆண்களின் சாதனைப் பட்டியல் ஆமை வேகத் திலே இருப்பதையும் நம்மால் காண முடிகிறது.

இதுவே பெண்களின் பேரெழுச்சி மிகுந்த ஈடுபாட்டை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. அதனால்தான் பெண்கள் விளையாட்டும், பெண்கள் பங்கு பெறும் தனித்திறன் போட்டிகள் எல்லாமே, பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்திழுக்கின்ற கவர்ச்சிக் காட்சிகளாக அமைந்துவிடுகின்றன.

### மாதவிலக்கு ஒரு தடை

பெண்களுக்குள்ள பலவீனமான ஒன்று மாதவிலக்கு அதனால் தான் விளையாட்டு அவர்களுக்கு வேண்டியதில்லை என்று வெறித்தனமாக எதிர்ப்பவர்கள் இருக்கின்றார்கள்.

இந்த மாதவிலக்கு நேரத்தில், மாதர்களின் போட்டித் திறமை, இயல்பாக இருக்கின்ற ஆற்றல் நுணுக்கம் குறைகின்றது என்பது உண்மை தான். அதாவது 30% திறமை குறைகிறது என்பதாகவும் கணக்கிட்டிருக்கின்றார்கள். அதற்குரிய காரணம் என்னவென்றால், அவர்களுக்கு அப்பொழுது ஏற்படுகின்ற அடி வயிற்று வலி தான்.

மாதவிலக்குத் தொடங்குகின்ற நேரத்தில் எழுகின்ற வலி, உண்டாகின்ற மனக் குழப்பம், கிலேசம் எல்லாம் ஆரம்பத்தில் ஒரு விதமான உலைச்சலை ஏற்படுத்தி விடுகின்றன என்பது உண்மை தான். ஆனால் அந்த அதிர்ச்சியும்

தளர்ச்சியும் மாத விலக்குத் தொடங்கியவுடன் முடிந்து போகின்றன. காரணம் வலி குறைந்து போகிறது. அதற்குப் பிறகு கொள்கின்ற தற்காப்புப் பணிகள் தன்னம்பிக்கையை ஊட்டி, திறம்படச் செயல்பட வைக்கின்றன.

மாத விலக்குக்கு முன்னர் அவர்கள் களைத்துப் போவதும், எரிச்சல்பட்டுக் கொள்வதும், உணர்ச்சி வசப்பட்டுத் தவிப்பதும், மனம் உடைந்து போவதும் இயற்கையான ஒன்று தான். ஆனால், அத்தனை அழிவுச் சக்திகளும், விலக்குப்பின்னர் வெளியேறிப் போகின்றன. விடுதலை அளித்து விடுகின்றன. வேகத்தையும் விவேகமான ஆற்றலையும் அல்லவா அளித்து விடுகின்றன.

**கர்ப்பமும் ஒரு காரணம்**

பெண்கள் வீராங்கனைகளாக விளங்கலாம். ஆனாலும் அவர்களும் அன்புக்குரியவர்கள் தான். திருமணமானவர்கள் தாய்மைப் பேறுக்கும் ஆளாவார்கள் அல்லவா! அப்பொழுது அவர்கள் நிலை எப்படி என்ற ஒரு கேள்வியும் எழலாம்.

தாய்மை அடைந்து முதல் மூன்று மாதங்கள் வரையில் கூட எந்த விதமான கஷ்டமுமின்றி விளையாட்டுக்களில் ஈடுபடலாம் என்று மருத்துவர்கள் தைரியமாகக் கூறுகின்றார்கள்.

அதற்குப் பிறகு குழந்தை வயிற்றில் வளர வளர தாயின் எடை அதிகமாகிப்போவது, அவளின்

திறமையைக் குறைத்து விடுகிறது. குழந்தை பிறப்பிற்குப் பிறகு, பெண்கள் போட்டிகளில் பங்கு பெறுவது தான் அறிவுடைய செயலாகும்.

குழந்தை பெற்றதற்குப் பின், பெண்களின் திறமையில் வியக்கத்தகு மாற்றங்கள் ஏற்பட்டு, அவர்கள் முன்பு, பெற்றிருந்த திறமையை விட அதிகமாகி புகழ் பெற்றிருக்கின்றனர் என்பதற்கு எத்தனையோ வரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன.

ஒலிம்பிக் பந்தயத்தில் நான்கு தங்கப் பதக்கங்களை வென்று சாதனைபுரிந்த நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த திருமதி. பிளாங்கர்ஸ் கோயன், இரண்டு குழந்தைகளுக்குத் தாயாக இருந்த போது பெற்ற புகழாகும். இந்தியாவைச் சேர்ந்த ஜலஜ நாதன் இஸ்ரேலைச் சேர்ந்த எஸ்தர் ராட் போன்ற பலர். இக்கருத்துக்கு இனிய சான்றுகளாகத் திகழ்கின்றார்கள்.

பெண்களுக்கு அகலமான இடுப்புப் பகுதி (Pelvis) உண்டு. ஆனால் விளையாட்டில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு கொஞ்சம் அகலம் குறைந்ததாக இருக்கும். இது விளையாட்டுக்கு உதவும். ஆனால் குழந்தைப் பேற்றுக்கு கஷ்டத்தைக் கொடுக்கும். என்றாலும், குழந்தைபெறும் நேரத்தையும் குறைத்து வலியையும் குறைத்து உதவக் கூடும் இந்த விளையாட்டுப் பயிற்சி என்கிறார்கள். ஆகவே, இதுவும் பெண்கள் விளையாட்டில்

ஈடுபட, உதவுவனவாகவே இருக்கிறது என்ற உண்மையை நாம் புரிந்து கொள்ளலாம்.

### பெண்கள் அழகும் நளினமும்

பெண்களின் பொலிவும் தெளிவும், அழகும் நளினமும் விளையாட்டில் ஈடுபட்டால் வீணாகிப் போய்விடும். பாழடைந்து போகும் என்று பதை பதைப்பவர்கள் உண்டு. அதுதான் இல்லை.

அவர்கள் செய்யும் அற்புதமான உடற்பயிற்சி அவர்களை அழகு மிகுந்தவர்களாகவே ஆக்கிவிடு கிறது. வேண்டாத சதைகளை விரட்டியடிக்கிறது. நரம்பிலே வலுவேற்றுகிறது. எலும்பிலே திறன் ஏற்றுகிறது. சீராக செயல்படத் தூண்டுகிறது.

விளையாட்டில் ஈடுபடுவதால், பெண்களை எப்பொழுதும் இளமையாகவே இருத்தி வைக்கிறது. அவர்கள் தோற்றத்திலும் நடைமுறைகளிலும் நளினம் நிறைந்தவர்களாக ஆகின்றார்கள். உடலால் மட்டுமல்ல, சிந்தனையிலும் செயலிலும் கூட அவர்கள் என்றும் இளமையாகவே விளங்கு கின்றார்கள். இன்பமாக வாழ்கின்றார்கள்.

### வாழ்வு தரும் விளையாட்டு

உடல் உறுப்புக்கள் நன்கு உழைக்க வேண்டும். அப்பொழுது தான் அவை உறுதி

பெறும் உடலைக் காக்கும் உண்மையான வாழ்வையும் உயர்ந்த இன்பத்தையும் பெறமுடியும் என்பது இயற்கையின் எழுதாத சட்டமாகும்.

பெண்களுக்கும் அந்த நீதியும் நியதியும் தேவைதான். அவர்களும் நோயற்ற வாழ்க்கை வாழவேண்டாமா?

பெண்களும் வாழ்க்கையில் பல துறைகளில் புகுந்து எதிர் நீச்சல் போட்டுத்தான் வாழ்கின்ற பயங்கர காலமாக இன்று ஏற்பட்டிருக்கும் ஒரு நூதனமான சூழ்நிலை குடும்பச் சூழ்நிலை மற்றும் பல பிரச்சனைகளுக்கு ஈடு கொடுக்க அவர்கள் போராடி வாழ வேண்டிய பொல்லாத நிலையும் உண்டு.

விளையாட்டில் பெண்கள் ஈடுபடுவதால், மனக்கட்டுப்பாடு பெறும் மார்க்கத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது தனது நிலைமையையும் தகுதியையும் திறமையையும் உணர்ந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெறமுடிகிறது. கட்டுப்பாட்டோடு வாழும் கடமை உணர்வினையும் வளர்த்துக் கொள்ள முடிகிறது.

வெற்றியில் பெருமிதம் கொள்ளவும். தோல்வியைத் தாங்கிக் கொள்ளும் குணத்தையும் கொள்ளுகின்ற பதமான நெஞ்சினை பெறமுடிகிறது. இப்படித்தான் இருக்க வேண்டும். இவ்வாறு தான்

வாழ்ந்து கொள்ளவேண்டும் என்று வரையறைக் குட்பட்ட வாழ்க்கை நெறியை விளையாட்டுக் கற்றுக் கொடுத்து விடுகின்றது.

இவ்வளவு இனிய பரிசுகளை ஏந்திமையர்க்குத் தருகின்ற விளையாட்டுக்களை "ஏற்றதில்லை, நாங்கள் ஏற்பதில்லை" என்று எதிர்வாதம் செய்கின்ற 'இயலாத' ஆட்களையெல்லாம் பெண்கள் ஒதுக்கித் தள்ளிவிட்டு, உதறி ஓரத்தில் நிற்க வைத்து விட்டு, விளையாட்டுக்களில் வந்து கலந்து கொள்ள வேண்டும்.

ஆனால் ஒன்று, பெண்கள் அனைவரும் பெண்களுக்குரிய விளையாட்டை, பெண்களுடனே தான் ஆட வேண்டும். பெண்களுடனே தான் போட்டியிட வேண்டும்.

ஆண்களுக்கு நிகராக வர வேண்டும் என்ற ஆசை இருக்கலாம். ஆனால் ஆண்களாக ஆகி விடவேண்டும் என்ற ஆவேசம் வரக்கூடாது. ஆண்கள் செய்கின்ற பயிற்சிகளையெல்லாம் செய்தே தீருவோம் என்றால் அது ஆரணங்களுக்கு ஏற்காது.

முகம் விகாரமாகும். தசைகள் முறுக்கேறும் தண்மையான நளினம் தடைபட்டுப் போகும்.

பெண்கள் எப்பொழுதும் பெண்கள் தான் என்கின்ற பெரிய உண்மையை மறக்காத வரை,

பெண்கள் விளையாட்டில் ஈடுபடுவதால் ஒன்றும் ஆகாது.

விரைவு வேண்டும். உயர வேண்டும். வலிமையாக இருக்க வேண்டும் என்ற வாழ்க்கைத் தத்துவம் தான் விளையாட்டின் தத்துவமாகவும் விளங்குகிறது. இந்தத் தத்துவத்தை நடை முறைப் படுத்த சீரான போக்கும், நேரான நெறிகளும் தேவை.

பெண்கள் உடல் உறுப்புக்களை, மனோ பாவத்தை, இயற்கையான இதத்தை மாற்றுகின்ற எந்தக் காரியத்திலும் ஈடுபடாமல் பெண்கள் விளையாட வேண்டும்.

பெண்கள் விளையாடினால் என்ன ஆகும்?

ஒன்றும் புதிதாக ஆகிவிடப் போவதில்லை.

ஒரு பெண் அல்லது ஒரு தாய் வலிமையோடு இருந்தால் அந்தக் குடும்பம் வலிமையான குடும்ப மாகவே விளங்கும். வலிமையான குடும்பமே சமுதாயம் அமைய உதவும். வலிமையான சமுதாய மே வலிமையான நாட்டை வடிவமைத்துக் கொடுக்கும். ஆகவே, ஒரு பெண்ணை வலிமை யாக்கி, அதன் மூலம் நாட்டை வலிமையாக்கிட உதவும் விளையாட்டில் பெண்கள் எல்லோரும் கலந்து கொள்ள வேண்டும்.

அதுதான் இன்றைய எதிர்பார்ப்பு. இனிய வருங்காலத்தின் இதமான பூரிப்பாகும்.

# 13. பெண்கள் ஆண்களைவிட அதிக நாள் வாழ்வது ஏன்?

பொதுவாக ஆண்களைவிடப் பெண்கள் சராசரி 3.6 ஆண்டுகள் அதிக காலம் உயிர் வாழ்வதாக உலகப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. வளர்ச்சி அடைந்த நாடுகளில் இந்த வயது வித்தியாசம் இன்னும் அதிகம். (இது சராசரிக் கணக்கு) இதற்கான காரணங்களை மாஸ்கோ "வளர்ச்சி உயிரியல் ஆராய்ச்சி நிலைய" நிபுணர் ஒருவர் விளக்கியுள்ளார். அதன் சாராம்சம் வருமாறு :-

சூழ்நிலைகளைத் தாங்கும் சக்தி பெண்களிடம் அதிகம் உள்ளது.

சூழ்நிலை மாறிக் கொண்டேயிருக்கிறது. அதற்கு ஏற்ப "மாறிக் கொள்ளும் இயல்புள்ள" உயிரினங்கள் தாம் நிலைத்திருக்க முடியும். மனித இனம் சம்பந்தப்பட்ட வரை, புதிய சூழ்நிலை

அம்சங்களைச் சேகரித்துக் கிரகித்துக் கொள்ளும் பணியை ஆண்பாலார் செய்ய வேண்டியிருக்கிறது.

இந்தப் புதிய அம்சங்களைப் பேணிப் பாதுகாத்து அடுத்த தலைமுறைகளுக்கு விட்டுச் செல்லும் பணி பெண்களைச் சேர்ந்தது.

இவ்வாறு புதுமையின் தாக்கல்களை உணரும் "Sensing" விதத்தில் ஆணின் உடல் அமைப்பு நாசூக்கானதாக மென்மையுடையதாக உள்ளது; இதில் எதிர்ப்படும் ஆபத்துக்களைத் தாங்கும் சக்தி அதற்கு இல்லை!

உதாரணமாக, பெண்ணின் தோலை அடுத்து அதிக கொழுப்புச் சக்தி படிந்திருப்பதால் குளிரைத் தாங்கும் ஆற்றல் ஆண்களைவிட அதிகம்.

இதே போல், மாரடைப்பு, புற்று நோய், மன நோய் போன்ற நவீன வியாதிகள் பெண்களைவிட ஆண்களையே அதிகமாக பீடிக்கின்றன. மற்றும் மனித இனத்தில் பொதுவாக ஏற்படும் மாறுதல்கள் முதலில் ஆண்களிடமே வெளிப்படுகின்றன. உதாரணமாக, பெண்களை விட ஆண்கள் உயரமாக இருக்கின்றனர். இதன் விளைவாக மனித இனம் முழுவதன் உயரம் அதிகரித்து வருகிறது.

சூழ்நிலையின் பாதிப்பைச் சமாளிக்கும் திறனை ஆண் பெற்றால் பெண்ணை விட அதிகக் காலம் அவன் ஜீவித்திருக்க முடியும். தர்க்க ரீதியாகப்

பார்த்தால் பெண்ணைவிட ஆணின் ஆயுள் தான் கூடுதலாக இருக்கவேண்டும். கர்ப்பவாசம் முதல் "பூப்பு" எய்துவது வரை ஆணைவிட வேகமாகப் பெண் முன்னேறுகிறாள். பிறகு அவளுடைய வளர்ச்சி நின்று விடுகிறது. ஆணின் வளர்ச்சியோ நிற்பதில்லை. 45-55 வயது வரை தான் ஒரு பெண் இன விருத்தி செய்ய முடியும். ஆணுக்கு 60-70 வயது வரை இந்தச் சக்தி உண்டு. எனவே, சீக்கிரமாக முதிரும் சீக்கிரமாக உதிரவும் வேண்டும். ஆனால் ஆணின் இயல்பான ஒரு பலவீனம் இங்கே குறுக்கிடுகிறது.

அதாவது நீரோட்டத்தோடு போகாமல் எதிர் நீச்சல் போடுவது ஆணின் சுபாவம். இதன் மூலம் அவன் தனக்கு ஆபத்தைத் தேடிக்கொள்கிறான்.

அதனால் தான் பெண்களுக்கு விளையாட்டால் பயன்கள் தான் அதிகமே தவிர பாதிப்பு இல்லை என்னும் முடிவுக்கு நாம் வருகிறோம்.

பெண்கள் விளையாடினால் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் பேரானந்தம். சமுதாயத்துக்கோ பெரும் லாபம்.

# 1. சீட்டாட்டத்தின் கதை

சீட்டாட்டம் என்றால் சூதாட்டம் என்று சொல்வார்கள் பலர். ஆனால் அது சிந்தனை உள்ள வர்கள் மட்டுமே ஆடக்கூடிய அறிவார்ந்த ஆட்டம் என்று அதை ஆடுபவர்கள் பெருமையாகப் பேசிக் கொள்வதை நாம் அடிக்கடி கேட்டுக்கொண்டு வருகிறோம்

இரவு பகல் பாராது, இந்த உலக சூழ் நிலையையே மறந்து, கையில் வைத்திருக்கும் சீட்டுக்களுடன், கண்களையும் கருத்துகளையும் மேயவிட்டுக் கொண்டு 'ஹாயாக' இருக்கும் ஆட்டக்காரர்களைப் பார்க்கும் பொழுது, இது சூதாட்டம்தான், சிந்தனையைக் கவர்ந்து செயலற்ற வராக்கி விடும் பேயாட்டம் தான் என்று நம்மை நினைக்கத்தூண்டுவதும் உண்மைதான்.

ஆனால், சீட்டாட்டம் பிறந்த கதையை நாம் பார்க்கும் பொழுது, நாம் கொண்டிருக்கின்ற கருத்து தவறு என்பது உண்மையாகிறது. இப்பொழுது மாற்றம் என்று பயன்படும் வார்த்தைக்கு முற்

காலத்தில் மணம் என்று பொருள் இருந்ததாம். மணத்தின் மானம் போய் நாற்றம் ஆகி விட்டிருப்பதுபோல் சீட்டாட்டமும் அதன் பிறப்பின் பெருமை தேய்ந்து, விலை உயர்ந்த கால் செருப்பின் தன்மை போல் வீழ்ச்சியடைந்து போயிருக்கிறது.

பிரபுக்கள், அரசகுடும்பத்தினர், அறிவாளிகள் பலருக்கு பொழுது போக்குவதற்காகப் பிறந்த அற்புதக்கலை இது என்று பலர் கூறுகின்றார்கள்.

சேனைத் தலைவர்கள் தங்கள் படைகளை எப்படி நடத்தி, முன்னேற்றிச் சென்று வெற்றி பெறச் செய்வது என்பதைத் தீர்மானிக்கவும், திட்டமிடவும், திருப்தியாகப் பயன் படுத்தவும் இந்த ஆட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர் என்றும் சிலர் இந்த ஆட்டத்தின் தோற்றத்திற்குக் காரணம் கூறுவார்கள்.

சீட்டாட்டம் தோன்றிய நோக்கம் நமக்குத் தெரிகிறதே ஒழிய, தோற்றுவித்தவர் யார் என்று தான் தெரியவில்லை. வரலாற்றாசிரியர்கள் ஆட்டத்தின் வளர்ச்சியை சுட்டிக்காட்டுகின்றார்களே தவிர, தோன்றிய நிலையை தெள்ளத் தெளிவாக சுட்டிக்காட்ட இயலாத இக்கட்டான நிலையிலேயே இருந்து விட்டுப் போய்விட்டார்கள்.

தனிப்பட்ட ஒருவரைத் தான் யாராலும் ஆதிகர்த்தா என்று கூற இயலவில்லை என்றாலும்

இந்த நாட்டில் தான் இது முதலில் தோன்றியது என்று கூட வரலாற்றாசிரியர்களால் கூற முடிய வில்லை என்றால், இந்த நிலைமையை எப்படி விவரிப்பது? இதற்கென்று ஒரு வடிவம் தராத மருட்சி நிலையில் தான் இருக்கின்றார்கள்.

ஆனாலும், வரலாற்றாசிரியர்கள் தாங்கள் ஆராய்ந்த குறிப்புக்களின்படி ஒரு சில கருத்துக் களைக் கூறிச் சென்றிருக்கின்றார்கள் என்றாலும் ஒவ்வொருவர் கருத்தையும் நாம் உன்னிப்பாகப் பின் தொடரும் பொழுது, குழப்பங்களும் குதர்க்க நினைவுகளும் கூடவே வருவது தவிர்க்க இயலாத தாகவே இருக்கின்றன.

ஒவ்வொருவர் கருத்தும், ஒவ்வொரு பக்கமாக நம்மை இட்டுச் செல்வதால், திக்குத் தெரியாத காட்டில் வழி தேடித் திரியும் புதுப் பயணிபோல, நாமும் புதிர்களுக்குள்ளே சதிடராத்தான் வேண்டி யிருக்கிறது.

என்றாலும், வரலாற்றாசிரியர்கள் வழிகளில் சென்றாலும், நமக்குத் தேவையான முறைகளில் அந்த நீரோட்டத்திலிருந்து உரியவற்றை பக்குவ மாக எடுத்துப் பயன்படுத்திக் கொண்டு, சீட்டாட் டத்தின் தொடக்கத்தையும் தோற்றத்தையும் நாம் ஓரளவு தெரிந்து கொள்வோம்.

இது ஒரு அவசியமான முயற்சிதானா என் பவரும் உண்டு. அறிவார்ந்த ஒரு ஆட்டத்தின்

நோக்கம், அநாவசியமான குற்றச் சாட்டுக்கு ஆளாகியிருப்பது என்கிற ஓர் சூழ்நிலையை வைத்து எழுதப்படுகின்ற வரலாற்றுக் குறிப்புகளாகும்.

**எந்த நாடு ?**

எந்த நாட்டில் சீட்டாட்டம் தோன்றியது என்ற குறிப்பினைத் தேட ஆரம்பித்த உடன், எல்லா நாடுகளும், எங்கள் நாடுதான் தோன்றிய இடம் என்று நம்மை துரத்திக் கொண்டு வருகின்றன. அதனால், ஒவ்வொரு நாடாக, ஒவ்வொரு கருத்தாக தொடர வைத்து நாம் நமது குழப்பத்தைக் குறைத்து கொள்ளலாம்.



# 2. நாடுகளும் பாடுகளும்

---

எங்கே தோன்றியிருக்கலாம் இந்த சீட்டாட்டம் என்று எண்ணியவுடனே, இன்று முன்னணியில் இருக்கும் சில நாடுகள் முண்டியடித்துக் கொண்டு முன்னேவந்து, மார்தட்டி நிற்கின்றன. 'தாயகம் எங்கள் நாடுதான்' என்று தோள் உயர்த்தி நிற்பதிலே, தலையாய நாடு என்று சீனாவைச் சொல்லலாம்.

**சீனமே முன்னோடி :** சீட்டாட்டக்கலை சீனத்தில்தான் முதன் முதலில் தோன்றியது என்று ஒரு வரலாற்றாசிரியர் தன் விளக்கத்தைத் தொடங்குகிறார். சீட்டாட்டம் சீனத்திலே உலவியகாலம் கி. பி. 1120ம் ஆண்டு என்று குறிப்பிடுகின்றார். அவர் கூறுகின்ற காரணமாவது, சீனத்தார் தங்களது படைவீரர்களுக்கு படை நடத்தும் யுக்திகளை விளக்குவதற்காக சீட்டாடும் முறையைப் பயன்படுத்தினார்கள் என்று கூறியதுடன், இந்தப் பழக்கம் சீனரிடமிருந்து மூர்ஸ் (Moors) இனத்து மக்களிடம் கைமாறியது என்றும் கூறுகின்றார். மூர் இனத்தவர் ஸ்பெயின் நாட்டின்மீது

படையெடுத்த பொழுது, இதனை ஐரோப்பிய மக்களுக்குக் கற்றுத்தந்து அறிமுகப்படுத்தினார்கள் என்று பிரமாதப்படுத்துகிறார் பெயர் விவரம் தெரியாத அந்த வரலாற்றாசிரியர்.

**மூர் இனத்தவர் முன்னே நிற்கிறார்கள் :** அப்படி யென்றால், மூர் இனத்தவர் ஸ்பெயின் நாட்டின் மீது படையெடுத்த காலம் கி.பி. 8-ம் நூற்றாண்டு என்று வரலாறு கூறுகிறது. சீன நாட்டினர் இதனைக் கையாளத் தொடங்கியது. கி பி. 1120ல் என்றால், இவர்கள் அதற்கும் நானூறு ஆண்டு களுக்கு முன்பே சீட்டாட்டம் ஆடியிருக்கிறார்கள் என்றல்லவா அர்த்தம் ஆகிறது. சீன நாட்டில் சீட்டாட்டம் ஆரம்பமாவதற்கு முன்னமேயே மூர் இனத்தவரிடையே விளங்கிவந்திருக்கிறது என்ப தால் மூர் இனத்தவரே முன்னே நிற்கின்றார்கள். அவர்கள்தான் ஐரோப்பிய மக்களுக்கு அறிவுறுத்தி, இந்த ஆட்டத்தை அறிமுகப்படுத்தினர் என்று கூறுகின்ற இன்னொரு வரலாற்றாசிரியரின் குறிப்பு எதிர்வாதமாக அல்லவா விளங்குகிறது!

**பிரான்சுக்குப் பெருமை**

பிரெஞ்சுத் தேசத்தை கி. பி. 1392ம் ஆண்டு **ஆறாம் சார்லஸ்** என்னும் அரசர் ஆண்டு வந்தார். நாட்டு மக்களிடையே நல்ல மதிப்பையும் பேரும் புகழையும் பெற்று திகழ்ந்த அந்த மாமன்னர், விதி வசத்தாலோ என்னவோ மனோவியாதியால் மூளைக்கோளாறு ஏற்பட்டு, மன நோயுடன்

வாழலானார். பைத்தியக்கார மன்னன் என்ற பெயருடன் அவர் வாழ வேண்டிய சூழ்நிலையில், இந்த சீட்டாட்டம் அவருக்காக உருவாக்கப்பட்ட தாகவும், ஆறாம் சார்லசுக்காக சீட்டாட்டம் தோன்றியது என்ற பெருமையை அவர் பெற்றதாக வும் ஒரு வரலாற்றாசிரியர் கூறுவதால், பிரான்சும் இந்தப் பெருமையைப் பெறுகிறது.

## திபேத் தெளிவுபடுத்துகிறது

எகிப்து நாட்டில் சீட்டாட்டம் இருந்தது. பாரசீக நாடு முழுவதும் இந்த ஆட்டம் பரவி இருந்தது; இந்தியாவிலும் சீட்டுக்களைப் பயன்படுத்தி ஆடி வந்தனர் என்ற சேதிகள் சற்று சிலிர்ப்பூட்டுவன வாக இருந்தாலும், தெளிவான வரலாற்றுக் குறிப்புக் கள் இல்லையே என்ற ஏக்கம் உடனே தொடர் வதையும் நம்மால் தடுக்க முடியவில்லை.

சீட்டாட்டம் ஆடினார்கள் என்றுதான் கூறு கின்றார்களே தவிர, சீட்டுக்கள் எப்படி இருந்தன. எந்த மாதிரியாக விதிமுறைகளை வைத்துக் கொண்டு ஆடினார்கள் என்கிற குறிப்புக்கள் தெளி வாக இல்லை. இது ஒரு செவி வழிச் செய்தி என்பதால், ஆதாரமில்லாத குறிப்பு என்கிற வகை யில் அடிப்பட்டுப் போகிறது என்று கூறுவாரும் உண்டு.

ஆனால், திபேத் நாட்டில் வாழ்ந்த பழங்குடி யினர் சீட்டுக்களை (cards) ஆடினர் என்கிற ஒரு

குறிப்பினைக் கூறி அதற்குப் பல ஆதாரங்களைத் தருகின்றனர். அவரது கருத்துக்குப் பக்கப் பலமாக பழங்காலத்தில் திபேத்தியர்கள் பயன்படுத்திய சித்திரத் தொங்கலாடையையும், சித்திரம் வரையப் பெற்ற கம்பளிஆடைகளையும் (Tapestry , அவற்றின் வண்ணப் படங்களையும் குறிப்பிட்டுக் காட்டு கின்றனர்.

துணிகளில் வரையப்பட்ட படங்களும் சித்திரங் களும் சமயக் கருத்தின் அடிப்படையில் உருவாக்கப் பட்டவையாகும். எதிர்காலத்தைக் கணித்து அதிர்ஷ்டத்தைக் கூறுகின்ற 'ஜோசியம்' (Fore tell) பார்ப்பதற்காக அவை பயன்பட்டவையாகும். சமயத்தின் சாதனங்களாகப் பயன்பட்ட சித்திரங் களை அடிப்படையாகக் கொண்டு, சீட்டுகளில் பொறிக்கப்பட்டிருக்கும் படங்களும் எழுதப்பட்டிருக் கலாம் என்பது தான் அந்த வரலாற்றாசிரியர்களின் வாதமாகும்.

இந்து மத புராணத்தில், **அர்த்தநாரி** என்றொரு பெண் தெய்வம் உண்டு. சித்திரத்தில் வரையப் பட்டிருக்கின்ற அந்தப் பெண் தெய்வத்திற்கு நான்கு கைகளும், நான்கு கால்களும் இருக்கின்றன. அதனுடைய நான்கு கைகளிலும் நான்கு விதமான பொருட்கள் இருப்பதாகவும் காட்டப்பட்டிருக் கின்றன.


ஒருகையில் **வாள்** (Sword); இரண்டாவது கை யில் **வளையம்** (Ring); மூன்றாவது கையில் **கிண்ணம்**

(Cup); நான்காவது கையில் **தண்டம்** (wand); பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, பிரான்சிலும் இத்தாலியிலும் பயன்படுத்தப்பட்ட சீட்டுக்களில், மேலே கூறிய சின்னங்கள் இருந்ததால், இந்துக்கள் தான் சீட்டாட்டத்தை முதலில் ஆடியிருக்க வேண்டும் என்ற அபிப்ராயத்தைத் தங்கள் ஆராய்ச்சிக் குறிப்பாக வெளியிட்டிருக்க வேண்டும். அதாவது, இந்த மாதிரியான சீட்டுக்களை (Cards) தயாரித்த ஒருவர் (அவர் ஒரு இத்தாலி நாட்டவராகவோ அல்லது இத்தாலி பிரஞ்சுக்காரராகவோ கூட இருக்கலாம்) அர்த்தநாரி தெய்வத்தின் கரங்களில் காட்டபட்டிருந்த குறியீடுகளைப் பயன்படுத்திக்கொண்டு, தயாரித்து இருக்கலாம் என்பதால், இந்தியாவில் உள்ள இந்துக்கள் தான் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பிருந்தே சீட்டாட்டத்தை ஆடி வந்திருக்கலாம் என்று கூறுகின்றனர்.

**இத்தாலியாகவும் இருக்கலாம் :**

இன்னொரு வரலாற்றாசிரியர் கூறுகின்றார். இத்தாலியைப் பற்றி, கி. பி. 13ம் நூற்றாண்டில் இத்தாலியர்தான் சீட்டுகள் இந்த ஆட்டத்தில் பயன்படுத்தப்பட்டன என்றும் அந்த வரலாற்றாசிரியர் கூறுகின்றார். இத்தாலியில் ஆரம்ப காலத்தில் 1 செட்டுக்கு 25 சீட்டுக்கள் இருந்தன என்றும், ஆனால் சீட்டுக்களில் எந்தவிதமான படமோ சின்னமோ இல்லாமல் வெறுமனே விளங்கின என்கிற கருத்தையும் அவர் தெளிவாகக் கூறிச் செல்கிறார்.

தற்காலத்தில் கூறப்படும் கொள்கையின்படி, சீட்டாட்டத்தில் பயன்படும் சீட்டுக்கள் ஏதாவது படங்களையோ அல்லது சின்னங்களையோ பொறிக்கப் பெற்றிருக்க வேண்டும். ஆனால், அந்தக் கால சீட்டுக்களில் படங்களே இல்லை என்பதால், அவை மக்களுக்கு முன்னறிவித்துக் காட்டும் அதிர்ஷ்டம் பற்றிக் கூறுகின்ற ஜோசிய சீட்டுக் கட்டுகளாகத்தான் இருந்திருக்க வேண்டும். அவை உண்மையில் சீட்டுக்கட்டுகள் அல்ல என்று பலர் மறுப்புத் தெரிவித்திருக்கின்றனர். மறுப்புகளி லிருந்து ஒரு மாற்றமான உண்மை நிலை ஒன்று பிரெஞ்சு தேசத்திலிருந்து நமக்குக் கிடைக்கிறது.



# 3. சீட்டுகளும் வகைகளும்

**இத்தாலியா! பிரெஞ்சுத் தேசமா!**

பதினான்காம் நூற்றாண்டு காலத்தில், பிரெஞ்சு நாட்டில் சீட்டுக் கட்டுகள் தயாரிக்கும் தொழில் மிகவும் பிரபலமடைந்திருந்தது என்று ஒரு வரலாற்றாசிரியர் கூறுகின்றார்.

ஆனால் 15ம் நூற்றாண்டில்தான் இத்தகைய சிறப்பான நிலை பிரெஞ்சு நாட்டில் இருந்தது. என்றாலும், இதற்கு முன்பாகவே இத்தாலி நாட்டில் 22 சீட்டுக்கள் அடங்கிய கட்டுகளும், 78 சீட்டுகள் உள்ள கட்டும் புழக்கத்தில் இருந்தன. அத்தகைய சீட்டுக்கட்டினை உடைய ஆட்டத்திற்கு **டாரட்ஸ்** (Tarots) என்ற பெயரும் இருந்ததாக மேலும் விளக்குகின்றார் அந்த ஆசிரியர்.

அத்தகைய டாரட்ஸ் சீட்டுகளில், இந்தியத் தெய்வமான அர்த்தநாரியின் நான்கு கரங்களிலும் இருந்த வாள், வளையம், கிண்ணம், தண்டம்

ஆகிய நான்கு சின்னங்களும் பொறிக்கப்பட்டிருந் தன என்றும் சான்று பகர்கிறார்.

இந்த இருநாடுகள் பற்றிய கருத்துக் குழப் பத்தைத் தீர்க்கமுனையும் மற்றொரு வரலாற்றா சிரியர், அதற்கு ஒரு புதிய வடிவம் தரவும் முயற்சி செய்திருக்கிறார். அதாவது, சீட்டுக்கட்டுகளைக் கொண்டு ஆடுகின்ற ஆட்டமானது, ஏறத்தாழ 13வது அல்லது 14ம் நூற்றாண்டுகளில், இத் தாலியில் அல்லது பிரான்சு தேசத்தில், ஏதாவது ஒருநாட்டில் தான் உண்டாகியிருக்க வேண்டும் என்று நடுத் தரமாகப் பேசி சமாதானம் அடைந்து கொள்கின்றாரே தவிர, அவரால் உறுதியாகக் கூற முடியவில்லை.

### படம் காட்டும் சீட்டுகள்

எந்தநாடு எந்த ஆண்டு என்று எந்தவரலாற்று ஆசிரியர்களாலும் சீட்டாட்டத்தின் தோற்றத்தை உறுதியாகக் கூற இயலாத கருத்துக்களைத்தான் நாம் இதுவரை அறிந்து கொண்டோம். ஆனால், சீட்டுக்களில் படம்வந்த பிறகு தான், அவை சிறப்பும் செழுமையும் பெற்றன என்ற கருத்தை மையமாக வைத்துக் கொண்டு, அவை வந்த விதம் பற்றி சிறிது விளக்கமாகவே காண்போம்.

சீட்டுக் கட்டுகளில் உள்ள சீட்டுகளை நாம் பார்த்தால், அவை நான்கு வகையாகப் பிரிக்கப்பட் டிருப்பதை அறிவீர்கள். டைமன், ஸ்பேட், ஹார்ட்,

கிளப் என்று பெயர் கொண்ட அந்த நான்கு வகை யான அமைப்புகள் எப்படி உண்டாயின, யார்தான் அந்த வடிவம் கொடுத்தது என்பன போன்ற கேள்விகள் இன்னும் விளக்கமில்லாத வினாவாகவே வளைந்து கிடக்கின்றன.

## நால் வகை சேனைகள்

சீனநாட்டிலே சேனைகளை படைமுகத்திற்கு நடத்திச் செல்வதற்காக சீட்டாட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தது என்ற கருத்தினை நாம் முதலிலே கூறியிருந்தது உங்களது நினைவுக்கு இப் பொழுது வரலாம். நால்வகை சேனைகளான ரத, கஜ, துரக, பதாதிகள் என்பனவற்றை அடிப் படையாகக் கொண்டு இந்த நால்வகைப் பிரிவு நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கலாம் என்ற நமது ஐயம் நிஜமாகவும் கூட இருக்கலாம்.

ஆனால், இனி நாம் காணப் போகின்ற விளக் கங்கள், இந்த நான்கு வகைப் பிரிவுகளைக் காட்டி நம்மை குழப்பத்தில் ஆழ்த்தினாலும் ஆழ்த்தலாம். மாறாக. வியப்பில் வீழ்த்தினாலும் வீழ்த்தலாம். அதற்கு ஆயத்தமாகிக் கொண்டு, நாம் கதைப் பயணத்தைத் தொடர்வோம்.

## இயற்கையே முன் மாதிரி

ஆதித்தாயாக அமைந்து அனைத்தையும் தரு பவள், அனைத்து மகிழ்விப்பவள் இயற்கை

அன்னை என்பது நாம் அறியாததா? அதனால் தான், இயற்கை அன்னையே நான்கு வகைப் பிரிவுக்கும் வழிகாட்டி என்ற கருத்தை ஒருவர் மிகவும் நாசூக்காக விளக்கி இருப்பதைப் பாருங்கள்.

இயற்கையான காலப்பிரிவுகள் நமக்குத் தெரியும். வசந்தகாலம், கோடைகாலம், இலை யுதிர்காலம், மழைக்காலம் இந்த நான்கு பிரிவு களையும் உள்ளடக்கி வைத்திருப்பது 12மாதங்கள். இந்த பனிரெண்டு மாதங்களுக்கும் உள் பிரிவுகளாக இருப்பவை 52 வாரங்கள் இப்படி பிரிந்து இருப் பதை சீட்டாட்டத்தில் சேர்த்துக் காட்டும் சிறப் பைப் பாருங்கள்.

| **இயற்கைப் பிரிவு** | | **சீட்டுப் பிரிவு** |
|---|---|---|
| 1. வசந்தகாலம் | — | ஹார்ட் (Heart |
| 2. கோடைகாலம் | — | கிளப் (Club) |
| 3. இலையுதிர்காலம் | — | டைமண்ட் (Diamond) |
| 4. மழைக்காலம் | — | ஸ்பேட் (Spade) |

ஒரு வருடகாலத்தில் இந்த நான்கு காலங்களும் மாறிமாறி உலகில் இடம் பெறுகின்றன. அதாவது 52 வாரங்களில் இப்படி மாற்றங்கள் நிகழ்கின்றன. அதனால்தான் ஒரு சீட்டுக்கட்டிலே 52 சீட்டுக்கள் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு சீட்டுக்கட்டிலும் நீங்கள் பார்த்தால், மொத்தம் 12 படங்கள் உள்ள சீட்டுக்கள் இருக்கும் அதாவது ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு ராஜா (King) ஒரு ராணி (Queen) ஒரு இளவரசன் (Jack). ஆக நான்கு பிரிவுக்கும் சேர்த்து 12 படங்கள் உண்டு. இந்த ஒவ்வொரு படமும் ஒவ்வொரு மாதத்தைச் சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளன.

13வது படம் ஒன்று இருக்கிறதே என்றால், அது சூரியனைக் குறிக்கும் என்பதாக ஒரு வானவி யலறிஞர் கூறுகின்றார். ஆக, சீட்டுக்கட்டின் முக்கிய வடிவம் இயற்கையைப் பார்த்துத்தான் பிரித்துப் பொருத்தியிருப்பதாகத் தோன்றுகின்ற தல்லவா?

**வாழ்க்கையே வழிகாட்டி**

இயற்கையின் பிரதிபலிப்பு செயற்கையல்லவா! இறைவன் செய்தது இயற்கை. மனிதன் செய்வது செயற்கை. மனிதன் வாழ்க்கைக்கும் மகிமை யளிப்பது போல, ஒரு கருத்தைத் கூறவேண்டும் என்று ஒரு மகானுபாவன் முயன்றிருக்கிறார். ஆகவே, அவர் இப்படித்தான் இந்தப்பிரிவும் தோன்றியிருக்க வேண்டும் என்று புதுமை செய்து பார்க்கிறார்.

வாழ்க்கை என்பது அன்பு, அறிவு, செல்வம், உழைப்பு அல்லது இறப்பு என்பனவற்றின் தொகுப்

பால்தான் நடைபெறுகிறது அல்லது முற்றுப் பெறு கிறது என்பதைக் குறித்துக் காட்டுகிறார்.

***சீட்டின்பிரிவு — (வாழ்க்கையின்)*** செயல்பிரிவு

1. ஹார்ட் — அன்பு
2. கிளப் — அறிவு
3. டைமண்ட் — செல்வம்
4. ஸ்பேட் — உழைப்பு அல்லது இறப்பு.

மனதின் வெளிப்பாட்டையும், உடலின் செயல் பாட்டையும் ஒப்புமைப்படுத்தி பார்த்து விட்டார் ஒருவர்.

இன்னொருவர் இதற்கும் மேலாக ஒரு மலை தாண்டி மக்களையே இன வகையாகப் பிரித்திருப் பதைக் காட்டி, விளக்கி மனச் சாந்தி பெற்றுக் கொள்கிறார்! எப்படி?

**மக்களும் பிரிவுகளும்**

சீட்டாட்டமானது ஐரோப்பிய நாடுகளில் ஏறத்தாழ பத்தாம் நூற்றாண்டின் பகுதிக் காலத் திலேயே அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் கூறுவர். பதினான்காம் அல்லது பதினைந்தாம் நூற்றாண்டு களில் பிரசித்துப் பெற்ற ஆட்டமாக விளங்கியது இது என்பதால், சமூகத்துடன் இணைந்து செழித் தோங்கி வளர்ந்தது என்றும் கூறுவர். அதனால்

தான் அந்த சமூகப்பிரிவுகளின் பிரதிபலிப்பாக சீட்டாட்டம் பிரித்துக் காட்டப்பட்டிருக்கிறது என்றும் விளக்கம் கூறுவர்.

ஐரோப்பிய நாட்டின் சமூகப் பிரிவும் நமது நாட்டினைப் போலவே நான்கு வகைப் பிரிவுகள் உடையதாகவே இருந்திருக்கின்றன. நம் நாட்டில் அரசர், அந்தணர், வைசியர், சூத்திரர் என்று இருந்ததாகக் கூறுவர். அதுபோலவே, ஐரோப்பிய நாட்டு சமூகப் பிரிவும் பிரபுக்கள், குருமார்கள், வியாபாரிகள், உழவர்கள் என்று அமைந்திருந்தன,

ஒவ்வொரு சீட்டுப் பிரிவும் ஒவ்வொரு சமூகப் பிரிவை சுட்டிக்காட்டி, அன்றாட வாழ்க்கை முறையை சித்தரித்துக் காட்டியிருக்கிறது.

| சமூகப் பிரிவு | சீட்டுபிரிவு |
|---|---|
| 1. புரபுக்கள் (Noblity) | — ஸ்பேட் |
| 2. குருமார்கள் (Clergy) | — ஹார்ட் |
| 3. வியாபாரிகள் (Merchants) | — டைமண்ட் |
| 4. உழவர்கள் (Peasants) | — கிளப் |

சீட்டுப் பிரிவுதான் முக்கியத்துவம் பெற்றிருக் கிறது என்று பார்த்தால் சீட்டுக்களில் உள்ள படங்களும் மிகப் பெரிய மனிதர்களின் திருவுருவங் களைத் தாங்கிக் கொண்டல்லவா பெருமை பெற்றிருக்கின்றன? எந்தப் படங்கள் எந்தப் பெரிய மனிதர்கள் என்பதை இனி காண்போம்.

# 4. படங்களும் பெயர்களும்

சீட்டுக்கட்டில் நான்கு வகைகள் உண்டு என்றும் அத்தகைய பிரிவுகள் ஒவ்வொன்றிலும் 3 படங்கள் உண்டு என்றும், அவற்றிற்கு ராஜா, ராணி,ஜேக் என்று பெயர் உண்டு என்றும் நீங்கள் அறிவீர்கள்.

அலங்கார பூஷணமாக விளங்கும் அந்தப் படங் களைப் பார்க்கின்றவர்கள், அவற்றை பொம்மை ராஜா, மக்கு ராஜா என்று கூறுவார்கள். எதற்கும் லாயக்கற்ற ஒருவரை சுட்டிக் காட்டி இழிவாகப் பேச, சீட்டுக்கட்டு ராஜா என்றும் பேசுவார்கள். அப்படியென்றால், சீட்டுக்கட்டில் உள்ள அந்தப் படங்கள் எல்லாம் கற்பனையாக உருவானவையா? என்றால் அப்படி அல்ல.

அத்தனைப் படங்களும், அகிலத்திலே சிறந்த. புகழ்பெற்று விளங்கிய வீரர்கள், ராணிகள், அரசர்கள், ஆவார்கள். அத்தகைய மாவீரர்கள், மாசற்ற தியாகிகள், மண்டலம்போற்றிய விவேகிகள் யாராக இருக்கக் கூடும்?

மிகவும் இழிவாக சீட்டுக் கட்டில் அவர்கள் படம் ஏன் இடம் பெற்றிருக்க வேண்டும்? அவர் களைமகிழ்விக்கவா? இல்லை. பிறகு? அவர்கள் தான் அமரர்கள் ஆகிவிட்டார்களே? அவர்கள் புகழ் பாடுவதால் என்ன பயன் வந்து விடப்போகிறது? ஒரு உள்நோக்கம் இருந்திருக்க வேண்டும்.

புகழ்வாய்ந்த மனிதர்களின் படங்களைப் போட்டால், சீட்டுக்கட்டில் அடிக்கடி அவர்களை ஆடுவோர் பார்க்கும்போது, அவர்களைப் போல நாமும் உயரவேண்டும், உலகப் புகழ் பெற வேண்டும் என்ற எண்ண எழுச்சி ஏற்பட்டு, உற்சாகமாக உழைக்கவும், உன்னதமான யுக்தி களை மேற்கொள்ளவும் முயற்சிக்கக்கூடும் என்ற நன்னோக்கில்கூட அமைத்திருக்கலாம்!

எப்படி இருந்தாலும், சீட்டில் உள்ள படங்கள் அத்தனையும் சீரும்சிறப்பும், செழுமையும் பெற்று வாழ்ந்த பெரிய மனிதர்கள் ஆவார்கள்.

சீட்டுக்கட்டுக்கள் தோன்றிய ஆரம்ப நாட் களில், ஒவ்வொரு படமும் கையினாலேயே வரைந்து வண்ணம் தீட்டப்பட்டன. அப்படி பலரும் பலவிதமாக வரையவே, உருவ அமைப்பும், முக அமைப்பும், உடை தோற்றத்திலும் பலவாறு வேற்றுமைகளும் வித்தியாசங்களும் நிறைய தோன்றின. இந்த நிலை பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை நீடித்து வந்தது.

அதற்குப்பிறகு அச்சுக்கலை அதிக அளவில் மக்கள் மத்தியிலே இடம் பிடித்துக் கொண்ட தன் காரணமாக, இந்தப் படங்கள் ஒரே மாதிரியாக, ஒரே வண்ண அமைப்புடன் சீர்படுத்தப்பட்டன.

இப்பொழுது ஒவ்வொரு பிரிவிலும் உள்ள ராஜா ராணி தளபதியாகத் தோன்றும் ஜேக் ஆகிய படங் களையும் அதற்கான பெயர்களையும் பார்ப்போம்.

1. ஸ்பேட் சீட்டில் உள்ள ராஜா, ராணி, ஜேக்.

ஸ்பேட் ராஜா : முதன் முதலாக ஸ்பேட் ராஜாவாக அலங்காரிக்கப்பட்டவர், பைபிள் நூலில் புகழ் பெற்ற அரசராக விளங்கும் **தாவீது ராஜா** (King David). இவரது படம் முதன்முதலாக வரையப் பட்டபொழுது, கையிலே இசைக்கருவி ஒன்றை வைத்திருப்பது போல வரையப்பட்டது. ஆனால், காலம் மாற மாற இந்தப் படம் இன்னும் எழில் உருவமாகவும் வளர்ச்சி பெற வும் அமைக்கப்பட்டது.

சிறிது காலம் கழித்து இதில் ஒரு மாற்றம். பிரெஞ்சு தேசத்தை ஆண்டு உலகப் புகழ் பெற்று, பெரும் சக்ரவர்த்தி என்ற புகழடைந்த **நெப்போலியன்** படம் ஸ்பேட் ராஜாவாக வடிவம் பெற்றது.

மீண்டும் இதில் ஒரு மாற்றம். அரசியல் போல **வெலிங்டன் பிரபு** என்பவரின்

படம் ராஜாவாக இடம் பெற்றுக்கொண்டது. என்றாலும், இறுதி வெற்றி தாவிது ராஜாவுக்குத்தான். இப்பொழுது ஸ்பேட் ராஜாவாக இருப்பது தாவிது ராஜா.

ஸ்பேட் ராணி: முதன் முதல் ஸ்பேட் ராணியாகும் பெருமை பெற்ற படம் **பலாஸ் அதினா.** இந்த பெண்மணி ஒரு தேவதை. ஆமாம். கிரேக்கநாட்டில் இருந்த ஆராதனைக்குரிய ஒரு தேவதையின் படத்தை வரைந்திருந்தார்கள்.

ஆனால், சிறப்பாற்றல் மிக்க தாவிது அரசனுக்கு பொருத்தமான படமாக இந்தப் படம் எப்படி அமையும் என்று எழுந்த எதிர்ப்பின் காரணமாக அதினாதேவதை படம் அகற்றப்பட்டது.

எதிர்ப்பிற்குப் பிறகு, பலர் ஏற்றுக்கொண்ட படம் **பத் ஷீபா** என்பாரின் படம். அதுவும் அழகுற அமையவில்லை என்ற காரணம் காட்டி, எடுத்துவிட்டனர். மூன்றாவதாக, பிரெஞ்சு தேசத்து வீராங்கனை எனப் புகழ் பெற்ற **ஜோன் ஆப்** ஆர்க் என்பாளின் படமும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஸ்காண்டி நேவிய நாட்டினர் வணங்கிய பெண் கடவுள் **டியா டானிக்** எனும் கடவுளின் படம் இடம் பெற்றிருந்தது.

ஸ்பேட் ஜேக் : ஆங்கில இலக்கியத்தில், ஆர்தர் மன்னன் என்பவர் புகழ்பெற்ற புராணக் கதை நாயகன் ஆவார். அவரது தங்கையின் கணவன், அவர் பெயர் **ஏகியர்** அல்லது **கேரல்கர்** அல்லது ஹோகியர் என்று பலவாறாக அழைக்கப்பட்டது. அந்த வீரர், புராணங்களில் வருகின்ற பயங்கர பறவை நாகங்களைக் (Dragon) கொன்று வீரதீர சாகசம் செய்த, மகா புராண வீரன் இந்த வீரனுடைய படம் தான் ஸ்பேட் ஜாக்காக இடம் பெற்றிருக்கிறது.

2. ஹார்ட் சீட்டின் ராஜா, ராணி, ஜேக்.

ஹார்ட் ராஜா : ஆரம்ப நாட்களில் **சார்லி மேகன்**, எனும் மன்னனின் படம்தான் இடம் பெற்று வந்தது. ஆனால், அதையும் மாற்றி **மகா கான்ஸ்டன் டைன்** எனும் மாமன்னனின் படம் வந்து இடம் பிடித்துக் கொண்டது.

காலத்தின் கோலம். அந்த நேரத்தில் பிரிட்டனை ஆண்ட **முதலாம் சார்லஸ்** எனும் மன்னனை மகிமைப்படுத்த, அவரது படம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதுவும் மாறியது. பிரெஞ்சு தேசத்தின் புகழ்மிக்க நாவலாசிரியரான **விக்தர் கியூகோ** என்பாரின் படம்கூட சிலகாலம் ராஜாவாக விளங்கியது. ஆனால், எல்லோராலும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டு, அங்கீகரிக்கப்பட்டப் படமாக சார்லிமேகன் படமே தற்பொழுது இருந்து வருகிறது.

ஹார்ட் ராணி : கிரேக்க நாட்டுக் கீர்த்திமிக்க புராணத்தின் அழியாப் புகழ் நாயகிகளாக விளங்கும் டிராய் நாட்டு அழகி **ஹெலன்** என்பவரின் படம் முதன் முதலாக இடம் பெற்றது. ஆனால் இதற்கு நிறைய போட்டிகளும் எதிர்ப்புக்களும் கிளம்பின. அதனால் அவ்வப்போது ஒவ்வொரு பெண்ணின் படம் இடம்பெறத் தொடங்கியது.

மகாகான்ஸ்டன்டைன் எனும் மன்னனின் தாயார் **செயின்ட் ஹெலனா** என்பவரின் படம் அடுத்து போடப்பட்டது.

பின்னர், மாறி வந்தவர்களின் பட்டியலைப் பாருங்கள் **டிடோ**—பின்னர் **ஜூனோ** சில சமயம் பிரிட்டனைச் சேர்ந்த எலிசபத் அரசி; பின்னர் **ராக்சேன்.** பின்னர் பைபிள் புகழ் **ராக்கேல்** கடைசியாக, பாஸ்டா என்றாலும் இறுதியாக பைபிளில் வரும் **ஜூடியத்** என்பாளின் படம் இடம் பெற்றுக் கொண்டது.

ஹார்ட் ஜேக் : பிரெஞ்சு தேசத்தை ஆண்ட ஏழாம் சார்லஸ் மன்னனின் கீழ் பணி புரிந்த பெருமை பெற்ற தளபதி ஒருவர். அந்த வீரன் ராபின்குட் என்பவரைப் போல, காடுகளுக்குச் சென்று வீரதீர சாகசம் புரிந்தவன். அவன் பெயர் **எடினி டி விக்னோலாஸ்.** அவ் வீரனின் படமே ஏற்றுக் கொள்ளப்பட்டது.

3. டைமண்ட் சீட்டின் ராஜா, ராணி, ஜேக்.

டைமண்ட் ராஜா : உலகப் புகழ்பெற்ற சக்ரவர்த்தி **ஜூலியஸ் சீசரின்** படம்தான் ராஜாவாக ஆனது. இதற்கு யாரிடமிருந்தும் எந்தவிதமான எதிர்ப்பும் வரவில்லை. எனவே மாற்றமும் இல்லை. முதலும் முடிவுமாக சீசரின் படமே சித்தரிக்கப்பட்டு விட்டது.

டைமண்ட் ராணி : ஆரம்ப நாட்களில், மனிதப் பிறவியை யாரும் தீட்டாமல், கிரேக்கப் புராணத்தில் வரும் அமேசான் நாட்டு ராணியான **மெந்திசிலியா** என்பவளின் கற்பனை உருவத்தைப் போட்டு வைத்தனர்.

ஆனால், அதுவும் நிலைக்கவில்லை, பைபிளில் புகழ்பெற்றப் பெண்ணாகத் திகழும் **ராக்கேல்** என்பவளின் படமே இறுதியாக்கப் பட்டிருக்கிறது.

டைமண்ட் ஜேக் : முதலில், ஹார்ட் சீட்டின் ராஜா வாகிய சார்லிமேகனின் மருமகனாகிய **ரோலண்ட்** என்பவரின் படம் இடம் பெற்று வந்தது. பிறகு, **ஹெக்டர் டிமாரிஸ்** என்பவரின் படம் இறுதியாக்கப்பட்டு வைக்கப்பட்டது.

4. கிளப்பின் சீட்டின் ராஜா, ராணி, ஜேக்.

கிளப் ராஜா : எந்த எதிர்ப்பும் இல்லாமல், முதலும் இறுதியுமாக இடம்பெற்ற மன்னராக **மகா அலெக்சாந்தர்** விளங்குகிறார்.

கிளப் ராணி : முதலில் புகழில்லாத ஒரு பெண்மணி அவள் பெயர் **லூக்ரிஷியா.** ஆகவே எளிதாக மாற்றப்பட்டாள் பிறகு அந்த இடத்தை ஆக்ரமித்துக் கொண்டவளின் பெயர் **ஹெக்குபா** என்பதாகும். ஆனாலும் சீட்டுக்கட்டுகளைத் தயாரிக்கும் தயாரிப்பாளர் கள் தாங்களாகவே ஒரு கற்பனை அழகியை உருவாக்கி வைத்தார்கள்.

இறுதியாக கிளப் ராணியாகத் திகழும் பெருமை பெற்றுக் கொண்டவள் **அர்ஜைன்** என்பவளாகும்.

கிளப் ஜேக் : பிரிட்டனில் புகழ்பெற்ற புராண காவியத்தின் ஈடிணையற்ற வீரனாகத்திகழ்ந்த **சர்லான்சிலாட்** என்பவனே இப் படத்தினை அலங்கரிக்கின்றான். இப்படியாக பெருமைக் குரிய பைபிளில், வரும் மக்கள் புராண காவிய நாயகர்கள் புவியாண்ட மன்னர்கள், புகழ் பெற்ற எழுத்தாளர்கள், பொறாமையை உண்டாக்கும் அழகு நாயகிகள் அனைவரும் இடம்பிடித்துக் கொண்ட சீட்டுக்கட்டில் உள்ள படங்கள் யாவும் சிந்தனைக்குரியவர்களே!

அவர்கள் வடிவங்களைப் பார்க்கும் பொழுது, வரலாற்றுப் புகழும் கூடவே நம்மை வட்டமிட்டு அழைக்கின்றன. அப்படிப்பட்ட சீட்டாட்டம், எப்படி வளர்ந்து உயர்ந்தது என்பதை காண்போம்.

# 5. சீட்டிலும் நோட்டம்

மனித இனத்திற்கு மகோன்னதமான வழி காட்டியாகவும் மகிழ்ச்சியளிக்கும் தூதுவர்களாகவும், மதியை வளர்க்கும் மகிமை மிகு தாதியர்கள் போல வும் விளையாட்டுகள் உதவி வந்திருக்கின்றன. காலங்காலமாகத் தொடர்ந்தும் வருகின்றன.

விளையாட்டுக்களின் உண்மை நிலையை உயர்ந்த தன்மைகளை உணர்ந்து உரிய முறையில் பின்பற்றி, உளமார விளையாடியவர்கள் எல்லாம் உன்னதமான இன்பம் பெற்றனர். உலக இன்பத் தின் மாட்சியைப் பெற்று மகிழ்ந்தனர். திகழ்ந்தனர்.

வேண்டாம் என்று விதண்டவாதாம் செய்தவர் கள், முரண்டு பிடித்தவர்கள், முட்டாள் தனமாக கட்சிக் கட்டியவர்கள், முரட்டுக்காளையாக மோதியவர்கள் எல்லாம், முழுத் தேங்காயை உருட்டி ஏமாந்த நாய் போல ஏமாந்து ஒழிந்தனர்.

இத்தகைய ஒப்புயர்வற்ற விளையாட்டுக்களை நாம் மூன்று வகையாக இனம் பிரித்துப் பார்க்கலாம்.

குணம் அறிந்து சேர்க்கலாம். அப்படித் தான் உலகமே ஏற்றுக் கொண்டிருக்கிறது.

1. உடல் ஆற்றலை முதலாக வைத்து விளை யாடும் விளையாட்டுக்கள். இது முதல் வகை. இதை உடல்திறன் வெளிப்பாடு (Physical outlet) என்பார்கள். களைப்படையும் வரை, காட்டாற்று வெள்ளம் போல அலைந்து திரிந்து ஆடி மகிழ்வது. கால் பந்தாட்டம், வளைகோல் பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம், கைப்பந்தாட்டம், சடுகுடு கோகோ போன்ற ஆட்டங்களை நாம் உதாரண மாகக் காட்டலாம்.

2. மூளையைப் பயன்படுத்தி விளையாடும் விளையாட்டுக்கள், உடலாற்றல் அதிகமாகத் தேவைப்படாமல், ஓரிடத்தில் இருந்து மூளையின் ஆற்றலை முதன்மைப்படுத்தி ஆடுகின்ற ஆட்டங் கள், இப்படி ஆடுவது வயதானவர்கள் தான் என்பதல்ல பொருள். இது அறிவார்ந்த ஆட்டமாக இருக்கும் தன்மையால், இப்படிப் பிரித்துக் காட்டி யிருக்கின்றார்கள்.

சதுரங்கம், ஆடுபுலி ஆட்டம், செக்கர்ஸ் போன்ற விளையாட்டுக்கள் இதற்கு சான்றாகும்.

3. அதிர்ஷ்டத்தைப் பயன்படுத்தி ஆடும் ஆட்டங்கள். வெறும் உடலாற்றல் மட்டும் போதாது. அறிவாற்றலுக்கும், நினைவாற்றலுக்கும்

மேலாக, அதிர்ஷ்டத்தின் ஆற்றலும் அந்த ஆட்டத்தில் இடம் பெறுவது...அதற்கு முதல் உதாரணமாகத் திகழ்வது சீட்டாட்டம். அடுத்து தாயம்—பகடை போன்றவைகளாகும்.

இதை அடிப்படையாக வைதது, மேல் நாட்டறிஞர் ஒருவர் கூறிச் சென்றார் இப்படி. "வாழ்க்கை என்பது சீட்டாட்டம் போன்றது. வந்த சீட்டுக்களை வைத்துக் கொண்டு, வெற்றி பெறுவது எப்படி என்று சிந்தித்து விளையாடுவது புத்திசாலித் தனம். வராத சீட்டுக்களுக்காக ஏங்கிக்கொண்டிருந் தால்....அது தோல்வியை மட்டுமல்ல தொடர்ந்து அவமானத்தையும் அல்லவா, கொடுத்துக் கொண் டேயிருக்கும். அப்படித்தான் வாழ்க்கையிலும், நாம் வந்த நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டு மகிழ்ச்சி யாக வாழவேண்டும். எதிர்பார்த்ததெல்லாம் நமக்குக் கிடைக்குமா என்ன!"

உடலில் திறனும் வேண்டும். மூளையின் திறனும் வேண்டும். அடுத்து அதிர்ஷ்டமும் வேண்டும் என்று சீட்டாட்டம் இருக்கிறது.

சீட்டாட்டம் சிந்தனையை வளர்க்கும் சீரான ஆட்டம் என்கிறோம் நாம் ஆனால், சீட்டாட்டம் ஒரு சூதாட்டம். அது பயங்கர பாதாளத்தில் ஒரு வரைத் தள்ளிப் புதைத்துவிடும் புதைகுழி போன்ற ஆட்டம் என்று பரபரப்புடன் பேசுவோரும் உண்டு. அது உண்மைதான்.

இரவு பகல் தெரியாது, பசி தாகம் அறியாது. உலகத் தொடர்பே இல்லாது, உட்கார்ந்த இடத்திலே அசையும் சமாதி போல அமர்ந்து ஆடுகின்ற பயங்கர சீட்டாட்டக்காரர்களை நாம் பார்த்திருக்கிறோம். கட்டி ஆடப் பணம் போதவில்லையென்று, கட்டிய மனைவியையே பந்தயப் பொருளாகக் கட்டித் தோற்றுப் போன கலிகால தருமன்களையும் நாம் பத்திரிகைகள் மூலமாகப் படித்து அறிந்திருக்கிறோம்.

சீட்டாட்டம் சூதாட்டம் என்ற கீழ்நிலைக்கு ஆனதால்தான், பலநாடுகளில் கடுமையான சட்டங்கள் இயற்றப்பட்டன. கண்மூடித்தனமாக அடக்கப்பட்டது. அதன் காரணமாக, சீட்டாட்டம் என்றாலே, மக்கள் முகத்தைச் சுளிக்கின்ற அளவுக்கு காட்டம் ஏற்பட்டது.

சீட்டிலே காட்டம் ஏற்பட்டது ஒருபுறமிருக்க, அதன் மேல் நோட்டம் விட்டவர்கள் கொடுத்த ஆதரவு இருக்கிறதே...அதுதான் நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அதுவும் ராஜ போகமான வரவேற்பு ராணியின் மடியிலே 'ஜாம் ஜாம்' என்று அமர்ந்து, ராஜாங்க விருந்துகளில் இடம்பெற்று, அறிஞர், அதிகாரிகள் என்பவர்கள் கையிலே தவழ்ந்து... இப்படி ஒருநிலைமை சீட்டாட்டத்திற்கு இருந்தது என்றால் நம்புகின்றீர்களா?

ஆமாம்! அகிலத்தையே ஒரு குடைக் கீழ் ஆண்டது இங்கிலாந்து நாடு என்பதை அறிவோம்

நாம். அந்த நாட்டை ஆண்ட ராணி ஒருத்தியின் இன்ப மழலையாக இந்த ஆட்டம் இருந்திருக்கிறது என்றால் — வரலாற்றுக்கு எத்தனைப் பெருமை? இந்தப் பெருமையை அளித்த ராணி யார்? ஏன்? எப்படி நடந்தது?



# 6. ராணியின் மடியில்

அதிகமான உடல் உழைப்பிற்குப் பிறகு, அல்லது ஓயாத வேலை செய்து களைத்தபிறகு உல்லாசமாகவும் உற்சாகமாகவும் இருக்க, ஆரம்ப நாட்களில் சீட்டாட்டம் பயன் பட்டு வந்தது. இத்தகைய ஏற்றமிகு நிலையானது. இதில் ஈடுபட்டிருந்தவர்களின் பாரம்பரியச் சிறப்பிலே பிறந்தது என்று கூறினால் அது மிகையாகாது.

ஒரு இராணியின் ஆயுள்காலம் முழுவதும் அவளது அன்பான அரவணைப்பிலே, ஆலமரம் போல செழித்து வளர்ந்தது என்று கூறியிருந்தோம். ஆமாம்! அகிலத்தையே ஒரு குடைக்கீழ் ஆளும் பெருமை பெற்றிருந்த இங்கிலாந்தை ஆண்டவள் அவள். அவளது ஆட்சிக்காலம் 1559 முதல் 1603.

அந்த நாற்பத்தி ஐந்தாண்டு ஆட்சிக் காலம் சீட்டாட்டத்தின் நற்காலமாக மட்டுமல்ல, பொற்காலமாகவும் அமைந்து விட்டிருந்தது.

சீட்டாட்டத்தின் பெருமையையும் அருமை யையும் ஐயமறப் புரிந்துகொண்ட இராணி எலிசபெத்... தன் உள்ளத்திலிருந்து உணர்ச்சிப் பெருக்காக இப்படிக் கூறினாள் சீட்டாட்டத்தைப் பற்றி, "இது பிரச்சினைகளிலிருந்து மனதைத் திசை திருப்பி ஒரு ஆனந்தமான சூழ்நிலையையும் இனிய உணர்வினையும் அளிக்கிறது" என்பதுதான், இது போதாதா இராணியின் அன்பைப்பெற...

பிரச்சினைகளைத் தீர்க்கும் சக்திபெற்ற சீட்டாட்டத்திற்கு நிறைய பிரச்சினைகள் இருக் கின்றன என்பதை எலிசபெத் ராணி உணர்ந்தாள். இத்தனைச் சீட்டுக்கள் தான் ஒரு கட்டிலே இருக்க வேண்டும் என்று குறிப்பில்லாமல், குழப்பம் தருகின்ற சீட்டுக்களின் எண்ணிக்கை தரும் பிரச்சனை, இப்படித்தான் ஆட்டத்தை ஆட வேண்டும் என்று விதிமுறைகள் இல்லாத வேலியற்ற பிரச்சனை... இப்படித்தான் இதனை அழைப்பது என்று பெயரில்லாத பிரச்சினை....யார் யார் படங்களோ சீட்டுக்களில் இருக்கின்றனவே, அவற்றில் யார் படத்தை வைப்பது என்கிற படப் பிரச்சினை...

ராணி எலிசபெத் தன் ஆட்சிக்காலம் மட்டு மல்ல, தன் ஆயுள் காலம் முழுவதும் சீட்டாட்டத் தின் சீர்மைக்கு செப்பனிடும் பணியில் ஈடுபட்டிருந் தாள். எண்ணிக்கைக்குழப்பமான சீட்டுக்களை 52 சீட்டுக்கள் கொண்டதுதான் ஒரு கட்டு என்று திருத்தியமைத்தாள்.

ராஜாக்களில் யார் படம் சீட்டுக்களில் போடுவது என்ற பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு கண்டாள் அந்த மேதையான ராணி. ஸ்பேட் ராஜா படத்தில் மகா அலெக்சாந்தர் படமும்; ஹார்ட் ராஜா படத்தில் சார்லிமேகன் படமும், டைமன்ட் ராஜா படத்தில் ஜூலியஸ் சீசரின் படமும், ஸ்பேட் ராஜா படத்தில் தாவிது ராஜா படமும் இருக்க வேண்டும் என்ற முடிவினைக் கொண்டு வந்து பிரச்சினை களுக்கு முடிவு கட்டினாள் எலிசபெத் ராணி.

எலிசபெத் ராணி காலத்தில் எந்தப் பெயரில் இந்த சீட்டாட்டம் ஆடப்பெற்று வந்தது என்னும் குறிப்பு வரலாற்றுப்பக்கங்களில் காணப்படவில்லை. என்றாலும், எலிசபெத் ராணியும் அவரது நண்பர் களும் ஆதரவாளர்களும் முதன் முதலில் ஒரு வரன் முறையுடன் விதிமுறைகளை அமைத்துக் கொண்டு ஆடினார்கள் என்பதை மட்டும் வரலாறு புகழ்ந்து பேசுகிறது.

முதன் முதலாக சீட்டுக்களை வைத்துக் கொண்டு ஆட்டமாக ஆடிய பெருமை எலிசபெத் ராணிக்கே போய்ச் சேருகிறது. அவர்கள் ஆடிய ஆட்டத்தின் பெயர் **ரஃப் அண்ட் ஹானர்ஸ்** (Ruff and Honours) என்று அழைக்கப்பட்டது. இந்த ஆட்டம் தான் சீட்டாட்டங்களுக்கெல்லாம் தாய் ஆட்டம்; பாட்டி ஆட்டம் என்றும் கூறலாம்.

எலிசபெத் ராணியின் சீர்திருத்தத்திற்குப் பிறகு செம்மையடைந்த இந்த ஆட்டம், இப்படியே

மக்களுக்கு பல ஆண்டுகளாக சேவை புரிந்து வந்தது. ஆர்வமுள்ள மக்கள் அதிகமாயினர். ஆட்டத்தில் அவர்கள் திருப்தியடைந்தார்கள். விதி முறைகள் வேண்டும் என்பதுபற்றி அவர்கள் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. விளையாடி மகிழ்ந்தால் போதும் என்ற விருப்பத்துடன் இருந்தார்களே தவிர, விதிகள் வேண்டும் என்ற விழிப்புணர்ச்சி இல்லாமலே விளையாடினர்.

மக்கள் மதியற்றுக் கிடந்தால் என்ன? அவர்களுக்கு அறிவு வழங்கவும், ஆற்றல் உண்டாக்கவும் காலத்திற்குத் தெரியுமே! காலத்தின் கைகள் காரியம் ஆற்றத் தொடங்கின. அந்தக்காரியம் 1680ம் ஆண்டு நடைபெற்றது. ஆமாம், ஆட்டத்திற்கு புதிய பெயர் வந்து சேர்ந்தது. விதிகள் மாற்றம் பெற்றன. ஆட்டமும் ஏற்றம் பெற்றது.

**ரஃப் அண்ட் ஹானர்ஸ்** என்ற பெயர் மாறி, **ஸ்வேபர்ஸ்** (Swabbers) எனும் புதிய பெயர் உண்டாயிற்று. ஆனால், இதிலே புதிய கிளைகளும், தோன்றின. ஆமாம். புதிய ஆட்டமுறையினை விரும்பிய மக்கள், தாங்கள் விரும்பும் விதங்களில் எல்லாம் விரும்பியவண்ணம் ஆடிக் கொண்டனர். இப்படியே பதினைந்து இருபது ஆண்டுகள் கழிந்தன.

லண்டன் மாநகரில் மனமகிழ்மன்றம் ஒன்று. அது **கிரெளன் காபி ஹவுஸ்** என்ற பெயருடன் விளங்கியது. அங்கு வருபவர்கள் வசதி படைத்த

குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். சமுதாய அந்தஸ்தும் பெற்றவர்கள். அந்த நண்பர்கள் குழு ஒன்று. ஆட்டத்தில் மனம் லயித்துப்போய், ஆடி மகிழ்ந்து வரும் நாட்களில் ஒரு நாள் சிந்தனை செய்யத் தொடங்கியது.

அந்த சிந்தனைக் குழுவிற்குத் தலைமை தாங்கியவர் ஒருவர் **சர்** பட்டம் பெற்றவர். சர் ஜேக்கப் டி பூவரி என்பது அவர் பெயர். அவர் தான் ஒரு புதிய அணுகு முறையை மேற் கொண்டார்.

ரஃப் அண்ட் ஹானர்ஸ் எனும் ஆட்டத்தி லிருந்து சில நல்ல குறிப்புக்களைத் தேர்ந்தெடுத் தார். அதன்பின் தோன்றிய ஸ்வேபர்ஸ் எனும் ஆட்டத்திலிருந்து சில நல்ல ஆட்ட முறைகளைத் தேர்ந்தெடுத்தார். இரண்டையும் ஒன்று படுத்திப் பார்த்தார். ஒரு புதிய ஆட்ட முறை வந்து பிறந்தது. புதிய ஆட்டத்தினால் பல பயன்கள் விளைந்தன.

தான் ஆடும்பொழுது ஆட்டத்தில் அனுபவித்த பல ஆட்டச்சிக்கல்களைத் தவித்தார். என்னென்ன இருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்திருந் தாரோ அத்தனை முறையையும் சேர்த்தார். சிக்கல் இல்லாத சிறப்பம்சங்கள் நிறைந்த புதிய சீட்டாட்டம் ஒன்று தோன்றியது. ஆனால் அதற்கு அவர் என்ன பெயர் இட்டார் என்பது பற்றி வரலாற்

றில் இல்லை. இருந்தாலும் பெரியல்லாத அந்த ஆட்டம் பிரபலமடையத் தொடங்கியது.

இரண்டு ஆட்டங்களின் இணைப்பும், இடையிடையே சிக்கல் ஏழாத நேர்த்தியும் புதிய ஆட்டத்தில் இருந்ததால், பல புதிய திறன் நுட்பங்களும் திறன் நுணுக்கங்களும் இடம் பெற்றுக் கொண்டன. இதனால், எப்படி வேண்டுமென்றாலும் ஞாபகமில்லாமலே கூட கவனமற்று ஆடலாம் என்று இருந்த பழையநிலைமாறி, கண்ணுங்கருத்துமாக இருந்து ஆடினால்தான் ஆட்டத்தை ஆடமுடியும் என்ற சூழ்நிலை தோன்றியது. அதனால் ஆட்டத்தின் பெயர் காட்டுத்தீயாகப் பரவி, கேட்பாரையும் கவர்ந்திழுக்கத் தொடங்கியது.

மிகவும் நுணுக்கமாக, மிகவும் தந்திரமாக, மனம் ஒன்றிய நிலையில் சிந்தித்துத்தான் ஆடவேண்டிய நிலைமை இருந்ததால், சலசலவென்று சத்தமிட்டுப் பேசிக் கொண்டு ஆடிய ஆட்டக்காரர்கள், மௌன விரதம் பூண்டவர்கள் போல, வாயடைத்துக் கொண்டு ஆடினர்.

இவ்வாறு மௌனப்படுத்திய ஆட்டத்திற்குப் பின்னாளில் வந்த பெயர் **விஸ்ட்** (Whist) என்பதாகும். விஸ்டு என்ற சொல்லுக்கு மௌனமாயிரு அல்லது அமைதியாக இரு என்பது அர்த்தமாம், ஆட்டக்காரர்களிடையே அமைதி நிலவியதால், அவர்கள் அப்படி அமைக்கத் தொடங்கியதே

நாளடைவில் விஸ்டு என்ற பெயருடன் விளங்குவ தாயிற்று.

விஸ்டு ஆட்டம் மக்களிடையே வேகமாகப் பரவியது. அன்பர்கள் ரசிகர்கள் பெருகினார்கள். ஆர்வம் ததும்பவே, அதில் அக்கறை மிகுதியாக எழ ஆரம்பித்தது. சிந்தனைகள் சிலிர்த்துக் கொண்டன. ஆட்டத்தில் நுணுக்கங்கள் நுழைந்து கொண்டன. மாற்றங்கள் வருவதை மனங்கள் விரும்பின. புதுமை விரும்பிகள் புது ஆட்டத்தை விரும்பினர்.

இப்படியாக, விஸ்டு என்ற ஆட்டம் கிளை விட்டுக் கொண்டது. ஆமாம் பிரிட்ஜ்விஸ்ட், ஆக்ஷன் பிரிட்ஜ் என்று மாறின, மேலும், கான்ட் ராக்ட் பிரிட்ஜ் என்றும் பிரிந்து வந்தது. ஆட்டத்தில் பிரிவுகள் தோன்றினவே தவிர, ஆடும் விதிகள் சரிவர ஏற்படாமல், குழப்பங்கள் தோன்ற ஆரம் பித்தன.

# 7. விழிப்புணர்ச்சியும் வளர்ச்சியும்

ஒன்றன் பின் ஒன்றாக விஸ்டு எனும் ஆட்டத்திலிருந்து பல மாதிரியான ஆட்டங்கள் தோன்றிக் கொண்டேவந்தன. அவை பிறந்த இடத்திலே பிறப்பெடுத்த நிலைமையிலே நின்று போகாமல், பாரெங்கும் பரவிக் கொண்டு பவனி வரும் வழி முறைகளைச் செய்து கொண்டு வளர்ந்தன. உற்சாகத்துடன் ஆடக்கூடிய அன்பர்களை ஒரு மித்த அளவிலும் பெற்றுக் கொண்டன.

ஆட்டத்தை மதித்து மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு ஆடிய அன்பர்களில் பலர் அறிவாளிகளாகவும் இருந்தனர். மேலும் சிலர் ஆராய்ச்சி அறிவிலும் அனுபவமிக்கவர்களாக விளங்கினர். அதனால், அவர்களின் அறிவும் ஆராய்ச்சியும் ஆட்ட வளர்ச்சியை மிகுதிப்படுத்தி விரைவான வளர்ச்சி படுத்தவும் கூடிய நோக்கத்திலேயே நிறைந்துகிடந்தன. அதன் பயனாக, 25 வகைகளுக்கு மேல் விஸ்டு ஆட்டம் கிளைவிட்டுக்கிடந்த நிலையை குழப்பமின்றி ஆடக்கூடிய தெளிவான முறைகளைத்தர வேண்டும் என்றும் முயன்றனர்.

ஆட்டங்கள் உருவானால் மட்டும் போதுமா? ஆடுகின்ற ஆட்டக்காரர்களும் ரசிகர்களும் நிறைந்து வந்தால் மட்டும் **போதுமா?** வாய் மொழியாகவே விதிகளும் முறைகளும் இருந்தால் வளர்ச்சி வருமா என்ன? ஆகவே ஏட்டில் இடம் பெறச் செய்கின்ற முறைகளும் முதன்மையான இடம் பெறத் தொடங்கின.

சீட்டாட்ட விளையாட்டைப் பற்றி, ஆட்டத்தின் ஆரம்ப நாட்களில் **காட்டன்** (Cotton) என்பவரால் எழுதப் பெற்ற நூல் ஒன்று தான் இருந்து வந்தது. அதன் பெயர் **கம்பிளீட் கேம்ஸ்டர்** (Complete Gamester) என்பதாகும். இது 1674ம் ஆண்டு எழுதப்பட்ட நூலாகும். இதில் ஆச்சரியமான செய்தி என்னவென்றால், மூளைத்திறனுடன் அதிர்ஷ்டத்தை நம்பி ஆடுகின்ற ஆட்டங்களாக உள்ள சதுரங்கம், செக்கர்ஸ், டாமினோஸ் எனும் ஆட்டங்களைப் பற்றி விரிவாக எழுதிய இந்த ஆசிரியர் ராணி எலிசபெத் விரும்பி ஆடி வளர்ச்சி பெறச் செய்த **ரஃப் அன் ஹானர்ஸ்** என்பதைப் பற்றிக் குறிப்பிடவே இல்லை.

1679 ஆண்டு **ரிச்சர்ட் சீமர்** (Richard Seymour) என்பவர் **தி கோர்ட் கேம்ஸ்டர்** (The Court Gamester) எனும் புத்தகம் ஒன்றை எழுதினார். அதில் ரஃப் அன் ஹானர்ஸ் ஆட்டம் மற்றும் ஸ்வேபர்ஸ் எனும் ஆட்டம் இரண்டிலிருந்து உருவாகித் தோன்றிய விஸ்டு ஆட்டம் பற்றி அபிப்ராயம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன், அதுபற்றிய ஆராய்ச்சிக்

குறிப்பும் இடம் பெற்றிருந்தது ஒரு மகிழ்ச்சியான விஷயமாகும்.

இரண்டு நூல்கள் ஏற்கெனவே வெளியாகி யிருந்தாலும், 1742ம் ஆண்டு தான் சீட்டாட்டம் பற்றிய முழுநூல் ஒன்று வெளிவந்தது. இதன் ஆசிரியர் **எட்மண்ட் ஹொய்லே** (Edmund Hoyle) என்பவர்.

1672ம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்த இவர், ஏறத்தாழ 97 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார். அவர் அந்தத் தள்ளாட்ட வயதிலும், சீட்டாட்டமான விஸ்டு பற்றிய முறைகளை விரிவாக அறிவதிலும் ஆராய்வதிலும் ஆனந்தம் கொண்டிருந்தார். அதற்கும் மேலாக, விஸ்டு பற்றிய விவரங்களை உலகத்தார் அறிந்திடச் செய்ய வேண்டுமென்ற லட்சியப் பிடிப்புடன் வாழ்ந்து வந்தார்.

ஹொய்லே 1742ம் ஆண்டுவரை, விஸ்டு ஆட்டத்தைக் கற்பித்துத்தரும் ஆசான் போலவே செயல்பட்டார். அதனை ஆர்வம் உள்ளவர் களுக்கு மட்டும் கற்பித்துப் பரப்புகின்ற முனைப்பி லும் அவர் முனைப்பாக இருந்து வந்தார். அவரது அனுபவங்களே இந்த நூல் எழுதும் நுணுக்கத்தை வளர்த்தன என்றால் தான் அது மிகையல்ல.

விஸ்டு ஆட்டத்திற்குரிய விதிமுறைகள் ஒரு சீறாக இல்லை எங்கு பார்த்தாலும் ஆடுகின்றவர் கள் வசதிக் கேற்பவும், வாயாடி ஆட்டக்காரர்களின்

மிரட்டலுக்கு ஏற்பவும் வளைந்து நெளிந்து கொடுத்துக் கொண்டிருந்தன விதிகள் என்று உணர்ந்தார். ஆட்ட நேரங்களில் அமைதியும் ஆனந்தமும் ஏற்படுவதற்குப்பதிலாக, அடிக்கடி குழப்பங்களும் கலவரங்களும் நேர்வதையும் கண்டார். விறுவிறுப்பான உச்சக்கட்ட நேரங்களில், வெற்றி தோல்வி நிர்ணயிக்க வேண்டிய சமயங்களில், சிக்கல் நேர்கின்ற தருணங்களில், சீர்மையுடனும் நேர்மையுடனும் தீர்த்து வைக்க வேண்டிய விதிமுறைகள் இல்லாத வெறுமை நிலைகளைக் கண்டார் ஹொய்லே...

விதிமுறைகள் பற்றிய விவாதங்கள் சங்கடங்களை ஏற்படுத்தித் தருகின்ற சர்ச்சைகள் அடிக்கடித் தோன்றிய நிலைமைகளை சமாளிக்க வேண்டுமென்றால், ஒரு புதுநூல் எழுதித்தான் தீர வேண்டும் என்ற கட்டாய நிலைக்கு உட்படுத்தப் பட்டார்.

அவர் எழுத முயற்சி செய்ததற்கும் இன்னும் ஒரு காரணம் இருந்தது. தனது நண்பர்கள், தன்னிடம் கற்றுக் கொள்கின்ற சிஷ்யர்கள், சிஷ்யர்களைப் பின்பற்றி ஆடும் அவரது நண்பர்கள், அன்பர்கள் இவர்களின் திருப்திக்காகவும் இப்படி ஒரு காரியம் செய்தாக வேண்டும் என்ற பணியை சிரமேற்கொண்டுதொடர்ந்தார்.

அவரின் அனுபவங்களும், ஆர்வ எழுச்சியால் அவ்வப்போது தோன்றிய நுண்கருத்துக்களும்

நூலாகப் பிறப்பெடுத்துக் கொண்டன. குழப்பமில்லாத விதிமுறைகளைக் கொண்டு வந்து உதவின. இவரது நூலை எல்லோரும் ஏகமனதாக, எந்தவித எதிர்ப்புமின்றி ஏற்றுக் கொண்டார்கள் என்றால், அது பாராட்டுக்குரிய படைப்புதானே.

1742ம் ஆண்டு தோன்றிய இந்த விதிமுறைகள், ஏறத்தாழ 122 ஆண்டுகள் வரையில் நடைமுறையில் இருந்து உதவின. விஸ்டு ஆட்டம் உலகமெங்கும் வளர்ந்து கொண்டே வந்தன.

1672ல் இங்கிலாந்தில் பிறந்து 1769 வரை அதாவது 97 வயது வரை வாழ்ந்த எட்மண்ட் ஹொய்லே ஒரு புது சரித்திரத்தை உண்டாக்கிப் புகழ் பெற்ற மனிதராக அமரரானார்.

ஹொய்லேவின் விதிமுறைகள் தான் உலகமெங்கும் பின்பற்றப்பட்டன. சீட்டாட்டத்தைப் பொறுத்தவரை ஹொய்லே விதிகள் உண்மையான வழிகாட்டிகளாக மேற் கொள்ளப்பட்டன.

இதற்கிடையில் பல நாடுகளிலும் சீட்டாட்டப் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. அந்த விழிப்புணர்ச்சி மேலும் பல புதிய ஆட்ட முறைகளைத் தோற்றுவிக்கின்ற அளவுக்கு உச்சக்கட்ட உணர்ச்சியைத் தந்தது.

# 8. பிரிவும் விரிவும்

சண்டை சச்சரவின்றி சீட்டு விளையாட முடியும் என்பதை சாதித்துக் காட்டுவதற்காக ஹோய்லே என்பவர் விதிமுறைகளை வகுத்து, நூலாக்கித் தந்தார். பாராட்டிப்பயன் பெற்றவர்கள் பலர். சீராட்டி வளர்த்தவர்கள் சிலர். ஆனால், அதை மாற்றிவிட வேண்டுமென்று விரும்பி முயற்சித்தவர்கள் பலர்.

அதற்காக அவர்கள் காட்டிய காரணங்களில் ஒன்று ஹோய்லே விதிமுறைகள் மிகப் பழமையான தாகி விட்டன என்பது தான். பழையன கழிதல் வேண்டும், புதியன புகுதல் வேண்டும் என்ற முறைக்காக என்று நாம் அவர்கள் முயற்சியை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இயற்கையின் வியப்பு அம்சங்களான சூரியனும் சந்திரனும் மற்றும் சில முக்கிய கோள் களுமே மாற்றம் கொண்டு வருகின்றன. என்னும் இந்த நாளில், சாதாரணமான மனிதன்

உண்டாக்கிய செயற்கை விதிகள் எத்தனை நாள் தாங்கும்?

1742ல் தோன்றிய இந்த சீட்டாட்ட விதி முறைகள் ஏறத்தாழ 122 ஆண்டுகள் தான் தாக்குப் பிடித்தன. அதற்கிடையில் தான் ஆயிர மாயிரம் கருத்துத் தூண்டுதல்கள்! சீட்டாட்டம் ஒரு சிந்தனை ஆட்டமல்லவா! இதன் செழிப்பில் சிக்கிக் கொண்ட ரசிகப் பெருமக்கள் சிந்திக்கத் தொடங்கி யதில் ஆச்சரியமில்லையே!

இப்படிப்பட்ட ஒரு சிந்தனை இயக்கம் 1950ம் ஆண்டு இங்கிலாந்திலே தோன்றியது. சீட்டாட்டத்தில் உள்ள பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த ஆட்டக்காரர்கள் ஒன்று கூடினர். ஹோய்லே விதிகள் வளர்ந்து வரும் ஆட்டத்தின் வேகத்திற்கும் வளர்ச்சிக்கும் ஈடு கொடுக்கும் அளவுக்குப் புதியனவாக இல்லை என்று கலந் துரையாடி பேசி ஒரு முடிவுக்கு வந்தனர். அதாவது புதிய விதி முறைகள் வேண்டும் என்று விரும்பினர்.

தனி ஒருவர் செய்த சாதனையான ஹோய்லே விதிமுறைகளுக்கு செழுமை தருவதாக மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டனர். இங்கிலாந்தில் உள்ள போர்ட்லேண்ட், மற்றும் ஆர்லிங்டன் என்னும் இடங்களில் இருந்த விஸ்ட் சீட்டாட்ட சங்கங்களைச் சேர்ந்த ஆட்டக் காரர்களில் சிலர் சேர்ந்து, ஒரு துணைக் குழுவை உருவாக்கினர்.

அந்தத் துணைக் குழு ஒரு அபூர்வமான பணியை மேற்கொண்டது விஸ்டு ஆட்டங்களுக்காக விதிமுறைகளைத் திருத்தி எழுதியதுடன், ஹோய்லே எழுதிய அடிப்படை விதிமுறைகளையும் கொஞ்சம் மாற்றி எழுதி புதியவடிவம் கொடுத்தது. இவ்வாறு சீட்டாட்ட வளர்ச்சிக்குப் புதிய உற்சாகம் கொடுத்தனர் இங்கிலாந்து சீட்டாட்டக்காரர்கள்.

இந்தியா தனது பங்கையும் சீட்டாட்டத்திற்குத் தந்திருக்கிறது என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா! விஸ்டு, காண்டிராக்ட் பிரிட்ஜ் என்ற ஆட்டம் போல, ஆக்ஷன் பிரிட்ஜ் என்ற ஒரு ஆட்டமும் அந்நாளில் பிரபலமாக இருந்து வந்தது. அந்த ஆக்ஷன் பிரிட்ஜ் ஆட்டம் இந்தியாவில் தான் கண்டு பிடிக்கப்பட்டு, இங்கிலாந்து நாட்டிற்குப் போனது என்பது தான் நமக்குப் பிரமிப்பு தரும் வியப்பையும், புகழையும் கொடுத்திருக்கிறது. ஆமாம்! இந்தியா ஒரு பெரிய துணைக் கண்டமல்லவா!

சீட்டாட்டம் என்றால் நான்கு பேர் இருந்து ஆடுவது தான் முறை. ஆனால் இந்த ஆக்ஜன் பிரிட்ஜ் என்ற ஆட்டம், மூன்று பேர்கள் இருந்து ஆடக் கூடியதாகும். 1937ம் ஆண்டுக்கு முன்பாக (ஆண்டு சரியாகக் குறிப்பிடப்படவில்லை) ஒரு நாள், மூன்று ஆங்கிலேய சேனைத் தலைவர்கள் கூடி சீட்டாட்டம் ஆட விரும்பிய போது

நான்காவது ஆள் கிடைக்கவில்லை, என்பதற்காக மூன்று பேராக ஒரு சில விதி முறைகளை அமைத்துக் கொண்டு ஆடினர். அதுவே ஒரு புதிய ஆட்டமாகப் பிறப்பெடுத்துக் கொண்டது.

52 சீட்டுகள் உள்ளவைதான் ஒரு கட்டு என்பதும் அதை வைத்து ஆடுவது தான் ஆட்டம் என்பதும் பழைய முறை சீட்டாட்டம் புதிய வடிவம் பெற்ற போது, 52க்குப் பதிலாக, 65 சீட்டுகள் இடம் பெற்றுக் கொண்டன.

1937ம் ஆண்டுக்குப் பிறகு 65 உள்ள சீட்டுக் கட்டுகள் பிரபலமாகின. அதற்கு நாட்டுக்கு நாடு வெவ்வேறு பெயர்கள் வந்து உதித்தன. ஐரோப்பிய நாடுகளில் இதற்கு **ராயல்ஸ்** என்பது பெயர். ஆஸ்திரேலியாவில் **கிரீன்ஸ்** அமெரிக்காவில் **ஈகின்ஸ்** என்பதும் புதிய பெயர்கள்.

இந்த 65 சீட்டுகள் உள்ள ஆட்டத்தைக் கண்டுபிடித்தவர் என்ற பெருமையைப் பெற்றவர் வியன்னா நாட்டைச் சேர்ந்த **டாக்டர் வால்தர் மார்ஷெலி** என்பவர் கண்டுபிடித்த ஆண்டு ஏறத்தாழ 1927ம் ஆண்டு என்பார்கள். இந்த ஆட்டம் ஒரு மறந்து போன ஆட்டமாக இருந்து வந்தது. மீண்டும் மறுபிறவி எடுத்துக் கொண்டது போல மக்களிடையே பிரபலமாக ஆகி விட்டது

ஆக்ஷன் பிரிட்ஜ் ஆட்டம் மூன்று பேர்கள் அடங்கிய ஆட்டம் நான்காவது ஆளுக்குள்ள

சீட்டை யார்கேட்டுப் பெறுகின்றாரோ, அவருக்குத் தந்துவிட, ஒருவரே இரண்டு ஆட்டக்காரரின் சீட்டுக்களையும் வைத்துக் கொண்டு ஆடுவதாகும்.

இப்படிப் பலதரப்பட்ட ஆட்ட விதிமுறைகளும் ஆட்ட முறைகளும் வளர்ந்து கொண்டே வந்தன. இனி எத்தனை எத்தனை ஆட்ட வகைகள் இருந்திருக்கின்றன இருந்து வருகின்றன என்பதை இனிக் காண்போம்.



# 9. சீட்டாட்டம் நம் கையில்!

சாதாரணமாகவே, சீட்டாட்டம் என்றால், பல சீட்டுக்களை வைத்துக் கொண்டு, காலத்தை வீணாக்கிக் கொண்டு ஆடிப் பொழுதைப் போக்கு கிற ஆட்டமென்று தான் நாம் நினைக்கிறோம். நமது நினைவுக்கும் மேலாக, சீட்டாட்டத்தின் பெருமை எத்தனை அளவு பெரியதாக இருக்கிற தென்று, இன்னும் ஆழ்ந்து ஆராயும் பொழுதுதான் புரிகிறது.

ஆடுகின்ற ஆட்டக்காரர்கள் சீட்டாட்டத்தை வெறுமனே ஆடி விட்டு மட்டும் போய் விட வில்லை. ஆடி முடித்த பிறகும் அதன் நினைவுடன் ஐக்கியமாகிப் போய் விட்டிருக்கின்றார்கள். அதன் காரணமாக, ஆட்டத்தினை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்றெல்லாம் சிந்தித்திருக்கின்றார்கள்.

ஒவ்வொருவரின் ஒப்பற்றச் சிந்தனையின் விளைவாக, சீட்டாட்டத்தின் விதிகளில் மெரு கேறின. அத்துடன் அல்லாமல் ஆட்டத்தில்

புதியபுதிய உத்திகள் பெருகின. அதன் விளைவாக ஆட்டம் பல ஆட்டங்களாக விரிந்தன.

இவ்வாறு உலகமெங்கும் பரவி, உயர்ந்த சிந்தனையாளர்கள் உள்ளங்களிலே உலவியதனால் விரும்பியோர்க்கெல்லாம் விரும்பிய வண்ணம் வெளிப்பட்டு, வெவ்வேறு ஆட்டங்களாகப் பிறப் பெடுத்துக் கொண்டன. அவ்வாறு ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆட்ட வகைகளாய் புதுப்பித்துக் கொண்ட சீட்டாட்டத்தின் ஒரு சில வகையினை நாம் காணும் பொழுது, நம்மையறியாமல் நமது உள்ளம் சீட்டாட்டத்தின் சிறப்புடன் தழுவிக் கொண்டு திணறுகிறது.

1. விஸ்ட் குரூப் (Whist Group)
2. ஈகர் ,, (Euchre ,, )
3. ஆல்ஃபோர் குரூப் (All Four Group)
4. பெசிகியூ குரூப் (Bezique Group)
5. ரம்மி குரூப் (Rummy Group)
6. கிரிபேஜ் குரூப் (Cribbage Group)
7. ஷோடவுன் குரூப் (Show Down Group)
8. சாலிடேர் குரூப் (Solitaire Group)
9. போகர் குரூப் (Poker Group)
10. மிசலேனியஸ் குரூப் (Miscellaneous Group)

இவற்றிலே, மிகவும் பிரபலமாக ஆடக் கூடிய நான்கு சீட்டாட்ட வகைகள், உலக நாடுகளில் அரங்கேறிக்கொண்டு வருகின்றன. அவைகள் **பிரிட்ஜ், பினாகில், போக்கர், ரம்மி** என்பவையாகும்.

ஆட்டத்தில் எத்தனை வகை இருந்தாலும் எத்தனை பிரிவுகள் திரிந்தாலும், அவைகள் எல்லாமே ஆட்டக்காரர்கள் அனைவரையும் கவர்ந்திழுக்கும் கவர்ச்சிக் கன்னிகள் போன்றவை களாகும். ஆட்டத்தில் மயங்கியவர்கள் அகிலத் தையே மறந்து போகின்றார்கள்.

அவர்கள் ஆனந்தத்தின் உச்சியில் உலவு கின்றார்களா, ஆழ்ந்த சிந்தனை வானில் சிற கடித்துப் பறக்கின்றார்களா, அல்லது போட்டியில் வெற்றிபெற வேண்டும் என்று வெறியில் புதை யுண்டு போகின்றார்களா என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டியது நமக்கு வேண்டாத வேலை யாகும்,

ஆனந்தமாகப் பொழுது போக்க நமது அறிவின் திறத்தை ஆராய்ந்து பார்க்க, சிந்திக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள சீட்டாட்டம் ஒரு சிறப்பான ஆட்டமாகும். இந்த எண்ணத்துடன் ஆடினால், இது சோற்றுக்கு உப்பாக சுவை தரும். உப்பையே சோறு என உண்ண நினைத்தால் உண்பவரின் நிலை என்ன ஆகும்? இதோ ஒரு உதாரணம்.

சீட்டாட்டத்தில் நிபுணராக விளங்கிய ஒரு ஜெர்மன் நாட்டினர், ஒரு புதிய முயற்சியை மேற் கொண்டார். அந்த முயற்சியில் அகில உலக சாதனை புரிய வேண்டும் என்ற வேட்கையுடன் ஈடுபட்டார். அதாவது, ஒரு சீட்டுக்கட்டினை எடுத்துக் கொண்டு, அதைக் கலைத்து விட்டு, பிறகு ஒரு மாதிரியான வரிசையில் அடுக்கிப் பின் மீண்டும் கலைப்பது என்பது தான் முயற்சி.

இப்படியாக அவர் ஒவ்வொரு நாளிலும் 10 மணி நேரம் அடுக்கி அடுக்கிக் கலைத்தார். ஒரு நாளைக்கு 10 மணி நேரம் என்று 20 வருஷங் களாக சீட்டுக் கட்டுடன் சேர்ந்து பணியாற்றினார். அதாவது அவர் 42,46,028 முறை கலைத்தார், சேர்த்தார், அடுக்கினார். அற்புதமான சாதனை தான்.

ஆனால் அந்தப் பெருமையை அனுபவிக்க அவரால் முடியவில்லை. ஆமாம், **லீபான்** என்ற அந்த ஜெர்மானிய சாதனை வீரர், பைத்தியமாகி விட்டார்.

சீட்டாட்டத்தை மகிழ்ச்சிக்காகப் பயன் படுத் தினால் சந்தோஷம் உண்டு. சமாதானம் உண்டு. செல்வாக்கும் செழுமையும் உண்டு. மாறாகப் பயன் படுத்தினால், லீபான் கதிதான் ஆகும் என்று எச்சரிக்க நமக்கு உரிமையிருக்கிறது. ஏனென்றால் சரித்திரம் கூறும் உண்மை அது தான்.

உண்மை தான். சீட்டாட்டம் நம் கையில் தான் இருக்கிறது. அதனை நம் மகிழ்ச்சிக்கும் மன வளர்ச்சிக்கும் பயன்படுத்திக் கொள்வோம். அதனிடம் ஆட்பட்டு அடிமையாகிப் போய்விடக் கூடாது. அப்படிப்பட்ட சபலத்தையும் சலன மனத் தையும் உடையவர்கள் இதன் பக்கமே போய்விடக் கூடாது.

மகிழச்சிக்காகத் தொடங்கப்பட்ட இந்த ஆட்டம் மனித இனத்தின் மாட்சிக்காக மட்டுமே விளங்கட்டும். இதை மாறாகப் பயன்படுத்துவோர் வாழ்வும் தாறுமாறாகப் போய்விடுவது நமது சமுதாயத்தில் சர்வ சாதாரணமாக நிகழ்கிறது என்பதை உணர்ந்து, நாம் சீட்டாட்டத்தை செட்டாகப் பயன்படுத்தி, சீராக வாழ்வோம் என்று விளையாடி மகிழ்வோமாக.





டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா அவர்கள் தமிழ் இலக்கியத்தில் விளையாட்டுத்துறை நூல்கள் அதிகமாக வெளிவர வேண்டும் என்ற முயற்சியில், இதுவரை 80க்கும் மேற்பட்ட நூல்களையும், 20க்கும் மேற்பட்ட கதை, கவிதை, நாடக நூல்களையும் எழுதி வெளியிட்டிருக்கிறார். இவர் எழுதிய 'ஒலிம்பிக் பந்தயத்தின் கதை' எனும் நூல் 1977ம் ஆண்டும், 'விளையாட்டுக்களின் கதைகள்' எனும் நூல் 1981ம் ஆண்டும் ''விளையாட்டுக்களின் வழி முறைகளும் வரலாறும்'' எனும் நூல் 1984ம் ஆண்டும் தேசிய விருதினைப் பெற்று இருக்கின்றன.

தமிழிலும், உடற்கல்வித் துறையிலும், முதுகலைப் பட்டமும், டாக்டர் பட்டமும் (M.A., M.P.Ed. Ph.D.) பெற்றுள்ள ஆசிரியர், வானொலி, டெலிவிஷன், வாரப் பத்திரிகைகளில் தொடர்ந்து விளையாட்டுத்துறை பற்றி பேசியும் எழுதியும் வருகிறார்.

தமிழில் முதன்முறையாக ''விளையாட்டுக்களஞ்சியம்'' எனும் விளையாட்டுத் துறை மாத இதழை 1977 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடத்தி பணியாற்றி வருகிறார்.

Printed at : Grace Printers, Madras - 33